தீபாவளி ரிலீஸ்!

S.P.S. பிக்சர்ஸ்
தய்வமே துணை
சனம்: K.M. கோவிந்தராஜன். ஸ்டூடியோ: பாரமவுண்ட்.
தயாரிப்பு: S.S. மஜீத். டைரக்ஷன்: Ch. நாராயணமூர்த்தி B.A.

தீபாவளி
வெளியீடு
89695
பார்த்திபன் ப்ரொடக்ஷன்ஸ் அளிக்கும்
அருணா பிலிம்ஸ்
அபலை அஞ்சுகம்
தயாரிப்பு & டைரக்ஷன்
R.M. கிருஷ்ணசாமி
மூலக்கதை:
கி.ரா.கோபாலன்
திரைக்கதை வசனம்:
A.L. நாராயணன்
RPS
சங்கீதம்:
K.V. மஹாதேவன்
பாடல்கள்:
உடுமலை நாராயணகவி · கண்ணதாசன் · மருதகாசி

நவம்பர் வெளியீடு!

பாலு புரொடக்ஷன்ஸ் அளிக்கும்

சொந்த ஊரே சொர்க்கபூமி

வசனம்: S.A. சுப்பராமன் சங்கீதம்: R. பார்த்தசாரதி B.A.

தயாரிப்பு... T. பால்ராஜ்

விபரங்களுக்கு:

பாலு புரொடக்ஷன்ஸ்,

12, கிரி ரோடு, சென்னை-17.

விரைவில் வருகிறது
மதுரம் பிக்சர்ஸ்
மீண்ட ஸ்வர்கம்
புரொட்யூஸர · T.A. துரைராஜன் B.A.B.Com
காமரா · வின்சென்ட்
சங்கீதம் · சலபதிராவ்
கலை · செல்வராஜ்
கதை · வசனம் · டைரக்ஷன்
ஸ்ரீதர்
பூரண உரிமையாளர்கள் ஓரியண்டல் பிலிம்ஸ், 19, நியூ போக் ரோடு, சென்னை-17.
ELEGANT

படம் 18

காட்சி 3

பேசும்படம்

★ நவம்பர் - 1959 ★

பொருளடக்கம்

		பக்கம்
1.	கலை உலகில் ...	6
2.	செய்திப் படங்கள் ...	9
3.	செய்திச்சுருள் ...	19
4.	கவிஞர் தந்த கடைசி பேட்டி ...	30
5.	மேகலாவின் 'குறவஞ்சி'யில் சாவித்திரி ...	34
6.	ஸ்பைடர் பிலிம்ஸ் 'குலமகள் ராதை' படத்தில் சந்தியா. ...	35
7.	'தங்கம் மனசு தங்கம்' படத்தில் பிரேம்நசீர், விஜயகுமாரி ...	36
8.	'தெய்வப்பிறவி'யில் எஸ்.எஸ்.ஆர்., எம்.என்.ராஜம்	37
9.	'கிரிநாத் புரொடக்ஷன்' முதல் படத்தில் டி. ஆர். மகாலிங்கம், எம். என். ராஜம் ...	38
10.	'இரத்தினபுரி இளவரசி'யில் ஈ. வி. சரோஜா. ...	39
11.	'ஆளுக்கொரு வீடு' படத்தில் எல். விஜயலக்ஷ்மி (இயற்கை வர்ணப் படங்கள்)	40
12.	'பாகப்பிரிவினை' கதை - வசனம் ...	41
13.	என்னுடன் நடித்த கதாநாயகிகள்	54
14.	புதிய வெளியீடுகள் ...	68
15.	மேகலாவின் 'குறவஞ்சி' (படக்காட்சிகள்) ...	73
16.	கடவுள் இருக்கிறார் ...	81
17.	நான் ரசித்த காட்சி ...	84
18.	விளம்பரம் வாழ்வு தருமா? ...	89
19.	'எங்கள் குலதேவி' (படக்காட்சிகள்) ...	97
20.	''பொன்னு விளையும் பூமி'' (படக்காட்சிகள்) ...	101
21.	ஸ்டூடியோ விஜயம் ...	105
22.	நினைத்தது ஒன்று... ...	111
23.	'பேசும் படம்' போட்டோ ஆல்பம் ...	121
24.	தபால் பெட்டி ...	129
25.	வெட்டுங்கள் வெட்டுங்கள் ...	136
26.	கேள்வி-பதில் ...	140

★ EIGHTEENTH YEAR OF PUBLICATION ★

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Publishe[d] by T. V. Ramanath, at Ramanath Press, Arcot Road, Kodambakkam Madras-24. Phone: 88728 Proprietors: Ramanath Publications Managing Editor T. V. Ramanath.

EDITORIAL & PUBLICATION OFFICES:
Arcot Road, Kodambakkam, Madras - 24.

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

Registered as a Newspaper in Ceylon.

★ கலையுலகில் ★

சேலத்தில் ஆயுதபூஜை

பிரதி வருடம் போலவே, இவ் வருடமும் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் தொழிலாளர்கள் ஆயுத பூஜையை வெகு சிறப்பாகக் கொண்டாடினர்கள். இந்த விழாவை யொட்டி நடைபெற்ற பந்தயங்களில் வெற்றி பெற்றவர்களுக்கு, ஸ்டுடியோவின் மானேஜிங் டைரக்டரான டி. ஆர். சுந்தரம் பரிசுகளை வழங்கினர். இரவு விருந்துடன் விழா கோலாகலமாக முடிவடைந்தது.

நடிகருக்கு நிதி

'சண்டிராணி' முதலிய படங்களில் நடித்த வில்லன் ஆர். நாகேஸ்வரராவ் சமீபத்தில் காலமானது நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். அவரது குடும்பத்திற்கு உதவும் பொருட்டு பி. நாகி ரெட்டியின் தலைமையில் ஒரு 'நிதிக்குழு' அமைக்கப்பட்டிருக்கிறது. எழுபத்தையாயிரம் ரூபாய்கள் வரை சேகரிப்பது என முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எம். ஜி. ஆர்., சிவாஜி கணேசன், எஸ். எஸ். ராஜேந்திரன், எஸ். வி. ரங்கராவ் மற்றும் பலர் இதற்கு நன்கொடை அளித்துள்ளனர்.

புதுமைக்கவி மறைந்தார்

சிந்தனையைக் கிளறும் வகையில் கவிதைகளில் புதுமைக் கருத்துக்களைக் கொட்டி ரசிகர்களை மகிழ்வித்து வந்த பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் சென்ற மாதம் 8-ம் தேதியன்று காலமானர். சிறிது நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்த அவரது முடிவு இவ்வளவு சீக்கிரத்தில் வந்துவிடும் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. தமிழ்ப் படவுலகுக்கு அவரது மறைவு ஈடு செய்ய

எம்.ஏ.வி. பிக்சர்ஸ் 'சிவகாமி'யில் ஜெயாவும் (இடது பக்கம்) ஜெயஸ்ரீயும் (வலது பக்கம்) இப்படிக் கவர்ச்சிகரமாக வருகிருர்கள்.

முடியாத நஷ்டமாகும். அவரது குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்கவேலுவின் 'வளர்மதி'

ஹாஸ்ய நடிகர் தங்கவேலுவின் பெண் குழந்தைக்கு விஜயதசமி யன்று வளர்மதி என்று நாமகரணம் செய்யப்பட்டது. வெகு கோலாகலமாக நடைபெற்ற இவ்விழாவில் பல நடிகர்களும், படவுலகப் பிரமுகர்களும் கலந்து கொண்டார்கள். வளர்மதியைப் போல் இந்த வளர்மதியும் வளர்ந்து, சிறப்புடன் வாழ நாமும் ஆசி கூறுகிறோம்.

சுமுகம் பிக்சர்ஸ்

ஏவி. எம்.மிலும், பாரத் புரொடக்ஷனிலும் பணியாற்றி வந்த எஸ். கிருஷ்ணமூர்த்தி சுமுகம் பிக்சர்ஸ் என்ற பெயரில் ஒரு படக் கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார். இதன் ஆரம்ப விழா சென்ற மாதம் 11-ம் தேதி யன்று நடைபெற்றது.

சீமை செல்கிறது

கெய்ரோவில் நடைபெற விருக்கும் இந்திய திரைப்பட விழாவில் கலந்து கொள்வதற்காக ''சிவகெங்கைச் சீமை'' படம் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது. கண்ணதாசன் புரொடக்ஷன்ஸார் தயாரித்திருக்கும் இப்படம் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு பகுதியை விளக்குகிறது.

பிரேம் நசீர் செல்கிறார்

சமீபகாலமாக நமது திரைப்பட நக்ஷத்திரங்கள் அயல்நாடுகளுக்குச் சென்று வருவது என்பது பெருகி விட்டது. இந்த அடிப்படையில் நடிகர் பிரேம் நசீர் ஜனவரி மாத வாக்கில் சிங்கப்பூர் செல்லத் திட்டமிட்டிருக்கிறார். அங்கிருந்து அவர் ஜப்பான் நாட்டுக்கும் செல்ல முயற்சி செய்து வருகிறார்.

சாயி சுப்புலக்ஷ்மி சகோதரிகளும் விரைவில் மலாயாவுக்கு நடனமாட செல்லப்போகிறார்கள்.



'தெய்வமே துணை'யில் கதாநாயகனாக வருகிறார் ஏ. நாகேஸ்வரராவ்

ஏ. ஆர். வி. பிக்சர்ஸ்

ஏ. ஆர். வி. பிக்சர்ஸ் முதல் தயாரிப்புக்கான ஆரம்ப பூஜை சென்ற 11-ம் தேதி யன்று நடைபெற்றது. எம். ஜி. ஆர். பிரதம பாகத்தில் நடிக்கும் இப்படத்தின் கதையை வித்வான் வே. லட்சுமணன் எழுதியிருக்கிறார். வசனங்களை சுரதா எழுதி வருகிறார்.

சபாஷ் ராமு

ஸி. எஸ். ராவ் டைரக்ஷனில் ராஜ்ஸ்ரீ பிக்சர்ஸார் வெளியிட்ட தெலுங்குப் படமொன்றை ''சபாஷ் ராமு'' என்ற பெயரில் பானு பிலிம்சார் தமிழ்ப்படுத்தி வருகிறார்கள். ஆந்திர நாட்டில் வெற்றி முரசு கொட்டிய இப்படத்தில் என். டி. ராமராவ், எம்.என். ராஜம், தேவிகா, மாலினி, கிரிஜா மற்றும் பலர் நடித்துள்ளனர். தமிழ் வசனங்களை உதயகுமாரும், பாடல்களை கு. சா, கிருஷ்ணமூர்த்தியும் எழுதி யிருக்கிறார்கள். டி.எம். இப்ராஹீம் படத்தின் இசை அமைப்பைச் செய்திருக்கிறார். இம்மாதம் வெளிவரவிருக்கும் படங்களில் இதுவும் ஒன்றாகும்.

செய்திப் படங்கள்

பிலிம் வர்த்தக சபையின் புதுக் கட்டிடம் திறப்புவிழா



போட்டோக்கள் :
டி. ஜ. சந்தாமியான்









1. புதுக்கட்டிடம். 2. கட்டிடத்தை திரு. டி. ஆர். சுந்தரம் திறந்து வைத்தார். 3. விழாவுக்கு தலைமை வகித்த திரு. முத்தையா செட்டியார். 4. விமான நிலையத்தில் அகில இந்திய பிலிம் வர்த்தக சபையின் தலைவர் அஜித்போஸ் 5. விழாவில் கலந்து கொண்டவர்கள். 6. டி. ஆர். சுந்தரம் படத்தை அஜித்போஸ் திறந்து வைத்தார். 7. தலைவர் நாகி ரெட்டியார் வரவேற்கிறார். 8. விழாவில் கலந்து கொண்டவர்கள்.



கட்டபொம்மன் நினைவுநாள் விழா







விழாவில் கலந்து கொண்ட தலைவர்கள். சிவாஜி கணேசன், ஜெமினிகணேஷ், சக்தி கிருஷ்ண சாமி, பார்த்திபன், சிவாஜி பிக்சர்ஸ் பெரியண்ணன் முதலியவர்களுக்கு திரு. யூ. கிருஷ்ண ராவ் பரிசுகள் வழங்கினார். சிவாஜி பிக்சர்ஸ் சார்பில் சிவாஜி கணேசன் பந்துலுவுக்கு பரிசு வழங்குகிறார். சிவாஜி கணேசன் நன்றி தெரிவிக்கிறார்.



1. டைரக்டர் ஸ்ரீதர் வரவேற்கிறார். பங்கு கொண்ட நடிகர், நடிகை மற்றும் பலருக்கு நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பரிசுகள் வழங்குகிறார். 2. ஜெமினி கணேஷ். 3. சரோஜாதேவி. 4. நாகேஸ்வரராவ். 5. நம்பியார். 6. விழாவுக்கு தலைமை வகித்த அஜித்போஸ் தியேட்டர்கள் சார்பில் வீனஸ் கிருஷ்ணமூர்த்தியிடம் கேடயத்தை வழங்குகிறார். 7. தங்கவேலு. 8. எஸ். டி. சுப்புலக்ஷ்மி. 9. ஸ்ரீதர். 10. காலஞ்சென்ற பலராமன் மகன் பாபு. 11. கேமிரா வின்சென்ட். 21. எலிகண்ட் பப்ளிசிட்டி சுப்பிரமணியம். 13. விழாவில் கலந்து கொண்ட திரு. நாகிரெட்டியார் வாழ்த்துக் கூறினார்.





1. திரு. சி. என். அண்ணாதுரை அளிக்கும் "கண்ணும் கண்ணும் கலந்தது" படத்தை அய்யாசாமி செட்டியார் தலைமையில் டாக்டர் மு. வரதராசனார் துவக்கிவைத்தார். 2. மகேந்திரா புரொடக்ஷன்ஸ் ஆரம்ப விழாவை சிவாஜி கணேசன் செல்வி சாந்தி துவக்கி வைத்தாள். 3-4. ஸ்புட்னிக் பிக்சர்ஸ் அளிக்கும் "விரமங்கை வேலுநாச்சியார்" ஆரம்ப விழாவை சாவித்திரி கணேஷ் துவக்கிவைத்தார். விழாவில் கலந்து கொண்டவர்கள்.







1. மூவிஆர்ட்ஸ் ஆரம்ப விழாவில் தலைவர், ஏ.எல். எஸ்.,பி. ஷர்ப்புதின், எஸ். எஸ். ஆர்., டி. வி. என். முதலானவர்கள். 2. கே. ஏ. தங்கவேலு குழந்தையின் பெயர் சூட்டு விழாவில். 3. முத்துப்பேட்டை சாமிநாதன் தயாரிக்கும் 'ராணி' புரொடக்ஷன்ஸ் முதல் தயாரிப்பு. 4. கேமிரா நிபுணர் எச். எஸ். வேணுவின் திருமணம்.

ஜுபிடர் பிக்சர்ஸார் ஏராளமான பொருட்செலவில் தயாரித்து வரும் "எல்லாரும் இந்நாட்டு மன்னர்" தமிழ்ப் படத்தில் நக்ஷத்திர நடிகர்கள் நடித்து வருகிறார்கள். டி. பிரகாஷ்ராவின் டைரக்ஷனில் வளரும் இப்படத்தின் வசனங்களை கலைஞர் மு. கருணாநிதி எழுதியிருக்கிறார். திருவள்ளுவர் இப்படத்திலே இடம் பெறுகிறார். ஏன், எதற்காக என்பதையெல்லாம் படம் திரையிடப்பட்டதும் பாருங்களேன்!





ஜுபிடர் பிக்சர்ஸ்...

எல்லாரும் இந்நாட்டு மன்னர்

தீபாவளி
வெளியீடு
கண்
திறந்தது
நீதிக்காகப் போராடிய ஒரு சிறுவனின்
உள்ளமுருக்கும் கதை
டைரக்ஷன் · K.V. சீனிவாசன்
BAKTHA
நாராயணன் கம்பெனி தயாரிப்பு

பளபளப்பான
நீண்ட கரும்
கூந்தலழகுக்கு...
இராஸ்மிக்
பர்ப்யூம்ட்
கோகனட் ஹேர் ஆயில்
இப்பொழுது அழகான இப் புதுமாதிரி சீசாவில்
ரோஜா அல்லது மல்லிகை
மணத்துடன் கிடைக்கிறது.
ERASMIC
PERFUMED
COCONUT
HAIR OIL
JASMINE
ECHO. 4A—50 TM
லண்டனிலுள்ள இராஸ்மிக் கோ. லிட்., சார்பாக

செய்திச் சுருள்

பாகப் பிரிவினை

சரவணா பிலிம்ஸ் முதல் தயாரிப்பாக வெளியிட்டிருக்கும் 'பாகப் பிரிவினை' ஒரு குடும்பச் சித்திரம். பிளவுபடும் இரு குடும்பங்கள் ஒன்றுபடும் சுவையான கதையைச் சித்தரிக்கும் இதை பீம்சிங் டைரக்ட் செய்திருக்கிறார். சிவாஜி கணேசன், எம். ஆர். ராதா, எம். என். நம்பியார், டி. எஸ். பாலய்யா, எஸ். வி. சுப்பையா, எம். வி. ராஜம்மா சரோஜாதேவி, என். லலிதா முதலியோர் நடித்திருக்கும் இதன் கதை, வசனங்களை சோலைமலை எழுதியிருக்கிறார்.

கனவு பலித்ததம்மா

சுவையான கனவு கண்டு, அது பலிக்கவும் செய்தால் யாருக்குத்தான் மகிழ்ச்சி இராது? கலைமகள் பிக்சர்ஸ் உருவாக்கி வரும் 'கனவு பலித்ததம்மா' கதை, இதன் அடிப்படையில் வளர்ந்தது. ஜாவர் சீதாராமன் இதன் கதை, வசனங்களை எழுதியுள்ளார். டி.ஆர். மகாலிங்கம், வி. ஆர். ராஜகோபால், எஸ். வி. சஹஸ்ரநாமம், ஜாவர் சீதாராமன், கள்ளபார்ட் நடராஜன், மைனாவதி, சந்திரா, கண்ணாம்பா முதலியோர் இதில் நடித்து வருகிறார்கள். எஸ். ராமநாதன் டைரக்ட் செய்து வரும் இதற்கு லிங்கப்பா இசை அமைத்து வருகிறார்.

கன்னி பிலிம்ஸ் தயாரிப்பு

மனோகர், பிரேம்நசீர், அசோகன், கண்ணன், ராஜஸ்ரீ, என். சாந்தி முதலியோர் நடிக்கும் படமொன்றை கன்னி பிலிம்சார் தயாரித்து வருகிறார்கள். இதற்கான ஆரம்ப விழா சமீபத்தில் நடைபெற்றது. வட இந்திய டைரக்டர் சந்தோஷி டைரக்ட் செய்யப்போகும் இதன் கதை, வசனங்களை ரவீந்தர் எழுதி வருகிறார்.

நாயக்கர் மகள்

'கைதியின் காதலி' படத்தைத் தயாரித்து வரும் ஏ. கே. வேலன் 'நாயக்கர் மகள்' என்ற படத்தையும் உடன் உருவாக்கத் திட்டமிட்டிருக்கிறார். சரித்திரப் பின்னணியைக் கொண்ட இப்படத்தின் வசனம், டைரக்ஷன் பொறுப்புக்களை ஏ.கே. வேலனே ஏற்றிருக்கிறார்.

சிட்டடெலில் உருவாகிறது

சிட்டடெல் ஸ்டுடியோவில் ஒலிப்பதிவாளராகப் பணியாற்றும் விமல

பானுவின் 'சபாஷ் ராமு'வில் தேவிகா, என். டி. ராமராவ்.

அமெரிக்கன் பிஸ்டல்



தானாகவே ஆறு முறை சுடும். லைசன்சு தேவையில்லை. பலமான சத்தமுடையது. ஆபத்தில் உதவும். நாடகம் சினிமாவுக்கு ஏற்றது. விலை ரூ. 8-50. வி.பி.பி. யில் ரூ. 2 தனி. (சிலோனுக்கு 4-50) கேஸும் பெல்டும் ரூ. 4-50. 25 குண்டுகள் இலவசம். ஒருபியல் ரிபேர்எண்ணை ரூ. 1. ஒரு டஜன் குண்டு ரூ. 1.

அருமையான புத்தகங்கள்

இல்லறப் படங்கள் 88 கொண்டது ரூ. 5. கொக் சாஸ்திரம் ரூ. 3. காமசூத்திரம்(படங்களுடன்) ரூ. 6. ஆண்களின் திறமை ரூ. 4. செக்ஸ் அட்லாஸ் (325 படங்கள் கொண்டது) ரூ. 5. செக்ஸ் லைப் (50 படங்கள் கொண்டது) ரூ. 4. செக்ஸ் மர்மங்கள் ரூ. 10. அழகிகள் படம் 150 ரூ. 7. ரதி சாஸ்திரம் ரூ. 3. ரகசியக் காதல் கடிதங்கள் பதிலுடன் ரூ. ரூ. 4. நவீன முறை கர்ப்பத்தடை ரூ. 4. புது மண வாழ்வு ரூ. 4.

INDRA TRADING Co
(P.M.66)
P. B. 19, Aligar. (India)

னும், வி. பி. ரங்கசாமியும் சேர்ந்து உருவாக்கியுள்ள ஆர். வி. பிக்சர்ஸின் முதல் படத்தின் படப்பிடிப்பு சிட்டடெலில் நடைபெற்று வருகிறது. நீலதுரைக்கண்ணன் கதையெழுதியுள்ளார். வசனங்களை நாஞ்சில் நாடு ராஜப்பா எழுதியிருக்கிறார். சிட்டடெல் அதிபர் ஜோசப் தனியத் ஜூனியர் காமிராவை முடுக்கி வைத்துப் படப் பிடிப்பைத் துவக்கி வைத்தார்.

பொன்னு விளையும் பூமி

ஓரியண்டல் மூவீஸ் தயாரித்து வந்த ‘பொன் விளையும் பூமி’ என்ற படத்தின் பெயர் ‘பொன்னு விளையும் பூமி’ என்று மாற்றப்பட்டிருக்கிறது. பீம்சிங் டைரக்ஷனில் வளர்ந்துவரும் இந்தப் படத்தில் பத்மினி, ஜெமினி கணேசன் இருவரும் பிரதம பாகத்தில் நடித்து வருகிறார்கள். கிராமியச் சூழ்நிலையைப் பின்னணியில் வைத்துப் பின்னப்பட்ட இதன் வசனத்தை சோலைமலை எழுதியுள்ளார்.

மூவி ஆர்ட்ஸ் படம்

புதிதாக ஆரம்பித்திருக்கும் மூவி ஆர்ட்ஸ் கம்பெனியார், பரணி ஸ்டுடியோவில், விஜயதசமி யன்று தங்கள் முதல் படத்திற்குப் பூஜை போட்டார்கள். ஆர். வி. பதி கதை, வசனம் எழுதியுள்ள இதில் எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, வி. கோபாலகிருஷ்ணன் முதலியோர் நடிக்கப் போகிறார்கள். மகேஸ்வேல் படத்தின் டைரக்டர்.

கண்ணும் கண்ணும் கலந்தது

அறிஞர் அண்ணாத்துரை கதை, வசனம் எழுதும் ‘கண்ணும் கண்ணும் கலந்தது’என்ற கதையை கலைவாணர் பிக்சர்ஸார் தங்களது முதல் தயாரிப்பாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் ஆரம்ப விழா சென்ற மாதம் 12-ம் தேதியன்று பாரமவுண்டில் நடைபெற்றது. தமிழறிஞர் மு. வரதராசனார் காமிராவை முடுக்கி வைத்தார். கே. ஆர். ராமசாமி, எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, வி. ஆர். ராஜகோபால், எம். என். ராஜம், விஜயகுமாரி, மனோரமா முதலியோர் இதில் நடிப்பார்கள்.



நமது கைத்தறிகள்

பல நூற்றாண்டுகளாக இந்தியப் பொருளாதார அமைப்பில் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கை முறையை கைத்தறிகள் வகுத்துத் தந்துள்ளன. சுமார் 70 லட்சம் நெசவாளிகளுக்கு வேலை வாய்ப்பு அளித்து இன்று இந்தியாவின் குடிசைத் தொழில்களில் மிகச் சிறந்ததாக விளங்கி வருகிறது. தங்களுடைய தேர்ச்சி, ஒப்பில்லாத வேலைத் திறனால் அந்நெசவாளிகள் அழகிய ஆடைகள் உற்பத்தி செய்யும் துறையில் இந்தியாவின் மங்காது வளர்ந்து வரும் கலைத் திறனின் புகழை நிலை நிறுத்தி வருகின்றனர்

இந்தியப் பொருளாதாரத்தின்
இன்றியமையாத ஓர் அம்சம்

அகில இந்தியக் கைத்தறி போர்டு
தபால் பை நம்பர் 10004,
பம்பாய்-1

DA 59-237



மகேந்திராவின் முதல் படம்

விஜயதசமி யன்று பூஜை போடப் பட்ட மகேந்திரா புரொடக்ஷன்ஸாரின் முதல் தயாரிப்புக்கு ரா. வே. கதை, வசனம் எழுதி வருகிறார். சிவாஜி கணேசன், சாவித்திரி, சந்திரபாபு மற்றும் பலர் நடிக்கும் இதன் டைரக்ஷன் பொறுப்பை ஏ. சுப்பாராவ் ஏற்றிருக்கிறார்.

வீரமங்கை வேலு நாச்சியார்

பண்டரிபாய் பிரதம பாகத்தில் நடிக்கும் 'வீரமங்கை வேலு நாச்சியார்' படத்தை ஸ்புட்னிக் பிக்சர்ஸார் தயாரித்து வருகிறார்கள். இதன் ஆரம்பவிழா சரவணாபிலிம்ஸ் உரிமையாளர் வேலுமணியின் தலைமையில், விஜயதசமி தினம் நடைபெற்றது. சாவித்திரி காமிராவை முடுக்கி வைத்தார். வெள்ளையனின் ஆதிக்கத்தை எதிர்த்து சுதந்திரப் போர் நடத்திய வரலாற்றுக் கதையை இப்படம் சொல்லுகிறது. முத்து கிருஷ்ணன், அசோகன், கண்ணன், சாந்தி மற்றும் பலர் நடிக்கும் இதன் திரைக்கதை, வசனத்தை பிரம்மம் எழுதியிருக்கிறார்.

'அழகர் மலைக்கள்வன்' படத்தில் சந்திரா கே. எஸ். ரெட்டி.

வீட்டில் சினிமா புரொஜக்டர்



இந்த சினிமா புரொஜக்டரைக் கொண்டு உங்கள் வீட்டிலேயே நண்பர்களுக்கும் சினிமாவைக் காட்டி மகிழலாம். இதை மின்சாரம் (ஏ. ஸி. அல்லது டி. ஸி.) அல்லது பாட்டரி விளக்கினால் இருக்கலாம். 35. மி. மீ. பிலிமில் 4'X4' உள்ள திரையில், வித வித வர்ணங்களில், முழுச் சலனத்தோடு படங்களைப் பார்க்கலாம். ஒவ்வொரு புரொஜக்டருடனும் 10 கெஜம் பிலிமும் படங்கள் கொண்ட விளக்கப் புத்தகமும் இனாம். ஸ்பெஷல் (டீலக்ஸ்) மாடல் விலை ரூ. 15.50 வி. பி. பி. சார்ஜுகள் ரூ. 4.50. தனியே ஒவ்வொரு கெஜம் பிலிம் விலை 25 நயே பைசே. திரை ரூ. 3.

Anand Industries
Mandi Ramdas, Mathura.

எல்லாம் தெரிந்த மனிதன்

ஜி. விஸ்வநாத் டைரக்ஷனில் ஒளிப்பதிவாளர் ஜே. ஜி. விஜயம் 'எல்லாம் தெரிந்த மனிதன்' என்ற படத்தை ஆரம்பித்திருக்கிறார். ரவீந்தர் இதற்கான கதை, வசனத்தை எழுதி வருகிறார்.

வெங்கடேஷ் பிலிம்ஸ் படம்

கே. ஜி. இராதாமணாளன் கதை, வசனம் எழுதியுள்ள படத்தை வெங்கடேஷ் பிலிம்சார் தங்கள் முதல் தயாரிப்பாக உருவாக்கப் போகிறார்கள். இதன் ஆரம்ப விழா சென்ற மாதம் 11-ம் தேதி நடைபெற்றது. பாலாஜி, வி. ஆர். ராஜகோபால், மாலினி, ராஜசுலோசனா, மனோரமா முதலியோர் நடிக்கும் இப்படத்தின் இசைஅமைப்பை ஏ. எம். ராஜா ஏற்றிருக்கிறார். பக்தா டைரக்ட் செய்வார்.

திரை உலகில் ஒரு திருப்பம்

அறிஞர் தமிழ்வாணன் தரும்

ஊஞ்சல் மனம்

நடிகர்கள் அனைவரும் நல்ல புது மாணிக்கங்கள்

பாடல்கள்
திருச்சி தியாகராசன் + ஸ்டுடியோ பிலிம் சென்டர்

தயாரிப்பு - டைரக்ஷன்
எம்.ஏ.அலிகான்

அலிகான் புரடக்ஷன்ஸ் சென்னை-24

தொடர்ந்து... உருவாகிறது

அண்ணன் மகன்

கங்காவின் படம்

'பேதர்த் ஜமானு' என்ற ஹிந்திப் படத்தைத் தழுவி கங்கா புரொடக்ஷன்ஸார் தமிழில் ஒரு படத்தைத் தயாரிக்க முன் வந்திருக்கிருர்கள். இதற்கான தமிழ் வசனங்களை வித்வான் வே. லட்சுமணன் எழுதி வருகிருர். கே. வேம்பு டைரக்ஷனில் வளரும் இதன் ஆரம்ப விழா சமீபத்தில் நடைபெற்றது.

பொக்கிஷம்

ஸ்ரீமகள் பிக்சர்ஸார் 'பொக்கிஷம்' என்ற படத்தைத் தயாரிக்க முன் வந்திருக்கின்றனர். சென்ற மாதம் 11-ம் தேதியன்று நெப்டியூனில் நடைபெற்ற இதன் ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு, காமிராவை முடுக்கி வைத்தார் டி. எஸ். பாலய்யா. கே. வேம்பு டைரக்ட் செய்யும் இதன் வசனங்களை அமுதன் எழுதியிருக்கிருர்.

ஏ. ஆர். சி. வி. யின் படம்

திருவாங்கூர் சகோதரிகளிடம் மானேஜராகப் பணியாற்றிய எஸ். ஜே. வல்லபன், ஏ. ஆர். சி. வி. பிக்சர்ஸ் என்ற படக் கம்பெனியை ஆரம்பித்துள்ளார். இதன் சார்பில் தயாரிக்க விருக்கும் தமிழ்ப் படத்தின் ஆரம்பபூஜை சமீபத்தில் நடைபெற்றது.

ஊஞ்சல் மனம்

முற்றிலும் புதிய முகங்களை நடிக்க வைத்து 'ஊஞ்சல் மனம்' என்ற படத்தை அலிகான் புரொடக்ஷன்ஸார் தயாரித்து வருகிருர்கள். தமிழ்வாணன் கதை, வசனம் எழுதியுள்ள இதன் டைரக்ஷன் பொறுப்பை தயாரிப்பாளரான அலிகான் ஏற்றுள்ளார்.

எம். ஆர். ஜே.யின் முதல் படம்

டி. ஆர். மகாலிங்கம், பிரேம்நசீர், அசோகன், விஜயலட்சுமி முதலியோரைக் கொண்ட தமிழ்ப் படமொன்றை எம். ஆர். ஜே. பிக்சர்ஸார் தயாரித்து வருகிருர்கள். சோலைமலை வசனம் எழுதியுள்ள இப்படக் கதை தேயிலைத் தோட்டத் தொழிலாளியைப் பின்னணியில் வைத்துப் பின்னப்பட்டது. வி. ஸ்ரீநிவாசன் படத்தை டைரக்ட் செய்கிருர்.

ராக் என் ரோல்

'கண்ணின் மணிகள்' படத்தை வெளியிட்ட டைரக்டர் டி. ஜானகிராம் 'ராக்-என்-ரோல்' என்ற படத்தைத் தயாரிக்கப் போகிருர். ராக்-என்-ரோல் போன்ற நடனங்கள் நம் நாட்டுப் பண்புக்குப் பொருந்தாது என்ற கருத்தை இப்படக் கதைக் கொண்டிருக்கும். சந்திரா இதில் கதாநாயகியாக

வாணி தமிழ் - இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும் கடிதங்கள் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம். விலை ரூ. 5. வி. பி. செலவு ரூ. 1-4-0.

வாணி தமிழ்-இந்தி ஆசான் : தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றி தானே சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக கொள்ளலாம். விலை ரூ. 2-4-0. வி. பி. செலவு 0-12-0.

தையல் கலை : இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானுலும் பிறர் உதவி இல்லாமல் தானே தையல் வேலையைச் சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 3. வி. பி. செலவு ரூ. 1.

வாணி புக் டிப்போ, தபால் பெட்டி 239, சென்னை-1.

நடிக்கிருர். மற்றும் கெய்ரோவிலிருந்தும் ஒரு நடிகை இப் படத்தில் நடிக்க அழைக்கப்பட்டிருக்கிருர். இப்படத்தின் சம்பவங்கள் அனைத்தும் வெளிப்புறக் காட்சிகளாகவே எடுக்கப்படும்.

அம்பாள் டாக்கீ டிஸ்டிரிபியூட்டர்ஸ் தயாரித்து வரும் 'மதிவாணன்' படத்தில் டி. ஆர். மகாலிங்கம் பிரதம பாகத்தில் நடிக்கிருர்.

சுதர்சனத்தின் இரண்டாவது

'அவள் யார்' படத்தைத் தொடர்ந்து ஒரு சமூக ஹாஸ்யப் படத்தை சுதர்சனம் பிக்சர்ஸார் தயாரிக்கப் போகிருர்கள். ஜெமினி கணேசன் பிரதம பாகத்தில் நடிக்கும் இதை கே. ஜெ. மகாதேவன் டைரக்ட் செய்வார்.

மரணத்தை வென்ற மனிதன்

ஸி. பி. புரொடக்ஷன்ஸ் தயாரித்து வரும் படத்திற்கு 'மரணத்தை வென்ற மனிதன்' என்று பெயர் தரப் பட்டிருக்கிறது. கே. எஸ். கோபாலகிருஷ்ணன் கதை, வசனமெழுதியுள்ள இந்தப் படத்தை ஸி. புல்லய்யா டைரக்ட் செய்து வருகிருர். சௌகார் ஜானகி, சுந்தரிபாய், தங்கவேலு. ரங்கராவ், நரசிம்மபாரதி, ஸி. எஸ். பாண்டியன், பி. டி. சம்பந்தம் முதலியோர் நடிக்கும் இந்தப் படம் விஜயா ஸ்டுடியோவில் தயாராகி வருகிறது.

குழந்தைகள் கண்ட குடியரசு

விந்தன் வசனமெழுதிவரும் 'குழந்தைகள் கண்ட குடியரசு' என்ற படத்தை பத்மினி பிக்சர்ஸார் தயாரித்து வருகிருர்கள். பி. ஆர். பந்துலு டைரக்ட் செய்து வரும் இப்படக் கதையை மராட்டிய எழுத்தாளர் தாதா மிராசி எழுதி யிருக்கிருர். பரணி ஸ்டுடியோவில் தயாராகி வரும் இக்குழந்தைகள் படத்திற்கு லிங்கப்பா இசை அமைத்து வருகிருர்,

மகாலக்ஷ்மி

நடிகை பண்டரிபாய் சொந்தத்தில் தயாரித்து வரும் படத்திற்கு 'மகாலக்ஷ்மி' என்று பெயர் தரப்பட்டிருக்கிறது. ம. ரா. வசனமெழுதும் இப்படத்தின் கதையை ஜி. வி. ஐயர் எழுதியிருக்கிருர். தயாரிப்பாளரான பண்டரிபாயுடன், மைனுவதி, எஸ். என். லக்ஷ்மி, பாலாஜி, பாலய்யா, மனேகர், வி. ஆர். ராஜகோபால், எஸ். வி. சுப்பய்யா மற்றும் பலர் இதில் நடித்து வருகிருர்கள்.

ஏழைக்கு வந்த வாழ்வு

ஜுபிலி கா பிலிம்சார், மஸ்தான் டைரக்ஷனில் தயாரித்துவரும் படத்திற்கு 'ஏழைக்கு வந்த வாழ்வு' என்று பெயர் தந்திருக்கின்றனர். பிரேம்நசீர், பிரேம் நவாஸ், வி. ஆர். ராஜகோபால், எம். என். ராஜம் முதலியோர் நடிக்கும் இதன் கதை, வசனங்களை ஜாவர் சீதாராமன் எழுதியிருக்கிருர். மதராஸ் ஸ்டுடியோவில் படம் தயாராகி வருகிறது.

பார் பார் பட்டணம் பார் !

'பார் பார் பட்டணம் பார்' என்ற தலைப்பில் கவுண்டர் பிலிம்சார் ஒரு படத்தை உருவாக்கி வருகிருர்கள். மகாலிங்கம் - மாலினி பிரதம பாகங்களில் நடிக்கும் இந்தப் படத்தை, 'நாடோடி மன்னன்' படத்தின் எடிடராகப்பணியாற்றிய பெருமாள் டைரக்ட் செய்து வருகிருர். எம். எஸ். கண்ணன் படத்தின் கதை, வசனங்களை எழுதியிருக்கிருர்.

தந்திகள் டெலிபோன் மூலம் துரிதமாக பட்டுவாடா செய்யப்படுகிறது

தந்திகளை விலாசதாரரின் டெலிபோன் நெம்பருக்கு* விலாசமிட்டு அனுப்புங்கள்.

பானர்ஜி
**டெ. நெ. 31670*
புது டில்லி

தந்தி ஆபீசிற்கு இத் தந்தி கிடைத்தவுடன் தந்தியின் செய்தியை டெலிபோன்மூலம் அவருக்கு அறிவிக்கப்படும். தந்தி சேவகர் மூலம் பட்டுவாடா செய்ய ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கலாம்.

இது உங்களுக்கு மலிவானதும் கூட—டெ. நெ. 31670 என்பது ஒரு வார்த்தையாக கணக்கிடப்படும்.

இந்த வசதி உள்ளூர் டெலிபோன் சர்விஸ் உள்ள இடங்களில் கிடைக்கும்.

தந்திச் செய்தியின் ஒரு நகல் அதேதினம் முதல் தபால் பட்டுவாடாவில் அனுப்பி வைக்கப்படும்.

உங்கள் தந்தியை டெலிபோன் மூலம் பெறுங்கள்

தந்தி அனுப்புபவர் 'உங்கள் டெலிபோன் நெம்பரை குறிப்பிடா விட்டாலும்' சில நகரங்களில் உங்கள் தந்திகளை நீங்கள் அடையலாம். தந்தி ஆபீசில் உங்கள் டெலிபோன் நெம்பரை ரிஜிஸ்டர் செய்துகொள்ளுங்கள். பிறகு உங்களுக்கான எல்லா தந்திகளும் டெலிபோன் மூலம் அறிவிக்கப்படும். தந்திச் செய்தியின் நகல் ஒன்றும் உடன் அனுப்பிவைக்கப்படும். ஆக்ரா. அஹமதாபாத், அலஹாபாத், அமிர்தசரஸ், பெங்களூர். பம்பாய், கல்கத்தா, கோயம்புத்தூர். டில்லி, இந்தூர், கான்பூர், சென்னை. நாகபுரி, புதுடில்லி, சேலம் மற்றும் செகந்திராபாத் முதலிய இடங்களில் இவ் வசதி கிடைக்கும்.

உங்களுக்கு சிறந்த முறையில் சேவை செய்ய எங்களுக்கு உதவுங்கள்

தபால் மற்றும் தந்தி இலாகா

DA-59/193

நட்சத்திரங்களின் நவராத்திரி



நமது சினிமா நட்சத்திரங்களுக்கு நவராத்திரிக் கொலுவிலும் மற்றவர்களைப் போலவே ஆர்வ மிருக்கிறது; இங்கே பாருங்கள். 1. டி. ஆர். ராமச்சந்திரன். 2. இ. வி. சரோஜா. 3. பானுமதி. 4. கமலா லக்ஷ்மண் முதலியவர்கள் கொலு வைத்திருந்தனர்.

போட்டோ : டி. ஐ. சந்தாமிபான்.

'விதியென்னும் குழந்தை கையில் உலகந்தன்னை
விளையாடக் கொடுத்துவிட்டாள் இயற்கையன்னை—அது
விட்டெறியும் உருட்டிவிடும் மனிதர் வாழ்வை
மேல் கீழாய்ப் புரட்டிவிடும் வியந்திடாதே'

'பட்டுக்கோட்டை'

தமிழுடன் விளையாட ஆரம்பித்து விட்டார்
தமிழகம் கண்ட புதுமைக் கவிஞர்.

கவிஞர் தந்த கடைசி பேட்டி

இதற்குமுன் தமிழ் கூறும் நல்லுலகில் எத்தனை யெத்தனையோ கவிஞர்கள் பிறந்திருக்கிருர்கள். நமது வாழ் நாளில் தோன்றியவர்களில் தலை சிறந்த பிறவிக் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். அவ்வப்போது அவருள்ளத்தில் அலை மோதித் தெளிந்த பல கருத்துக்களின் தொகுப்பு இது. மனதைத் திறந்து அவர் சொன்னவை இம் முத்து மொழிகள். இவைகளை நாம் கேட்ட போது "இதுவே அவரது கடைசிப் பேட்டி" என்பதை மட்டும் அறியாமல் போனேம்!

இரவு பத்து மணி இருக்கும். வர்ண விளக்குகள் ஆங் காங்கே இந்திர ஜாலம் புரிந்து கொண்டிருக்கவிஜயாகார்டனில், வீனஸ் பிக்சர்ஸ் 'கல்யாண பரிசு' வெள்ளி விழாவில் விருந் துக்குப் பிறகு நான் ஓரிடத்தில் அமர்ந்திருந்தேன். சாப்பாட்டை முடித்து விட்டு, தாம்பூலத்தை குதப்பியபடி பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எனக்கு சிறிது தூரத்தில் நின்றிருந்தார். நான் அவரை அழைத்தேன். என்னரு கில் வந்து உட்கார்ந்து கொண்ட அவர், "உங்களை நானே பார்க்க வேண்டும் என்று நினைத்தேன்" என்ருர் சிரித்துக் கொண்டே.

"என்ன விஷயம்?" என்று கேட்டேன்.

"கவிஞன் என்பவன், பல்வேறு இசைக்கருவிகளை வைத்து சங்கீ தத்தை உண்டாக்கும் கலைஞரைப் போல,வார்த்தைகளைப்பொறுக்கி எழுதுபவனு?" என்று அவர் என்னிடம் கேட்டார்.

கவிஞர் கேட்ட கேள்வி என்னைத் திடுக்கிட வைத்தது! அதுவும் சாதாரணக் கவிஞரா அவர்!

"எனக்குப் புரியாத ஒன்றைக் கேட்கிறீர்கள்- என்னைப் பொறுத்த வரை கவிதை என்பது இதயத்தில் சுரந்து, எண்ணத்தில் மிதந்து வருவது. சொற்களைக் கண்டுபிடித்துப் போட்டு கவிதை எழுதினல் அது கவிதை ஆகாது!" என்றேன்.

"இதை நமது சங்கீத டைரக் டர்கள் ஏன் உணருவதில்லை? மெட்டமைக்க அவர்களுக்கு நமது கவிதை ஏற்றதாக இல்லா விட்டால், மெட்டை மாற்றுவ தற்குப் பதில் ஏன் கவிதையை மாற்றச் சொல்கிருர்கள்? அதற் காகச் சொற்களை எப்படிப் பொறுக்கிப் போட வரும்?" என் ருர் கவிஞர். "உண்மைதான்!" என்றேன் நான்.

"இங்கு இதுமட்டுமல்ல! நடி கர்கள் கூட கவிதைகளில்:கை

வைத்து விடுகிறுர்கள். ஒரு பெரிய தயாரிப்பாளருக்காக நான் பாட்டொன்று எழுதினேன். அதில் வரும் கவிதையை ஹாஸ்ய நடிகர் சொல்படி மாற்றி விட்டார் தயாரிப்பாளர். நடிகர்கள் தங்கள் கருத்தைச் சொல்லலாமே தவிர, பாட்டை மாற்றுவது கூடாது என்பது என் அபிப்பிராயம். அப்படிப் பார்க்கப் போனுல் கவிஞர்களும் நடிகர்களைப் பற்றிக் குறைகூற இடம் ஏற்படும்'' என்ருர் பட்டுக்கோட்டை.

''எப்படி?'' என்றேன்.

''கவிதையில் வரும் சொற்களின் ஆழத்தையும் நயத்தையும் பொருளையும் உணர்ந்து எத்தனை நடிகர்கள் பாடி, நடிக்கிருர்கள்? அதேபோல் நடனத்தையும் பாவத்துடன் உணர்ந்து யார் ஆடுகிருர்கள்? நடிகைகள் காட்டும் அபிநயத்துக்கும் பாட்டுக்கும் அநேகமாகப் பொருத்தம் காணவே முடியாது. இதே போல் பாட்டு ஒரு பங்கு என்ருல் அதற்கான இசை இரண்டு பங்காக இருக்கக்கூடாது! நான் சமீபத்தில் 'காவடி சிந்து மெட்டில்' ஒரு ஸ்டுடியோ முதலாளியின் படத்திற்கு பாட்டெழுதிக் கொடுத்தேன். அதில் பாட்டில் முக்கால் பகுதியை நீக்கிவிட்டு, மற்ற பகுதிக்கு வெறும் இசையை இணைத்திருக்கிருர்கள். இம்மாதிரி செய்வதையும் நான் மனதார வெறுக்கிறேன். இதனுல் கவிஞனுக்கு ஏற்படும் உற்சாகத்தையும் குலைத்து விடுகிருர்கள்'' என்று சொன்னுர் 'கவிஞர் திலகம்'.

''இதை யெல்லாம் மனதுக்குள் போட்டுப் புழுங்கிக்கொள்ள நான் விரும்பவில்லை. இதை அப்படியே ஒரு கட்டுரையாக வடித்துத் தருகிறேன். உங்கள் வரப்போகும் இதழில் போட்டு விடுங்கள்'' என்ருர் கவிஞர்.

''நிச்சயமாகச் செய்வோம். ஆனுல் உங்களிடமிருந்து கட்டுரை வருவதுதான் சிக்கிரத்தில் நடக்காத காரியமாயிற்றே!'' என்றேன்.

''இம்முறை அப்படியாகாது என்று நினைக்கிறேன். அப்படி ஒருக்கால் ஏதேனும் தடை ஏற்பட்டு விட்டால் இதை 'பேட்டி' என்ற வகையில் உங்கள் பத்திரிகையில் வெளியிட்டு விடுங்கள்!'' என்ருர்.

''கட்டுரையாகவே வரும் என்று நினைக்கிறேன்'' என்றேன் சிரித்தபடி. ''எனக்கு இரண்டும் ஒன்றுதான்!'' என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டார் கவிஞர்.

'தடை ஏற்பட்டு விட்டால்' என்று கவிஞர் சொன்னதன் உருவம் 'கவிஞரையே இழந்துவிடும் நிலைக்கு வரும்' என்று அப்போது நான் எண்ணவில்லை. அதேபோல் இதுவே அவரது 'கடைசிப் பேட்டி' யாக அமைந்துவிடும் என்றும் எதிர்பார்க்க வில்லை.

விண்ணும் மண்ணும் நீயானுய்
வெயிலும் மழையும் நீயானுய்
விளங்கும் அகில உலகமீது
நீயில்லாத இடம் ஏது?

என்று கவிஞர் பாடிய கடவுளே அவரை அழைத்துச் சென்று விட்டான். அவரது பிரிவு உண்மையிலேயே புதுமைபூத்து வரும் இளைஞர் சமுதாயத்தின் எழுச்சிக்கு மகத்தானதொரு நஷ்டம்.

கவிஞர் தன் கவிதையின் வாயிலாகக் கூறியவை அனைத்தும் உலகத்தைப் பார்த்து எழுதிய நடைமுறைச் செயல்கள். அவர் சொன்ன கருத்துக்கள் ஒவ்வொன்றும் விலைமதிப்பற்றவை.

'கேவலம் சினிமாப் பாட்டுகள் தானே?' என்று இருந்த 'பெரிய இடத்து வட்டாரங்களில்' கூட பட்டுக்கோட்டையின் பாடல்கள் செவியை சற்று இழுத்துப் பிடிக்க வைத்து, சினிமாவுக்குநற் பெயரைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றன.

பட்டுக்கோட்டையாரின் கருத்துக்களை அனைவரும் கவனிக்க வேண்டியது அவர்களது கடமை எனக் கருதுகிறோம்.

சொல்லுறதைச் சொல்லிப்புட்டேன்
செய்யறதைச் செஞ்சிடுங்க
நல்லதுன்னு கேட்டுக்குங்க
கெட்டதுன்னு விட்டுடுங்க

என்ற அவரது பாட்டையே இக் கட்டுரைக்கும் முத்தாய்ப்பாக வைத்து விடுகிறேன். ★

தீபாவளித்
திருவிளக்கோ...
...சுடர்விளக்கின் ஒளியினுக்கே சோபையூட்டும்
கலைவிளக்கோ, பத்தரைமாற்றுப் பசும்பொன்னோ என
மின்னும் வைஜயந்திமாலாவின் மேனி
யெழிலைப் பராமரிப்பது...
LUX
TOILET SOAP
தூய, வெண்மையான
லக்ஸ் டாய்லெட் சோப்
சினிமா நட்சத்திரங்களின் அழகுசாதன சோப்

இங்கே ஜோடி மாறிவிட்டது! எஸ். எஸ். ராஜேந்திரனும் எம். என். ராஜமும் கமால் சகோதரர்களின் ''தெய்வப் பிறவி'' தமிழ்ப் படத்தில் ஜோடி சேர்ந்து நடித்து வருகிறார்கள்.

இந்த அன்புக் காதலர்களின் நான்கு கண்களையும் ஆகர்ஷித்திருக்கும் அந்தப் பொருள் எதுவாக இருக்கும்? — கிரிநாத் புரொடக்‌ஷன்ஸ் தயாரித்து வரும் முதல் படத்தில் டி. ஆர். மகாலிங்கம், எம். என். ராஜம்.

"அன்பின் உருவமே! பிறர் வேதனைப்பட்டால் உன் மனம் வேகுமே! என் 'வேதனை உன் கண்களுக்குத் தென்படவில்லையா?'' என்று போதிசத்வரிடம் கேட்கிறாரா இ.வி. சரோஜா?—விநாயகாவின் ''இரத்தினபுரி இளவரசி'யில்.

இளம் நாட்டிய நடிகை எல். விஜயலக்ஷ்மி, பி. என். பிள்ளையின் சுபாஷ் மூவிசார் வேகமாகத் தயாரித்து வரும் ''ஆளுக்கொரு வீடு'' தமிழ்ப் படத்தில் இப்படித் தோன்றுகிறுர்.

சரவணா பிலிம்ஸ்

பாகப் பிரிவினை

திரைக்கதை வசனம்

அறிமுகம்

சுந்தரலிங்கமும் வைத்தியலிங்கமும் கூடப் பிறந்தவர்கள். வைத்தியலிங்கம்தான் மூத்தவர். அன்பே உருவான உத்தமர் அவர். ஆனல் அவர் மனைவி அகிலாண்டமோ ரொம்பவும் வாய்த்துடுக்கு கொண்டவள். அவளிடம் யாவருக்கும் நடுக்கம். அவர்களுக்குப் பிள்ளைப்பேறு கிடையாது. சுந்தரலிங்கம் மிகவும் நல்லவர். அவர் மனைவி மீனுக்ஷி அவரைவிட நல்லவள். இந்த தம்பதிகளுக்கு கன்னையன், மணி என்ற இரு குமாரர்களுண்டு. கன்னையன் முடவன். வீட்டோடு இருக்கிருன். மணி சென்னை கல்லூரியிலே படிக்கிருன்.

காட்சி 1

வைத்தியின் வேண்டுதல்

அன்று பொங்கல் திருநாள். மணி தவிர, மற்றவர்கள் யாவரும் இருக்கிருர்கள். அது விவசாயக் குடும்பமானதால் விழாவை விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. குடும்பத்திற்குப் பெரியவரான வைத்தியலிங்கம் கடவுளை வேண்டுகிருர்.

வைத் : கடவுளே ... இந்த வருஷம் பொங்கலுக்கு என் தம்பி மகன் மணியில்லே...பட்டணத்தில் படிச்சுக்கிட்டு இருக்கான். தலைமுறை தலைமுறையா இந்தக் குடும்பம் ஒத்துமையா இருக்கிற மாதிரி என்னைக்கும் என் தம்பி பசங்க ரெண்டு பேரும் ஒத்துமையா இருக்கணும். அடுத்த வருஷம் பொங்கலுக்கு இரண்டு மருமகளோட பொங்கலிடணும். ஆனு அப்போ ரெட்டைப் பானையில்லே...அஞ்சு பானையோட பொங்கலிடணும்.

காட்சி 2

பொன்னியின் கருணை

மீனுட்சி சந்தைக்குச் சென்று திரும்பும்போது பொன்னி என்ற அனுதைப் பெண்ணை ஆதரிக்கும் நோக்கத்தோடு அழைத்து வருகிருள். அகிலாண்டம் யாவரையும் அலக்ஷியப்படுத்துகிருள். குறிப்பாக கன்னையனை கேவலமாகப் பேசுகிருள். பொன்னிக்கு கன்னையனிடம் கருணை பிறக்கிறது. மீனுட்சியிடம் அவனைப்பற்றி விசாரிக்கிருள்.

பொன் : ஆமா பெத்த மனசு எப்படியம்மா கேக்கும்? ஆமா...அடி

பாத்திரங்கள்

சிவாஜி கணேசன்	கன்னையன்
எம். என். நம்பியார்	மணி
எம். ஆர். ராதா	சிங்காரம்
சரோஜாதேவி	பொன்னி
என். லலிதா	அமுதா

கதை, வசனம் :

சோலைமலை

டைரக்ஷன் :

ஏ. பீம்சிங்

பொறக்கும் போதே இவர் இப்படித் தான் பொறந்தாரா?

மீனு : இது அவன் பிறவியில்லேம்மா. ...கன்னையன் பொறக்கறபோது பலர் கண்ணே படும்படி அழகாத்தான் இருந் தான். பொங்கி பூரிச்சிருந்த எங்க நெஞ்சிலே தீராத வேதனையுண்டாக்க அவனுக்கு ஏழாவது வயசு வந்திச்சு. மின்சாரக் கம்பியிலே சிக்கிக்கிட்ட பட் டத்தை எடுக்கும்போது மின்சாரம் தாக்கிதானம்மா. அவனுக்கு இந்த கதி வந்திடுச்சி, நாலு அஞ்சு வருஷமா நாங்களும் செய்யாத வைத்தியமில்லே.

பொன் : அய்யோ பாவம், கேக்கவே பரிதாபமா இருக்கு. மின்சாரம் தாக்கி யாம்மா அவருக்கு இந்த நிலே?

மீனு : ஊருக்கு வெளிச்சத்தை கொடுக்க வந்த மின்சாரம் எங்க குடும் பத்தை இருட்டாக்கிடுச்சு.

கன : பாத்தியா பொன்னி! எனக்கு கைகால் விளங்காம போனதுக்கு அம்மா மின்சாரத்தை குறைகூறுறுங்க. ஊருக்கு நல்ல காரியம் ஏற்படும்போது யாராவது சில பேர் பாதிக்கப்படத்தான் செய்வாங்க. இப்ப அந்த ரயில் இருக்கு பாரு, அது செவனேன்னு ஓடிக்கிட் டிருக்கு. என்னைக்காவது திடீர்ன்னு கீழே விழுந்திடுது. அதுக்காக ரயில் லியே ஏறக்கூடாதுன்னு சொல்ற மாதிரியில்லே இருக்குது, அம்மா சொல்றது?

மீனு : பாத்தியா பொன்னி! இப்படித் தான் எதையாவது சொல்லி என்னை சமாதானப்படுத்திடுவான்.

பொன் : இவ்வளவு அறிவு படைச்ச மகனைப் பெத்த நீங்க ஏம்மா வருத்தப் படணும்?

கன் : அட, ஒங்கப்புராணே! நீயும்

புத்திசாலித்தனமாத்தான் பேசறே...... பொன்னி! இங்கே இனிமே ஒனக்கு என்ன வேலை தெரியுமா...?

பொன் : என்ன வேலை?

கன் : என்னைப் பத்தி அம்மா கவலைப்படாமே நீதான் பாத்துக்கணும்......

பொன் : சரி...

மீனு : ஆமா...பொன்னி. இனிமே... இதுதான் உன் வீடு.

கன் : சொ...சொ...சத்தம் போட்டு சொல்லாதே. பெரியம்மா காதிலே விழப்போகுது...இங்கே எங்கேயாவது கண்ணை வச்சு, காதை வச்சு எங்கேயாயாவது கேட்டுக்கிட்டிருக்கும்...

இடையே...

அகிலாண்டத்தின் சகோதரனின் மகன் சிங்காரமும் மகள் அமுதாவும் வைத்தியலிங்கம் வீட்டுக்கு வருகிறார்கள். இதனால் வீட்டிலே பல குழப்பங்கள் ஏற்படுகின்றன. சிங்காரம் மிகக் கொடியவன். நாகரிகத்தின் பெயரால் அநாகரிகமாக நடப்பவன். அகிலாண்டம் அவன் பேச்சைக் கேட்டுக் கொடுமைக்காரியாக மாறியதோடு, டாம்பீக வாழ்க்கை வாழவும் துவங்குகிறாள். ஆனால் வைத்தியலிங்கமும் சுந்தரலிங்கமும் மட்டும் மாறாமல் அப்படியே அன்புடன் வாழ்கிறார்கள்.

சிங்காரம், தகராறுகளைக் கிளப்பி விட்டு விட்டு, ஊர்திரும்பக் கிளம்புகிறான். அப்போது மணி அங்கு வரவே, உறவு முறை தெரிந்து, அங்கேயே தங்க முடிவு செய்கிறான் சிங்காரம். அமுதாவை மணி சென்னையிலேயே சந்தித்திருப்பதால் உறவு முறை தெரிந்ததும் அது காதலாக மாறுகிறது. மணி, சுந்தரலிங்கத்திடம் போகிறான்.

சுந் : வாடா மணி ... என்னடாது உடம்பு எளச்சிப் போயிருக்கு? நல்லா படிச்சியா...படிச்சியா இல்லியா...? பாஸ் பண்ணிடுவியா?

கன் : என்னப்பா நீயி...இதெல்லாம் அவன் கிட்டே போயி கேட்டுக்கிட்டு... பிச்சி ஒதரி இருக்க மாட்டான் அவன்.

மணி : ஏம்மா...சிங்கப்பூர் அத்தானும் அமுதாவும் எப்போ வந்தாங்க?



ரூ 5-க்கு உலகப் பிரசித்தி பெற்ற போட்டோ காமிரா

சங்கிலித்தொடர் முறையில், நீண்ட நாட்கள் உழைக்கக்கூடிய, சக்தி வாய்ந்த லென்ஸ் உள்ள அழகான காமிரா விலை ரூ. 5 தான். தபால் செலவு தனி. ஒரு பிளாஸ்டிக் கேசும், ஒரு ரோல் பிலிமும் இலவசம். எமது ஹனிமூன் சென்டைப் பிரபலப்படுத்தவே இத்திட்டம். திருப்தியில்லையேல் பணம் வாபஸ்.

Indian Chamber of Science

Photo Goods Dealers (PPM)
Jullundur City.

நீங்கள் டாக்டராகலாம்

வீட்டிலிருந்தபடியே, தபால் மூலம், சர்க்கார் அங்கீகாரம் பெற்ற கல்லூரியிலிருந்து டிப்ளமா பெற்று டாக்டராகலாம். விவரத்திற்கு எழுதுங்கள். இலவசமாக அனுப்பப்படும்.

Indian Homeopathic College

(PPM) JULLUNDUR CITY.

ஏன் திடீர்ன்னு பொறப்புட்டுட்டாங்க..? நான், கூப்பிடல்லேன்னா இங்நேரம் அவங்க எங்கேயாவது போயிருப்பாங்க...

கன்: ஆமா ... நீதான் காரியத்தையே கெடுத்திட்டியேடா ... மானத்து மேலே போன சனியனெ ஏணிவச்சு வீட்டுக்கே கூட்டிட்டு வந்திட்டியே...

மணி: பாத்தியாம்மா அண்ணன் சொல்றதை. அவங்க என்ன பத்தி என்னம்மா நெனைப்பாங்க?

மணியை சிங்காரம் வசப்படுத்திக் கெடுக்க முற்படுகிறான். வேட்டைக்குக் கிளம்பச் சொல்லிவிட்டு, அமுதாவையும் மணியையும் தனியே விட்டுப் போய் விடுகிறான். அமுதா வெட்கத்தால் பேசாதிருக்கிறாள்.

மணி: என்ன அமுதா, பேசாமே இருக்கிறே? வேட்டைக்கு போவோம்னு கூட்டிக்கிட்டு வந்து உங்க அண்ணன் நம்மை இப்படி தனியா விட்டுட்டுப் போயிட்டாருன்னா...

அமு: அத்தான்! நம்ம ரெண்டு பேரும் இப்படி சோஷியிலா பழகறது எங்க அத்தையைத் தவிர, வேறே யாருக்கும் பிடிக்கலே. நம்ம ரெண்டு பேரும் சேர்ந்து போனா இந்த ஊர்க்காரங்ககூடச் சிரிக்கிறாங்க.

மணி: ம்...ம்....ஊர்க்காரங்களுக்கு என்ன தெரியும் அமுதா. எல்லாம்சுத்த பட்டிக்காடு. காதல்னா வீசை என்னான்னு கேக்கக்கூடியவங்க.

அமு: எனக்கு என்னமோ பயமா இருக்கு. நம்ம ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு உங்க அப்பா. அம்மா சம்மதிப்பாங்களா...?

மணி: அதைப்பத்தி நீ கவலைப் படாதே. அப்பா அம்மாவை சம்மதிக்கச் செய்யவேண்டியது என் பொறுப்பு. அப்படி அவங்க சம்மதிக்கலேன்னாலும் நம்ம கல்யாணம் நடந்தே தீரும்...

நீங்கள் விரும்புவதை அடையுங்கள்!

மாய மோதிரம்

இந்த மாயமோதிரத்தை அணிபவர் யாராயினும் சரி, அவர்கள் காதலில் நிச்சயம் வெற்றி பெறுவார்கள். எவ்வளவு கடின இதயம் படைத்தவரானாலும், அல்லது தொலை தூரத்தில் இருந்தாலும், அவனோ அல்லது அவளோ உங்களிடம் உடனே வருவார். உங்களிடம் கொண்டுள்ள வெறுப்பை அகற்றி, அவனோ அல்லது அவளோ உங்களுக்கு பணிந்து நடப்பார்கள். நீங்கள் விரும்பிய சேவைகளைப் பெறலாம். நீங்கள் விரும்பும் ஆணையோ அல்லது பெண்ணையோ மணந்து அஷ்ட ஐசுவரியத்தில் உங்கள் குழந்தைகளுடன் குதூகலமாக வாழ்க்கையை நடத்தலாம். உங்கள் பரீட்சை, வியாஜ்ஜியம், வியாபாரம் எல்லாத் துறைகளிலும் வெற்றி கிட்டும். உங்கள் பக்கம் அதிருஷ்டம் திரும்பி நீங்கள் பாக்கியசாலிகளாவீர்கள். நீங்கள் விரும்பிய தெல்லாம் அடைந்து வாழ்க்கையை சந்தோஷமாகக் கழிக்கலாம்.

ஒரு மோதிரம் விலை ரூ. 1.94. எக்ஸ்ட்ரா ஸ்பெஷல் ரூ. 3.94. இது அபூர்வ சக்தியுடையது. இது மிக்க புனிதமான தினத்தில் தயாரிக்கப் படுகிறது. திருப்தியில்லையேல் பணம் வாபஸ். ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள். அது உங்களைத் திருப்திபடுத்தும்.

Principal, **BENGAL MESMERISM HOUSE**
(P. P. M.) JULLUNDUR CITY (Pb.)

அமு : அத்தான்!

மணி : அமுதா...இப்ப நீ எப்படியிருக்கே தெரியுமா?

அமு : எப்படி யிருக்கேன்...?

மணி : ம்ம்ம்...அதை நான் சொல்ல மாட்டேன்...என் கண்ணை எடுத்து அப்படியே உன் கண்ணிலே வெச்சுப்பாரு, அப்பத் தெரியும்...

இருவரும் மகிழுகிறார்கள்.

காட்சி 3

பாவமும் பழியும்

துரதிருஷ்டவசமாக மணி சிங்காரம் சொல்படி ஆடுகிறான். அகிலாண்டமும் அவர்கள் பக்கம் நிற்பதால் கன்னையன் அவர்களின் வேடிக்கைப் பொருளாகிறான். மணி ஒரு நாள் சாப்பிட வராததால், காத்திருந்த கன்னையன் பொன்னியிடம் கேட்கிறான்.

கன் : பொன்னி! என்ன, தம்பியெங்கே? தோட்டத்துப் பக்கம் இன்னுமா குளிக்கிறான்...?

பொன் : இல்லியே....மாடியிலே அவங்ககூடல்லே சாப்பிட்ராரு...?

கன் : எம்மா பாத்தியம்மா, அந்தப் பயலே. நான் அவனுக்காக எவ்வளவு நாழி காத்துக்கிட்டு ஒக்காந்திருக்கேன்..அண்ணனுச்சே, கொஞ்சமாவது மரியாதைகொடுக்கிறானம்மா? மெத்தை மேலே அவங்ககூட போயி சாப்பிட்டுக்கிட்டிருக்கானும்...

மீனு : நான் அப்பவே சொன்னேனே கேட்டியா...?

கன் : அவன் என்னதாம்மா நெனைச்சுட்டிருக்கான்...இரு கேட்டுட்டு வர்ரேன்...

மீனு : வேணும்பா, ஒனக்கு எதுக்கு அந்த தொல்லே?

1960-ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1960-க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுதும் கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப் பற்றிய பேச்சுக்கள், நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிமளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும் ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1.25. (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபால் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Shri Swami Satnarayan Raj Jyotishi, (P. M.)
JULLUNDUR CITY (Punjab)

இரவில் தனியாக இருக்கும்
போதுதான் பார்த்துக்
கொள்ள வேண்டும்

KASHMIRI SHASTRA

(Private)

கொக் சாஸ்திரம்

(இரகசியமானது)

84 படங்களுடன்

விளம்பரத்தினால் சரிவரக் கூறமுடியாத விஷயங்கள் அடங்கியுள்ளன.

படிக்கிறவர் நன்றாகவும் தெளிவாகவும் விஷயங்களைப் புரிந்து கொள்வார்கள். பலவிதமான 84 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம் தான் மிக நன்றாயிருக்கிறது எனக் கூறப்படுகிறது. விலை. ரூ. 4.

BED ROOM PHOTOS

படுக்கை அறை படங்கள்

உங்களுக்கு படுக்கை அறை காக்ஷிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்துகொள்ள விருப்பமிருந்தால் இன்றே 25 படங்கள் கொண்ட ஒரு செட்டுக்கு ரூ. 6.00 அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள், 12 படங்கள் கொண்ட சாம்பிள் செட் ரூ. 3-50. கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில். அயல் நாட்டிலிருப்பவர் பூரா தொகையையும் பி. பி. ஓ. வில் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

PARIS ART HOUSE

Durgiana (P.P.M.) Amritsar.

கன் : இல்லேம்மா அவனை இப்படியே விடக்கூடாது. கெட்டுப் போயிடுவான். அவனை கண்டிச்சு வெக்கவேண்டாம்? அம்மால்லாம் காத்துக்கிட்டிருக்காங் கன்னுமெத்தெமேலே போயி உக்காந்து சாப்பிட்டுக்கிட்டிருக்கான், மேலே போயி உக்காந்துகிட்டு. சின்ன குழந்தை!

கன்னையனை அகிலாண்டம் தடுக்கிறாள்.

அகி : டேய்...எங்கடா போறே?

கன் : மேலே மணி இருக்கான். அம்மா அவனை பலகாரம் சாப்பிடரத்துக்கு கூட்டிட்டு வரச்சொன்னாங்க பெரியம்மா.

அகி : அவன் மேலே சாப்பிட்டுக்கிட்டிருக்கான். நீ ஒன் வேலையை பார்த்துக்கிட்டுபோ...

கன் : நான் என் தம்பியை கூப்பிடப் போறேன். நீங்க ஒங்க வேலையை பாத்துக்கிட்டுப் போங்க.

அகி : டேய்...மேலே போகாதேடான்னா! அங்கே எங்க அமுதா இருக்கா.

கன் : ஏன், இருந்தா என்ன பெரிய அல்லி ராணியா? அவளை பாக்கரதுக்கா நான் போறேன்?

அகி : அடபாவி! என்ன வினயமா பேசறடா நீ...

கன் : வினயமா பேசலே பெரியம்மா.

அகி : ம்...

கன் : உள்ளே வேகுது. குஞ்சை பறிகொடுத்த கோழிமாதிரி மனசு துடிக்குது அப்படியே.

அகி : துடிக்குண்டா துடிக்கும். நீ மேலே போகக்கூடாது.

கன் : நான் சின்னபுள்ளையிலேருந்து மேலே போயிகிட்டும் கீழே வந்துகிட்டும் தான் இருக்கேன். என்னைபோக வேண்டான்னு சொல்றத்துக்கு யாருக்கும் உரிமையில்லே. எங்கிட்டே சொல்லாதீங்க. வேறே யாருகிட்டயாவது சொல்லுங்க, போங்க.

அகி : டேய்டேய் நில்லுடா அங்கே! ஏண்டா டேய்! எங்கிட்டே எதுத்து பேசற அளவுக்கு அவ்வளவு பெரிய மனுஷனாயிட்டியா?...மரியாதையா கீழே போயிடு. இல்லே இன்னொரு காலை ஒடிச்சி கையிலே கொடுத்துடுவேன்.

கன் : விடு பெரியம்மா...

அகி : இறங்குடா கீழே.

கன் : வீடு பெரியம்மா...

அவர்களுக்குள் தகராறு ஏற்படும் போது அகிலாண்டம் படியில் விழுந்துவிட்டு கன்னையன்மேல் பழி போடுகிறாள். பாகப்பிரிவினைதான் நல்லது என்கிறான் சிங்காரம். இதைத் தடுக்க யாராலும் முடியவில்லை. கடைசியில் இரு குடும்பங்களிடையே பாகப்பிரிவினை நடக்கிறது.

காட்சி 4

அண்ணனும் தம்பியும்

பாகப்பிரிவினை ஏற்பட்டதால் மனமுடைந்த சுந்தரலிங்கம், மணி அமுதாவை மணக்க முடிவு செய்ததறிந்து படுக்கையில் விழுகிறார். மணி அமுதாவை மணக்கிறான். கன்னையன் ஓடிப்போய் மணியை அழைக்கிறான்.

கன் : தம்பி ... தம்பி ... அப்பாவுக்கு ரொம்பமோசமா இருக்கப்பா நெலைமை! உன்னைப் பாக்கணும்னு துடியா துடிக்கிறாரு.

மணி : அன்னிக்கு ஊராங்க மத்தியிலே ஒண்ணும் ஒதவாதவன், அப்பன் பிள்ளைங்கிற உறவு இன்னியோட முடிஞ்சு போச்சு...நான் செத்தாலும் என் பிணத்தைக் கூடப் பார்க்கக் கூடாதுன்னு வீராப்பு பேசினாரே... அதை நான் இன்னும் மறக்கலே...

கன் : நீ மறக்கலேடா...நீ இன்னும் மறக்கலே...பெத்தமனசு பித்துபாரு... அவர் எல்லாத்தையும் மறந்திட்டாரு... ஏண்டா ... நாம்ப சின்ன பிள்ளையா இருக்கறப்போ அப்பா நம்பளை திட்டலே...அடிக்கலே...அப்ப நாம்ப என்னடா செஞ்சோம்? இப்பமட்டும் நம்ப என்னடா அவ்வளவு பெரிய மனுஷனா போயிட்டோம்? கோழி மிதிச்சாடா குஞ்சு செத்துடும்? அம்மா அமுதா, கண்ணு கண்ணு! நான் உன்னைவிடப் பெரியவம்மா. நான் சொல்றனேன்னு வித்தியாசமா நெனைக்காதே. நமக்குள்ளே ஆயிரம் வித்தியாசம் இருக்கட்டும். நீ இன்னையிலேருந்து எங்க வீட்

இனாம் ! இனாம் !! இனாம் !!!



எமது நெ. 501 கருங்கூந்தல் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான ரோமமும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுமே கறுப்பாக வளரும். இது முடிகள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது.

புட்டி ஒன்றின் விலை ரூ. 1.94.

3 புட்டிகள் (பூராமுறை] ரூ. 5.00.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி வாட்சும், மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும் உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூகோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

BHARAT PHARMACY (P. P. M.)

Jullundur City.

டுக்கு மருமகளா வந்துட்டே. எங்க ளுக்கு வர்ர நன்மை தீமை யெல்லாம் இனிமே உன்னை சேந்ததுதாம்மா! நீயாவது அவனுக்குச் சொல்லி கொஞ் சம் கூட்டிட்டுவாம்மா. அப்பா உங்களை அந்தக் கல்யாணக்கோலத்திலே பாத்தா ரொம்ப சந்தோஷப்படுவா ரம்மா.

மணி: இந்தக் கல்யாணமே நடக் கக்கூடாதுன்னு மனமார விரும்பியவர் என்னை இந்த கோலத்தோட பாக்க ஆசைப்படுவாரா, இல்லே நான்தான் அங்கே வரலாமா...?

கன்: தம்பி...தம்பி...என்னடா, என்ன என்னமோ பேசறே? நம்பஅப்பா ஆத்திரத்திலே உரிமையோடே ஏதோ பேசிட்டாரு...அதை ஒரு பெரிசு பண் ண்ணிக்கிறியே...அவரு பேசினது தப் புன்னு...நான் உன் கால்லே விழுந்து மன்னிப்பு கேக்கறேண்டா...டேய்...... தம்பி...தான் ஆடாட்டி போனாலும் தன் சதை ஆடும்னு சொல்லுவாங்களே, இந்த நேரத்திலே நீ பேதகம் பேசறியே!

மணி: மணக்கோலத்தோடு இருக் கும் என்னுடன் தகராறு செய்ய வேண்டுமென்பதுதானே உங்கள் நோக்கம்? வரவிருப்பமில்லை யென்றால் போக வேண்டியதுதானே...

கன்: டேய்...டேய்...இதோ பார்ரா. நீ தாலிகட்டிட்டு பொஞ்சாதியோடே நின்னுகிட்டிருக்கே! அங்கே ஒன்னை பெத்தவ தாலி பாக்கியம் பரிபோகக் கூடாதே...மஞ்சள் அழிஞ்சிடக் கூடா தேன்னு துடியா துடிச்சிக்கிட்டு நிக்க ராடா...டேய்! இங்கே பார்ரா! அவ ஒன்னை பத்து மாசம் சொமந்து பெத்தா பாரு, அந்தக் கூலிக்காகவாவது வந்து தொலேடா நன்னிகெட்ட பயலே...

சிங்: டேய்...நொண்டிப் பயலே, என்னடா கல்யாண வீட்டிலே கலாட்டா பண்றே? அடிச்சித் தள்ரா இவனே.

கன்: என்னடா பண்ணிடுவே?

வைத்தியலிங்கம் வருகிறார்.

வைத்: எவண்டா அவனை தொட்ர வன்...? எவனாவது அவன் மேலே

ரூ. 300 இனாம்

இந்த மகாகாளி இயந்திரத் தகடை நீங்கள் முழு மனதுடன் உங்கள் கை வசம் வைத்திருந்தால், நீங்கள் நினைத் தவை கைகூடும். உங்கள் விரோதிகள் எவ்விதமான நிலைமையிலிருந்தாலும் உங்க ளுக்குப் பணிவார்கள். நீங்கள் எதைக் குறித்துத் தேடுகிறீர்களோ, அது உங்க ளைத் தேடி வரும். இந்தத் தகட்டை கை வசம் வைத்துக்கொண்டு தியானம் பண் ணும்போது. இந்த மகாகாளி தோன்றி நீங்கள் விரும்புவதை அடையும்படி செய் வாள். ஒரு யந்திரத் தகடு விலை ரூ. 1.25 ந. பைசே. ஒரே தடவையில் 3 ஆர்டர் செய்தால் ரூ. 3-12 நயா பைசே. உடனே பலன் தெரியக்கூடிய யந்திரத்தகடு ஒன்று ரூ. 3.88 நயா பைசே. தபால் செலவு தனி. சக்தி இல்லை யென்று நிரூபிப்பவர் களுக்கு ரூ. 300 இனாம்.

THE BENGAL MESMERISM HOUSE (M. P. X.)
JULLUNDUR CITY (Pb)

கையை வெச்சிங்க, துண்டுதுண்டா வெட்டிப்போடுவேன். கல்யாண வீட்டை எழவு வீடாக்கிடுவேன்...

கன் : பெரியப்பா!

வைத் : அழாதய்யா...அழாதே!

கன் : அப்பாவைப் பாக்கறதுக்கு இந்தப் பய வரமாட்டேங்கிருன்.

வைத் : அவன் கெடக்கிருன்! நீ வாய்யா...நீவா.

அகி : நீங்க எங்கே போறீங்க...?

வைத் : அடி சீ போடி, வெட்டிப் போடுவேன்.

காட்சி 5

பொன்னியின் பாக்கியம்

கன்னையனுக்கு மண முடிக்கத் தீர் மானிக்கிருர்கள் பெற்ருேர். மீனுட்சி இதைப் பற்றி கன்னையனிடம் கூறு கிருள்.

மீனு : கன்னையா! என் வார்த்தையை தட்டாதே. உன்னே குடியும் குடித்தன முமா ஆக்கி பாக்கவேண்டிய நிலேக்கு வந்துட்டோம்.

சுங்: ஆமா கன்னையா, உங்கம்மா சொல்லே தட்டாதே!

கன் : அப்பா! என்னப்பா நீங்களும் இப்படிச் சொல்றீங்க? அம்மா! என்னே பிள்ளையா பெத்த பாவத்துக்காக நீங்க ரெண்டுபேரும் தினம் தினம் வேதனே பட்றது போதாதுன்னு எனக்கு ஒரு கல்யாணத்தை பண்ணி வச்சி அந்தப் பொண்ணேயும் எம்பா வேதனேப்படுத்த ணும்ன்னு நெனேக்கிறீங்க? அம்மா! என்னேப் பாரும்மா...அப்பா நீங்களும் என்னேப் பாருங்க! அம்மா! ஏம்மா இந்த நெலேயிலே எனக்குக் கல்யாணம் தேவையாம்மா? பெரியப்பா பாத்த பொண்ணுகூட என்னுடைய நிலே மையை கேள்விப்பட்டுதானேம்மா கல்யாணமே வேணுன்னு சொல்லிட்டா. நான் எந்தப் பெண்ணுக்குமே கண் நிறைஞ்சபுருஷஞ இருக்க முடியாதம்மா.

மீனு : இல்லடா கண்ணு! அதுக்குப் பொருத்தமான பொண்ணு நம்ப பொன்னிதான்...

கன் : பொன்னியா! அம்மா பெரிய தப்பு பண்ணிட்டேம்மா! பெரிய தப்பு பண்ணிட்டே. உன் புள்ளே நல்லா இருக்கணுங்கிறதுக்காக ஒண்ணுமே தெரியாம, அப்பாவித்தனமா சிரிச்ச முகத்தோடே நம்பளேயெ சதம்ன்னு நம்பிக்கிட்டிருக்கிற அந்த பொன்னியி னுடைய வாழ்க்கையெ கெடுக்க பாத் துட்டியே அம்மா! ஏம்மா, ரெண்டு பிள்ளேக்கு தாயார்தானே? அப்படி யிருந்தும் ஒரு சின்ன பெண்ணி னுடைய மனசை புரிஞ்சுக்காதெ எப் படிம்மா இந்த முடிவுக்கு வந்தே நீ?

மீனு : கன்னேயா!

கன் : ஏம்மா, நான்தான் ஒன்னே கேக்கறேன்? உனக்கு பொன்னி மாதிரி ஒரு பொண்ணு இருந்து, என்னே மாதிரி ஒரு நொண்டிப்பயலுக்கு கல்யாணம் பண்ணிக்குடுன்னு உன்னுடைய மனசு என்ன கஷ்டப்படும் சொல்லும்மா?

சுங் : கன்னேயா!

மீனு : நீங்களே சொல்லுங்கம்மா.

சுங் : கன்னேயா! நீ எனக்குப்பிள்ளே இல்லேடா! எனக்கு நீ தகப்பன். ஆண்ட வன், உனக்கு இவ்வளவு அறிவைக் கொடுத்து இந்தப் பெரிய ஊனத்தைப்

ரூ. 6-க்கு கைக்கடிகாரம்



டெசயின் சிஸ்டத்தில் வருட கியாரண்டியுடன் அளிக்கப்படும். 15 ஜுவல்ஸ் கைக் கடிகாரத்தை ரூ. 6 க்குப் பெறுங்கள்.

தபால் செலவு ரூ. 1.25 தனி.

குறிப்பு : எங்கள் ஹனி மூன் செண்டை பிரபலப்படுத்தவே இத்திட்டம். திட்டம் (Scheme) உங்களுக்கு பிடிக்கவில்லேயானல் பணம் வாபஸ் செய்யப்படும்.

London Trading Agency,
(Watch Supplier -P.P - 3)
JULLUNDUR CITY.

கொடுத்திட்டானே! மீனுட்சி! கன்னே யன் சொல்றதுதான் சரி!

திடீரென்று பொன்னி பேசுகிருள்.

பொன் : அம்மா! நான் போயிட்டு வர்றேன். நீங்க காட்டிவந்த ஆதரவுக்கு ரொம்ப நன்றி.

மீனு : என்ன பொன்னி, எங்கே போறே?

பொன் : நீங்க தாங்கி வந்த சுமையை நான் சுமக்கலாம்ன்னு முடிவு பண்ணியிருந்தேன். ஆனு நீங்கயாரும் அதை விரும்பலே. இனி நான் இங்கே இருந்து என்ன பிரயோஜனம்?

மீனு : அப்படின்னு என் பிள்ளேயை கல்யாணம் செய்துக்க நீ சம்மதிக் கிறியா?

கன் : பொன்னி ... பொன்னி பொன்னி! அப்படின்னு இந்த நொண்டி யைக் கல்யாணம் பண்ணிக்கறதுக்கு நீ விரும்பறியா? இதோ பார்! ஆதரவு காட்டினவங்களுக்கு நன்றி தெரிவிக்க இது சாதாரண விஷயமில்லெ. உன் னுடைய தியாகத்துக்கு ஒரு அளவு உண்டு. பொன்னி! இந்த நொண்டியை கல்யாணம் பண்ணிக்கிட்டியின்னு உன் வாழ்நாள் பூரா நீ நெனேச்சி நெனச்சி வருத்தப்படவேண்டி வரும். நல்லா யோசனே பண்ணு பொன்னி, நல்லா யோசனே பணணு.

பொன் : யோசிக்கிறதுக்கு ஒண் ணுமே இல்லே! என் வாழ்க்கையிலே இதைவிட சிறந்த பாக்கியம் வேறே எதுவுமே கிடையாது.

மீனு : பொன்னி.

மகிழ்ந்து போகிருள்.

இடையே

மணி ஒரு கம்பெனியிலே வேலேக் கமருகிருன், சிங்காரம், ஜால்ரா தேவி என்பவளே அழைத்து வந்து அட்டகாசம் செய்கிருன். மணி-அமுதா, கன்னேயன்-பொன்னி திரு மணம் நடந்த பின் முறையாக அமு தாவும் பொன்னியும் கருவுற்றிருக்கி ருர்கள். மணி தன் காரியாலயத்தி லிருந்து எழுபத்தி ஐயாயிரம் ரூபா யைக் கொண்டு வந்து ஷோ பிஸி னஸசுக்காக சிங்காரத்திடம் கொடுத்து விடுகிருன். சென்னேயில் பெரிய வைத்தியர் இருக்கிருர் என் பதறிந்து, பெரியவர்களின் ஆசி யுடன் கன்னேயனே அழைத்துக் கொண்டு சென்னேக்குப் புறப்படு கிருள் பொன்னி. அகிலாண்டமும் சென்னே வந்து சிங்காரத்தின் அட்ட காசம் கண்டு திடுக்கிடுகிருள். ஊரிலோ கடன் தொல்லே தாங்க முடியவில்லே. மணி வந்து கன்னே யனே பார்க்கிருன். ஷோ பிஸினஸ் என்று சிங்காரம் ஆடும் ஆட்டம் அளவுக்கதிகமாகி விடுகிறது.

சென்னேயில் கன்னேயன் வைத் தியம் செய்து கொள்ளத் தங்கு கிருன்.

பொன்னியின் மகனேக்கூடக் கடத்தி வந்து விடுகிருன் சிங்காரம். மணி பணம் கேட்கிருன். சிங்காரத் துக்கும் அவனுக்கும் விரோதம் வந்து சட்டையைப் பிடித்துக் கொண்டு விடுகிருர்கள்.

உலக பிரசித்திபெற்ற போட்டோ காமிரா ரூ. 5-க்கு



சங்கிலித் தொடர் முறையில், சக்தி வாய்ந்த லென்ஸ் உள்ள இங்கிலீஷ் மேக் காமிரா. அழகானது. தபால் செலவு தனி. ஒரு ரோல் பிலிமும் ஒரு பிளாஸ்டிக் கேசும் இலவசம். எமது காஷ்மீர் ஸெண்டை பிரபலப் படுத்தவே இந்த திட்டம். திருப்தி இன்றேல் பூரா பண மும் உடனே வாபஸ் செய்யப்படும்.

United Commercial Stores
(Photo Goods Dealers-PPM)
Mai Hiram Gate
JULLUNDUR CITY (Pb.)

காட்சி 6

மீனாட்சி என்னை மன்னிச்சுடு!

சிங்காரம், நிலைமை எக்கச்சக்க மாகப் போனவுடன் அகிலாண் டத்தை நிர்க்கதியாக்குகிறான். அப் போது மீனாட்சியும் சுந்தரலிங்கமும் அங்கே வருகிறார்கள்.

அகி : அய்யய்யோ ... ஆ ... சிங் காரம்...சிங்காரம்! என்னை முச்சந்தி யிலே நிக்கவச்சிட்டா போயிட்டே.

ஒரு : யாரம்மா நீ?

அகி : அடப்பாவி!

மீனா : அக்கா ... அக்கா ... என் னக்கா இது?

சுந் : அண்ணி.

அகி : ஹா...மீனாட்சி! என்னை மன் னிச்சுக்கோ மீனாட்சி.

மீனா : அப்படிச் சொல்லாதீங்க அக்கா.

சுந் : அண்ணி! உங்களுக்கா இந்த கதி?

அகி : அவர் எங்கே?

மீனா : கன்னையனை தேடிக்கிட்டு மணி வீட்டுக்குப் போயிருக்காங்க.

சுந் : ஆ ... பொன்னி எங்கே இருக்கிறு?

பர : சீக்கிரம் ஓடுங்க. அங்கதான் பொன்னி இருக்குது...எனக்குக் கொஞ் சம் வேலை இருக்குது. நான் கொஞ் சம் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிட்டு வர்ரேன்.

அகி : ஆ...

சுந் : வாங்க வாங்க சீக்கிரம்.

வீட்டிலே அமுதா மணியிடம் கேட்கிறாள்.

அமு : ஆபீஸ்லே என்ன நடந்தது? அதைச் சொல்லுங்க அத்தான்.

மணி : என் மானம் மரியாதை எல் லாம் போகப்போகுது அமுதா, இன் னும் இருபத்திநாலு மணி நேரத்திலே.

அமு : எனக்கு ஒண்ணுமே புரிய லியே அத்தான்.

மணி : ஹூம் ... படிச்சவன், பட்ட தாரி, எனக்கே விளங்காமெ உன் அண்ணனை நம்பினேன் பாரு அத னாலேதான் இந்த கதி. இருக்கட்டும் அவனை பழிக்குப்பழி வாங்கறேன்.

அமு : அத்தான்.

மணி : என்னை தடுக்காதே அமுதா!

கன்னையன் ஷோ நடக்குமிடம் செல்கிறான். உள்ளே போக முயற் சிக்கும் அவனை காவல்காரன் தடுக் கிறான்.

கன் : டிக்கட்டு இல்லே.

டிக் : டிக்கட்டு இல்லியா...போபோ வாங்கிண்டு வா.

கன் : ஐயா...நான் அவசரமா உள்ளே போகணும்.

டிக் : போய்யான்னா...

வீட்டில் வைத்தியலிங்கம் விசாரிக் கிறார்.

வைத் : மணி, டே மணி!

அமு : மாமா வாங்க மாமா...!

வைத் : ஏம்மா அழுதுகிட்டிருக்கே? என்ன ஆச்சு? இந்தப் பயல் எங்கே?

காஷ்மீர் சால்வை

ரூ. 2/50-தான்!

ரூ. 2/50-க்கு. 96" x 54" அளவுள்ள எம்ப்ராய்டு காஷ்மீர் சால்வையை நீங்கள் அடையலாம். தபால் செலவு தனி. பூரண திருப்திக்கும் உத்திர வாதம். இல்லையேல் பணம் வாபஸ். குறைந்த சரக்குகளே இருக்கின்றன. ஏமாற் றத்தைத தவிர்க்க உடனே எழுதுக.

KASHMIR
SHAWL HOUSE (PM)
AMRITSAR.

அமு : எங்கண்ணனே பழிவாங்கற துக்காக அவங்க ஷோ கொட்டகைக் குப் போயிருக்காங்க மாமா.

வைத் : இப்பதான் அவனுக்கு புத்தி வந்தது போலிருக்கு. ஆமா உன் அண்ணனைப்பழிவாங்க மனுஷனுலேமுடி யாதே. அவன்இல்லே வரணும். சரிசரி, புறப்படு. மீனுட்சியையும் சுந்தரலிங் கத்தையும் ஒரு இடத்தில் விட்டுட்டு வந்திருக்கேன். அவர்களேயும் கூட்டிட் டுப் போவோம் வா...

பொன்னி ஷோ நடக்குமிடம் போகிருள்.

பொன் : ஹா என் குழந்தை...... என் கொழந்தை.

டிக் : டிக்கட்டு எங்கம்மா...?

பொன் : அப்யோ உள்ளே இருக் கிறது என் கொழந்தைய்யா!

டிக் : கொழந்தையாவது குட்டியா வது? போ போ.

பொன் : இல்லேய்யா என் குழந்தை.

டிக் : டிக்கட்டு இல்லாமே உள்ளே போக முடியாது. டையத்தே வேஸ்ட் பண்ணுதே. ஹா...டிக்கட்...ஆ...வாங்க வாங்க.

பொன் : அத்தான்!

கன் : பொன்னி!

பொன் : அத்தான்!

கன் : பொன்னி!

ஒரு : மகாஜனங்களே! நீங்கள் இப் பொழுது பார்க்கும் காட்சியைப்போல் எந்த ஷோவிலும் பார்த்திருக்க மாட்டீர் கள். இதோ இந்த குழந்தையை யானே யின் கையில் கொடுத்து...

பொன் : அத்தான் நம்மகொழந்தை!

கன் : என்னு, நம்ப கொழந்தையா?

பொன் : அத்தான்...அத்தான்?

கன் : பொன்னி...இந்தா குழந்தை. வா போகலாம்...

திம் : மாஸ்டர் எவனே ஒருத்தன் யானே கையிலேருந்து கொழந்தையை எடுத்துக்கிட்டு வர்ருன்...

சிங் : யானே கிட்டேருந்து குழந் தையை எடுத்துப்பிட்டானு? யார்ரா வன்?

பொன் : அத்தான்...நல்ல வேளே, சரியான சமயத்திலே குழந்தையை காப்பாத்திளும்...

கன் : ஆமா...இந்தப் பக்கம் போற துக்கு வழியில்லே போலிருக்கே! குழந் தையை பிடி. பாக்கறேன்...

பொன் : அத்தான்!

கன் : ஆ...

பொன் : கையி!

கன் : ஆ...கையி....கையி....கையி ...கையி வந்திடுச்சி கையி வந்திடுச்சி! காலு...காலு......காலு......காலு வந்தி டுச்சி காலு வந்திடுச்சி...

பொன் : அத்தான்!
கன் : கையி வந்திடுச்சி!
பொன் : அத்தான்!
கன் : காலு காலு வந்திடுச்சி!
பொன் : அத்தான்...அத்தான்...

கன் : வா இந்தப் பக்கம் ஓடிடலாம். வா...

சிங் : டேய்...நொண்டிப் பயலே! மாட்டிக்கிட்டேடா. என் திட்டத்தை யெல்லாம் பாழாக்கிட்டேடா நீ...

கன் : டேய்! மறுபடியும் நொண்டிப் பயலேன்னே...ஒன்னே நொறுக்கிப்பிடு வேன். இப்போ பாரு...

சிங் : கை வந்திடுச்சா? இன்னெரு கையும் ஒடிச்சிடுவேன். டேய் கூண் டோடு எல்லாரையும் தொலேச்சிட் றேன் இப்போ.

சிங் : டேய்...!
பொன் : அத்தான் அததான்...!
சிங் : மாப்பிளே...!

கன் : மணி! இதோ பாரு...என் கை கால் வந்திடுச்சி.

மணி : மன்னிச்சிடுங்க அண்ணு...

கன் : பரவால்லே, அதோ பார் அண்ணி.

மணி : என்னே மன்னிச்சிடுங்க அண்ணி.

கன் : ஓடியா...பொன்னி.
பொன் : அத்தான் அத்தான்...!
சிங் : டேய்...டேய்...!

பொன் : அத்தான்...அத்தான்...... அத்தான்...அத்தான்...!

அகி : சிங்காரம்! என் அண்ணன் மகனு நீ...அடப்பாவி என்னே நடுத்தெரு விலே விட்டுட்டியேடா...

சிங் : அத்தே, நெருங்கினு செத்தே.

வைத் : இந்த கருப்பு யானையை பாத்தியா.

மீனு : கன்னையா, மணி, பொன்னி அமுதா.

வைத் : கன்னையா, கன்னையா.

கன் : பெரியப்பா பெரியப்பா எனக்கு கைகால் வந்திடுச்சு.

வைத் : அப்படியா!

கன் : எனக்கு கைகால் வந்திடிச்சு.

வைத் : இன்னைக்குத்தான் என் மனசு குளிர்ந்தது. சிங்கப்பூரான் மூட்டின நெருப்பு இன்னிக்குத்தாம்பா அணைஞ்சது.

கன் : அப்பா! சிங்கப்பூரானை திட்டாதிங்க. அவனுலேதான் எனக்கு உடம்பு குணமாச்சு.

டாக் : நானே குணமாக்கியிருப்பேன் கன்னையா! அதுக்குள்ளே நீ ஓடி வந்துட்டே! பரவாயில்லே எப்படியோ கைகால் கொணமாயிடுத்து.

கன் : டாக்டரு! நீங்களும் மின்சார சிகிச்சைதான் செய்யணும்னு சொல்லி யிருந்தீங்க! இப்பவும் மின்சாரத்தினுலே தான் எனக்கு கைகால் எல்லாம் குணமாச்சு. எல்லாம் உங்களைமாதிரி பெரியவங்களுடைய ஆசீர்வாதம்தான் டாக்டர்.

இன் : மிஸ்டர் சிங்காரம் அப்ப பொறப்பட்ரீங்களா?

சிங் : ஆல்ரைட்! எனக்குப் பொறப்பட்ரதெப்பத்தி கவலையில்லே. அதோ எங்கே அவன், என் மச்சான், அவன் இருக்கானே அவன்தான் கம்பெனியிலே இருக்கிற எழுபத்தய்யாயிர ரூபாயைதிருடிக்கொடுத்தவன். அவனும் தான் வரணும். அந்தப் பணத்தை வாங்கிட்டுத்தான் அனுர்கலி பிளேன்லே புறப்பட்டுட்டா.

இன் : யார் எங்கே பறந்தாலும் எங்ககிட்டேருந்து தப்பமுடியாது. இங்கே பாருங்க! டேய் கொண்டுவா இங்கே.

சிங் : ஆ...ஆ அனுர்! ஜால்ரா பாத்தியா! நம்பளை பராய்ச்சிக்னு போய்டிங்களே! போலீஸ் கொணுந்து நம்மகிட்டயே உட்டுடுச்சு பாத்தியா...அப்ப எல்லாரும் போகவேண்டியதுதான்...... மாமா...டேய்! மச்சான் பசங்களா! அத்தே, சிஸ்டர் போயிட்டு வர்ரேன்.

வை : போயிட்டு வராதேடா. அங்கேயே இரு. அங்கேயும் போயி பாகப் பிரிவினை பண்ணுதே. அது ஜெயில்.

சிங் : பேசுயா...

வை : ம்...

சிங் : நீ பேசமாட்டே...அயோக்கியங்கள்ளாம் வெளியே இருக்கிறீங்க... யோக்கியன்கள்ளாம் உள்ளேபோருேம்.

வை : டேய் உன்னையே கையை காட்டிக்கடா...

மானே : மணி! இவ்வளவு பெரிய குடும்பத்திலே பிறந்து இப்படியெல்லாம் நடந்திட்டியே?

மணி : ஆமாங்க! தாயைமறந்தவனை யும் தாய்மொழி பற்றில்லாதவனையும் இந்த உலகம் மனிதனுகவே மதிக்காது என்பதை நான் படிச்சிருந்தும்... வாழ்க்கையிலே அதைக் கடைபிடிக்காமெ போயிட்டேன்.

மா : சரி, போனதெல்லாம் போகட்டும்...இன்னிக்கு எங்க வீட்டிலே தங்கியிருந்து நீங்கள்ளாம் சாப்பிட்டுட்டுத்தான் போகணும்.

வை : உங்களுக்கு அந்த சிரமம் வேண்டாம். நாளன்னிக்கு பொங்கல். நாங்கள்ளாம் அங்கே போகணும்... நீங்க செஞ்ச உதவியை நாங்க மறக்க மாட்டோம்.

வை-கந்த-கன் : வர்ரோம் வர்ரோம். வர்ரோம்.

வைத் - முருகா! இன்னிக்குத்தாம்பா என் மனசுநிம்மதியாச்சு. ஏய் அகிலாண்டம்! கூட்டோடு இருந்தா கண்ணுக்கு எவ்வளவு குளிர்ச்சியா இருக்கு. இந்த ஒன்றுபட்ட குடும்பத்தை நீ பிரிக்கப் பார்த்தியே தாயே...!

அகி : எனக்கு புத்தி வந்திடுச்சிங்க! ஆம்பிளைகளுக்கு அடங்கி அடக்க ஒடுக்கமா இருக்க வேண்டியது என்பதை என் தங்கச்சி மீனுட்சியாலேயும் என் மருமக பொன்னியாலேயும் நான் நன்னு தெரிஞ்சுக்கிட்டேன்...

வைத் : நல்லா தெரிஞ்சுகிட்டே இல்லே. எனக்கு அது ஒண்ணே போதும். ஏய்! ஒரு மரம் தோப்பு ஆகாதடி. பல மரங்கள் சேந்தாத்தான் தோப்பு. அதைப்போல நம்ப குடும்பத்திலே நடந்த கிளர்ச்சி இருக்கு பாரு... ஊருக்கு ஒரு புத்திமதியாகும்...ஆ...

சுங் : பொங்கலோ...பொங்கல்...... பொங்கலோ பொங்கல்...பொங்கலோ பொங்கல்.

வேதனை பிடுங்கித்தின்ற அங்கே மகிழ்ச்சி நிலவுகிறது. ★

லலிதா

இ. வி. சரோஜா

எம். என். ராஜம்

என்னுடன் நடித்த



ராகினி

என். லலிதா

சௌகார் ஜானகி

கதாநாயகிகள்

— எழுதியவர்

திரைப்படவுலகில் நான் காலடி எடுத்து வைத்தபின் இதுவரை ஏராளமான படங்களில் நடித்து விட்டேன். இந்தப் படங்களில் எல்லாம் நான் கதாநாயகனுகவே நடித்தேன். என்னுடன் கதாநாயகியாக நடித்தவர்கள் பலர். படப்பிடிப்பில், அவர்கள் நடிக்க வந்தபோது என்னிடம் பழகியதை வைத்துமட்டும் நான் இந்தக் கட்டுரையை எழுதியிருக்கிறேன். இவையெல்லாம் எனது சொந்த அபிப்பிராயங்கள்.

இந்தக் கட்டுரையைப் படிக்கும் என் சக நடிகைகள் கோபப்படாமல் இருந்தால், எனக்கு அதுவே அவர்கள் கொடுத்த பாராட்டாக நான் கருதுவேன்!

'பொன்கதிர்' என்ற மலையாளப் படத்திலும், 'இருளுக்குப் பின்' என்ற பெயரில் வெளிவந்த அதன் தமிழ்ப் பதிப்பிலும் திருவாங்கூர் சகோதரிகளில் மூத்தவரான லலிதாவுடன் நான் நடித்தேன்.

அப்போது அவர் தென்னகத்தைத் தன் நடிப்புத் திறமையால் கவர்ந்து, புகழின் சிகரத்திலே இருந்தார். எனக்கு அவருடன் கதாநாயகனாக நடிக்க வேண்டும் என்ற செய்தியைக் கேட்டவுடனேயே கிலி பிடித்துக்கொண்டு விட்டது! அதற்கு ஏற்றாற்போலவே முதல் நாள் சம்பவமும் நடைபெற்றது.

நானும் அவரும் ஒரு காதல் கீதத்திற்கு பாடுவது போல் வாயசைக்கும் காட்சி முதல் நாளன்று படமாக்கப்பட்டது. இதில் அவர் என் நடிப்பைக் கண்டு, ''இது தான் நடிப்பா?'' என்று கிண்டல் செய்ய ஆரம்பித்து விட்டார்!

லலிதாவை ஒரு தேர்ந்த விமர்சகர் என்று சொல்ல வேண்டும். ஒவ்வொரு முறையும் நான் நடித்து விட்டு வந்ததும் அவர் என் நடிப்பைப்பற்றி விமர்சிக்க ஆரம்பித்து விடுவார். குறை கண்ட இடத்தில் அதைக் காட்டுவார். இதனால் நான் அவற்றைத் திருத்திபல காட்சிகளில் திரும்ப நடித்திருக்கிறேன். ஸெட்டில் அவரைப்போல் வேற்றுமையின்றி, சர்வ சகஜமாக எல்லோருடனும் சரிசமானமாகப் பழகுவதில் அவருக்கு இணை அவர்தான்!

ஆனாலும் 'ஸெட்'டில் அவர் இருக்கும்போது எனக்கு நடிக்க வராது!

'பொன் கதிர்' படமாக்கப்பட்ட திருவனந்தபுரம் மெர்ரிலாண்ட் ஸ்டுடியோவில் ஏராளமான மாமரங்கள் உண்டு. லலிதாவுக்கு மாங்காய் என்றால் மிகவும் பிடிக்கும்.

''இதோ பாருங்கள்! நீங்கள் இங்கேயே இருந்தால் எனக்கு நடிக்கவே வராது. கொஞ்சம் மறைவாக இருங்கள்'' என்று அவரிடம் கேட்பேன்.

மாங்காய் ஒன்றைப் பறித்துக் கொடுத்தால் போய்விடுவதாகச் சொல்வார். வேறு வழியின்றி நானும் மாங்காய் அறுத்துக் கொடுத்துவிட்டு, நடிக்க ஸெட்டுக்குப் போவேன்!

ஆரம்பத்தில் என் நடிப்பைப்பற்றிக் குறை சொல்லி, அதை நான் திருத்திக் கொள்ள உதவியவர் லலிதா. அவர் 'ஒரே வழி'யில் என் நடிப்பைக் கண்டு, ''பிரேம் நஸீர் நடிப்பில் முன்னேறியிருக்கிறார்'' என்று சொன்னார்.

'வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி' என்று வெளிவந்த இந்தப் பாராட்டு மொழியைத்தான் நான் மிகவும் மதிக்கிறேன்!

என் கட்டுரையில் இரண்டாவதாக இடம் பெறுபவர் பி. எஸ். சரோஜா. ஆனால் எனது முதல் படத்தில் கதாநாயகியாக நடித்தவர் இவர்தான். 'தந்தை' என்ற படத்தில் நானும் இவரும் சேர்ந்து நடித்தோம்.

திரையுலகுக்கு நானோ புதிது. என்னுடன் கதாநாயகியாக வந்த இவரோ மலையாளத்திலும் தமிழ் நாட்டிலும் புகழ்பெற்ற நடிகை. உண்மையிலேயே இவருடன் எப்படி நடிப்பது என்று பயந்தேன்.

சரோஜா என் நிலையைக் கண்டு இரங்கி, எனக்கு ஆறுதல் சொன்னார். நான் எப்படி யெல்லாம் நடிக்கவேண்டும் என்று சொல்லிக் கொடுத்தார்.

சரோஜா என்னை 'தம்பி' என்று தான் அழைப்பார். அதேபோல் அவரும் ஒரு மூத்த சகோதரியின் ஸ்தானத்தில் இருந்து எனக்குப் பல அறிவுரைகளை வழங்கியிருக்கிறார்.

இவர் வெள்ளை மனம்படைத்தவர். எதையும் நேரிடையாக ஒளிவு மறைவின்றிப் பேசக்கூடியவர். இவருக்கு கிரகிக்கும் சக்தி அதிகம் உண்டு. மலையாளப் படங்களில் இவர் நடித்தாலும் மலையாளம் முறைப்படி பயின்றவரல்ல. ஆயினும் 'ஸெட்'டில் ஒரு முறை வசனத்தைப் படித்தாலும் போதும். அதை அப்படியே நினைவில் வைத்துக்கொண்டு விடுவார் இவர்.

'தம்பி' என்று அழைத்த இவரை இன்றும் என் அக்காவாகவே மதிக்கிறேன்.

என்னுடன் நடித்த மூன்ருவது கதாநாயகி குமாரி. நான் மலையாளப் படங்களில் நடிக்க ஆரம்பித்திருந்தபோது, அவர் அங்குள்ள ரசிகர்களுக்கு ஏற்கனவே அறிமுகமானவராக இருந்தார். மலையாளப் படங்களில் என்னுடன் அதிகப் படங்களில் நடித்திருப்பவரும் இவர் தான்.

குமாரியை நன்கு கைதேர்ந்த ஒரு அரசியல்வாதியுடன்தான் நான் ஒப்பிடுவேன். சந்தர்ப்பங்களையும் சூழ்நிலையையும் அனுசரிந்து எப்படி ஒரு அரசியல்வாதி நடப்பானே அதே போன்று நடப்பவர் குமாரி. 'டிப்ளமடிக் கேர்ல்'என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே, அது இவருக்கு மிகவும் பொருந்தும்.

இவரிடம் மற்றெரு அலாதியான குணமும் உண்டு. நான் சாதாரணமாக எனக்குக் கொடுக்கப்படும் மலையாள வசனங்களை மனப்பாடம் செய்யமாட்டேன். ஆனுல் குமாரி அப்படியல்ல. தன்னுடைய வசனத்தோடு, மற்றவரது வசனத்தையும் நன்ருகப் படித்து, மனப்பாடம் செய்து வைத்துக் கொள்வார்.

நான் 'ஸெட்'டில் வந்து வசனத்தை மறந்து பேசாமல் நிற்கும் சமயங்களிலோ, அல்லது தவருகவோ, முன்னுக்குப் பின் முரணுகவோ பேசும்போது அதைத் திருத்தி விடுவார் இவர். "தப்பு, தப்பு! இந்த வசனம் போன காட்சியிலேயே வந்து விட்டதே! இந்தக் காட்சியில் வரவேண்டியது இந்த வசனம் தானே?" என்று அந்தக் காட்சியில் பேசவேண்டிய வசனத்தை எடுத்துக் கொடுப்பார் இவர். உண்மையைக் கூறட்டுமா? இவர் இருக்கிருர் என்ற தைரியத்தில் தான் நான் வசனங்களையே மனப்பாடம் செய்யாமல் இருந்தேன் என்று சொன்னுலும் மிகையாகாது.

'பசியின் கொடுமை' என்று தமிழில் வெளிவந்ததன் மலையாளப் பதிப்பில்தான் நடிகை தங்கம் எனக்கு அறிமுகமானுர்.

இந்தப் படத்திற்கு அவர் புதிது; நானும் புதிது. படத் தயாரிப்பாளர்களோ மிகப் பிரபலமானவர்கள்.

நாங்கள் இருவரும் சந்தித்த விதமே அலாதியானது.

படத்தின் தயாரிப்பாளரான கோஷி-குஞ்சாகோ இருவரில் குஞ்சாகோ என்பவர் எங்கள் இருவரையும் காரியாலயத்திற்கு அழைத்து, படத்தில் வரும் ஒரு காதல் காட்சியை ஒத்திகைப் பார்க்கச் சொல்லி, அந்தச் சந்தர்ப்பத்தில் எங்களை ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

தங்கம் வெள்ளை மனம் படைத்தவர். தனக்குப் பிடித்ததைப் பிடித்ததென்றும் பிடிக்காததைப் பிடிக்காததென்றும் 'பட்'டென்று, தயவு தாட்சண்யம் பார்க்காமல் சொல்லி விடுவார்.

"இந்தக் காட்சியில் உங்கள் நடிப்பு திருப்திகரமாக அமையவில்லை" என்று என்னிடமே சொல்லியிருக்கிருர் அவர். நல்ல நடிகையான இவர், தற்சமயம் இல்லத்தரசியாக விளங்கி வருகிருர்.

என்னுடன் ஐந்தாவதாக நடித்த கதாநாயகி ராஜசுலோசன. ஆனுல் ராஜசுலோசன கதாநாயகியாக நடித்த முதல் படமான 'மனச்சாட்சி'யில் நான் தான் கதாநாயகனுக அவருடன் நடித்தேன்.

சுலோசன எல்லோரிடமும் சுமுகமாகப் பழகுவார். ஆனுல் நமது பாரதப் பிரதமரைப்போல அவருக்குக் கொஞ்சம் முன் கோபமும் இருக்கிறது. (இதைப் படித்துப் பார்த்துவிட்டு அவர் என் மீது கோபப்படாமல் இருப்பாராக!) அதாவது பேசிக் கொண்டிருக்கும் போது அவருக்குப் பிடிக்காத விஷயம் ஏதாவது வந்து விட்டால் உடனே கோபித்துக் கொண்டு விடுவார். எனவே சுலோசனவிடம் நான் ஜாக்கிரதையாகவே பழகுவதுண்டு. ஸெட்டிலே வந்து டைரக்டருக்கும், மற்றும் பொதுப்படையாகவும் நல்ல அறிவுரைகளையும் யோசனைகளையும் கூறும் ஆற்றல் இவருக்கு நிறைய உண்டு.

"இதோ பாருங்கள்! போன காட்சியில் வசனம் இப்படி வந்திருக்கிறது. இதே வசனம் இங்கும் வந்தால் நன்ருயிருக்குமா?.... அந்தக் காட்சியில் வந்த வசனத்திற்கும் இதற்கும் தொடர்பே இல்லேயே. இப்படி மாற்றியமைந்தால் நன்ருயிருக்குமே...மாருக இப்படிக் காட்சியை மாற்றி அமைந்தால் சிறப்பாக இருக்குமே" என்றெல்லாம் யோசனைகளே அவர் கூறுவதுண்டு. இடத்திற்கும் காட்சிக்கும் பொருந்தாத சம்பவங்கள் வந்தாலும் சுட்டிக்காட்டி விடுவார் அவர்.

என் மீது மட்டும் அவருக்கு கொஞ்சம் கோபம் வரவே செய்யும். நான் இம்மாதிரி விஷயங்களில் தலையிடமாட்டேன். எனவே என்னைப் பார்த்து "ஹூம்...உங்களுக்கென்ன? இருங்கள் இருங்கள்!" என்று உதட்டை லேசாகக் கடிந்துச் சிரித்துக் கொண்டே போய்விடுவார் அவர்.

கடைசியாக ஒன்று. இவர் எனது மனேவியின் ஆருயிர்த் தோழி. இதற்குமேல் நான் ஏதேனும் ஏருமாருகச் சொன்னுல், ராஜசுலோசனுவிடமிருந்து தப்பினுலும் என் மனேவியிடமிருந்து நான் தப்ப முடியாதே!

தமிழ்ப்படவுலகிலே - தமிழின் இனிமை கெடாது, சொல்லின் வேகம் அறிந்து - சிதைவுருமல் வசனம் பேசுவதில் நடிகர்களில் ஒரு சிவாஜி கணேசன் உண்டென்ருல், நடிகைகளின் வரிசையில் ஒரு எம். என். ராஜம்தான் இருக்கிருர்.

ராஜம் தமிழ் பேசும் அழகே அழகுதான்! ஸெட்டில் இவர் வசனங்களேப் பேசுவதை அப்படியே கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பேன் நான். இதனுல் நானும் எவ்வளவோ தமிழ்ச் சொற்களின் உச்சரிப்பைச் சரிவரப் புரிந்து கொண்டிருக்கிறேன்.

இங்கே ஜோடி தவறி விட்டிருக்கிறது! காதலுக்குக் கண்ணில்லே என்று இதனுல்தான் கூறுகிருர்களோ? மனேகர் பிக்சர்ஸ் "மதுரை மன்னன்" படத்தில் எம். சரோஜா, புதுமுகம் ராமனுதன், சரோஜாதேவி, தங்கவேலு.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' படம்தான் என்னை தமிழ்ப்படவுலகுக்கு நன்கு அறிமுகப்படுத்தியது. அதில் என்னுடன் வில்லியாக நடித்தவர் இவர்.

ஸெட்டில் தமிழ் வசனம் பேச வராமல் நான் திணறும் சமயங்களில் "என்ன இப்படி பேசறீங்களே?" என்று இவர் கேட்கும்போது, "உங்களுக்கென்ன, நீங்கள் டயலாக் பாகவதர்" என்று வேடிக்கையாகச் சொல்லுவேன் நான்.

தமிழ் படமான இதில் தமிழைச் சரிவரப் பேசவேண்டுமே என்று நான் பயந்து கொண்டிருந்த போது எனக்கு தேறுதல் சொல்லி, தமிழ்ச் சொற்களை நன்கு உச்சரிக்கக் கற்றுக் கொடுத்தவர் இவர்.

'தன் வேலையுண்டு தான் உண்டு' என்ற இவர், தனக்குக் கொடுக்கப் பட்ட வேலையை மட்டும் நன்கு புரிந்து கொண்டு செய்வார்; சீக்கிரமாகவும் செய்து விடுவார்.

ராஜத்திற்கு நான் அன்புடன் சூட்டிய 'டயலாக் பாகவதர்' என்ற பெயர் ஸ்டுடியோ வட்டாரங்களிலே பிரபலமாகி விட்டது.

இவரும் நானும் சேர்ந்து நடிக்கும் படங்கள்தான் இப்போது அதிகம்.

திருவாங்கூர் சகோதரிகளில் மூத்தவரான லலிதாவுடன் நான் நடித்திருக்கிறேன். அதேபோல் கடைக்குட்டியான ராகினியுடனும் நடித்திருக்கிறேன். பத்மினியுடன் நடித்ததில்லை. சிறந்த நடிகையான அவருடன் நடிக்கும் சந்தர்ப்பத்தை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

ராகினியைப் பற்றி நினைக்கும் போதே எனக்குச் சிரிப்பு வருகிறது.

"அம்மா அம்மா! ஒரு அஞ்சுவெரல் பதிஞ்சது போதும் விட்டுடும்மா! இன்னொரு பக்கத்தெ நான் பாத்துக்கறேன்." மனேகர் பிக்சர்ஸ் "மதுரை மன்னன்" தமிழ்ப்படத்தில் சரோஜாதேவி, தங்கவேலு. எம். சரோஜா.

எஸ்ஆரெஸ் பிக்சர்ஸாரின் ''எல்லோரும் வாழ வேண்டும்'' படத்தில் ஹாஸ்ய நடிகர் தாய் நாகேஷும், புதுமுகம் லலிதாவும்.

''ஐயோ! ஐயோ! நான் என்ன செய்வேன்? எனக்கு ஒரு துணுக்கின் ஞாபகம் வருகிறதே. நான்சிரித்து விடுவேனே இச்சோகக் காட்சியில். யாராவது கையைக் கிள்ளி விடுங்களேன்! சுகுமாரி (அவருடன் துணைக்கு வருபவர் இவர். நடிகையும் கூட) நீயாவது ஓடி வந்து கிள்ளுடி'' என்று கூக்குரலிடுவார்.

இதுவே பெரிய சிரிப்பை எழுப்பிவிடும். ஆனால் இது வேடிக்கைக்காக ராகினி சொல்வதல்ல. உண்மையிலேயே தான் இப்படிக் கூறுகிறார் என்பதை, கிள்ளிய இடத்தில் ரத்தச் சிவப்பாக தேங்கி விடும் 'கிள்ளுக்காயம்' சொல்லி விடும்.

செட்டிலே அவர் செய்யும் கோமாளித்தனங்களையும், உதிர்க்கும் ஹாஸ்ய வெடிகளையும் நினைத்து நினைத்து நான் பல சமயங்களில் என்னையும் மறந்து சிரித்திருக்கிறேன்.

ராகினி செட்டுக்கு வந்து விட்டார் என்றாலே ஒரு தனி கலகலப்பு ஏற்பட்டு விடும்.

செட்டிலே மற்ற நடிகர்களைப் போல வசனம் பேசி நடித்துக் காட்டுவது, டைரக்டரைப் போலவோ அல்லது வேறு டெக்னிஷியனைப் போலவோ அபிநயம் பிடித்துக் காட்டுவது இதெல்லாம் அவருக்கு வேடிக்கைகள். தவிர, தான் படித்த நல்ல விகடத் துணுக்குகளையும் மேற்கோள்களையும் எடுத்துக் காட்டி எல்லோரையும் சிரிப்பி லாழ்த்தி விடுவார் அவர். அதுமட்டுமல்ல! அவர் செய்யும் கோமாளித்தனங்களுக்கும் குறைவிருக்காது.

நடிக்க வேண்டிய கட்டம் ரொம்ப சோகமானதாக இருக்கும். ஒத்திகை எல்லாம் பார்க்கப்பட்டு, படப்பிடிப்பு துவங்க வேண்டிய நேரம் வந்து விடும். திடீரென்று அவர் தன் கையைக் கிள்ளிக் கொள்வார்.

எனக்குத் தெரிந்த வரையில் ராகினி குழந்தை உள்ளம் படைத்தவர். ஆனால் அவர் சிறந்த பாடகி; நடிகை; புகைப்பட மெடுப்பவர். தவிர, அவர் பல பாஷைகளையும் கற்று வைத்திருக்கிறார். இவ்வளவு சிறிய வயதில் இத்தனைச் சிறப்பியல் புகளைப் படைத்தவரை நான் கண்டதில்லை.

ராகினி செட்டில் இருக்கிறார் என்றால் எவ்வளவு மனச்சோர்வு தரும் காட்சியையும் இரண்டே நிமிஷத்தில் செய்து விடலாம்.

'சோர்வை அகற்றும் சிரிப்பு டானிக்கை' அவர் கொடுப்பது தான் இதற்குக் காரணம்.

பண்டரிபாய் - மைனாவதி சகோதரிகளில் நான் பண்டரிபாயுடன் இதுவரை நடித்ததில்லை. 'வண்ணக்கிளி'யில் மைனாவதியுடன் நடித்தேன். நான் இதுவரை அவருடன் நடித்த படமும் இது ஒன்றுதான்.

ஆனால் மைனாவதியை நான் பல படங்களில் நடிக்க வரும்போது பார்த்திருக்கிறேன். பேசியிருக்கிறேன்.

உங்கள் சருமத்திற்கு

மிருதுத்தன்மை அளிக்க
அதிக கிளிஸரின்

பாதுகாப்பிற்கு
லனோலின்

கிருமிகளை அழிக்க
ஆக்டமொர்

மகிழ்வளிக்கும் புதுமை மிகுந்த

OK ஓ.கே சந்தன சோப்

இதோ உங்கள் கனவு நனவாகிறது. பரிபூர்ண அழகும், வசீகரமும், வழி வழியாக வந்த உன்னதச் சிறப்பு மங்காமல், உங்களுக்குச் சுலபமாகக் கிடைக்க வழி, பரவசமூட்டும் புதிய ஓ. கே. சந்தன சோப். பரிசுத்தமான சந்தனத்தைலம் வேண்டிய அளவு இதில் இருக்கிறது. அதோடு நன்மைகள் பல அளிக்கும் நவீன லனோலின்; ஆக்டமொர்; அதிகப்படியான கிளிஸரின் ஆகியவற்றின் தன்மைகளையும் சேர்த்துக் கணக்கிடுங்கள். இந்திய டாய்லெட் சோப்புகளிலேயே சிறந்தது இந்த சோப்புதான் எனக் கூறுகிறோம் நாங்கள். ஏனென்றால்,

- வரளச்செய்யும் வெய்யில், காற்று, உஷ்ணம் ஆகியவற்றை எதிர்த்து, மிருதுவான சருமத்தின் பட்டுத் தன்மைக்கு அவசியமான ஈரப்பசையை பாதுகாக்கிறது லனோலின்.
- அழுக்குக் கிருமிகள் மூலம் அபாயம் நேராமல் பாதுகாத்து, சருமத்திற்கு ஆரோக்கியம் அளிக்கிறது ஆக்டமொர்.
- மிகவும் மென்மையான சருமத்திற்கும் இதம் அளிப்பது அதிகப்படியான கிளிஸரின்.

எல்லாவற்றிற்கும் மேலாக சந்தனத்தின் இனிமை மிகு சுகந்தம்

இனும்

ஓ. கே. அறிமுகப்
பரிசளிப்பு
(3 மாதங்களுக்கு மட்டும்)
3 கட்டி ஓ. கே. சந்தனசோப் வாங்குங்கள் கவர்ச்சிகரமான தந்த முலாம் சோப்புப்பெட்டி ஒன்றை முற்றிலும் இலவசமாகப் பெறுங்கள்.

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், மதராஸ்-1.

EA



"இதோ இப்படி யெல்லாம் பிடிவாதம் பிடிக்காதே!" - பிரபுராம் பிலிம்ஸ் முதல் தயாரிப்பில் ரங்கராவ், சரோஜாதேவி.

அப்போதெல்லாம் சிட்டுக் குருவியைப் போலத் துள்ளி ஆடிக் குறும்புத் தனமாகப் பேசி வந்த மைனுவதியை நாம் இப்போது காண முடியாது. அவர் எங்கோ மறைந்து விட்டார். காரணம் திருமணம்.

அதாவது திருமணத்திற்குப் பின் மைனுவதி மாறி விட்டார். பொறுமையிலும் அமரிக்கையான, நடை உடைபாவனைகளிலும் இவர் தனது அக்காவையும் மிஞ்சி விட்டார் இப்போது. ஒரு குடும்பப் பெண் நடிகையாக வந்தால் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு யாராவது என்னிடம் உதாரணம் கேட்டால் நான் மைனுவதியைத்தான் சொல்வேன்; அவர் நடிக்கும் ஸெட்டுக்கு அழைத்துச் சென்று அவர் நடந்து கொள்ளும் முறைகளைக் காணச் செய்வேன்.

மைனுவதியிடம் அபிரிமிதமான நடிப்புத் திறமை இருக்கிறது. ஆனால் மைனுவதியை நேரில் பார்ப்பவர்களுக்கு இது தெரியாது.

"இந்தப் பூனைக்கும் பால் குடிக்கத் தெரியுமோ?" என்ற தோற்றத்தில் இருக்கும் இவரைக் கண்டு ஏமார்ந்து விடக்கூடாது. ஏமார்ந்த நான் அனுபவத்தில் கூறும் உண்மை இது!

சௌகார் ஜானகி என்னுடன் 'உலகம் சிரிக்கிறது' என்ற படத்தில் கதாநாயகியாக நடித்திருக்கிறார்.

என்னுடன் நடித்தவர்களிலேயே மிகவும் சிறப்பாக உடை அணிபவர் இவர்தான். இவரது பழக்க வழக்கங்களெல்லாம் மேனாட்டுப் பாணியையே பின்பற்றி இருக்கும். தவிர, இவர் மிகச் சிறப்பாக ஆங்கிலம் பேசுகிறார். என்னுடன் நடித்த நடிகைகளில் சிலர் ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்கள். ஆனால் சௌகார் ஜானகியைப்போல சிறப்பாக ஆங்கிலம் பேசக்கூடிய நடிகையை நான் இன்றுவரைச் சந்தித்ததில்லை. இவரது ஆங்கிலப் பேச்சில் கவர்ச்சியிருக்கும்; அழகிய உபமானங்களும் இருக்கும். இத்தனையும் கொண்டிருந்தாலும், இவர் ஸெட்டில் பழகும் தோரணையே அலாதியாக இருக்கும். யாருடனும் மரியாதையுடனும் பண்புடனும் பழகுவார்.

இவரிடம் நான் காணும் சிறப்பு மிக்க மற்றொரு குணம் - நேரத்திற்குப் படப்பிடிப்புக்கு வருவது; நேரத்திற்குப் போவது.

காலை ஏழு மணிக்குப் படப்பிடிப்பு என்றால் சௌகார் ஜானகியின் சிவப்பும் - மஞ்சளும் கலந்த டாட்ஜ் கார் ஸ்டுடியோவுக்குள் ஏழுமணிக்கு வந்து விடும்!

நடிகர் ஹொன்னப்ப பாகவதர் அவர்கள் தயாரித்த 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்ற படத்தில் இ. வி. சரோஜாவை எனக்கு காதல் ஜோடியாக இணைத்திருந்தார்கள்.

இ. வி. சரோஜா ஒரு சிறந்த நடன நடிகை. இவர் ஸெட்டுக்கு வந்தால் யாருடனும் அதிகம் பேசமாட்டார்; அவசியம் இருந்தால்தான் பேசுவார்: அதுவும் அளவோடு பேசுவார்.

இவரிடம் நடனத்தைப் போலவே நல்ல நடிப்புத் திறமையும் பொதிந்து கிடக்கிறது. இதை பல சமயங்களில் நான் அவரிடம் கண்டிருக்கிறேன். இவருடன் நான் ஒரே படத்தில்தான் நடித்துள்ளேன்; பழகியதும் அதிகமில்லை. எனவே இத்துடன் நிறுத்திக் கொள்ளுகிறேன்.

நான் இதுவரை மேலே சொன்னவர்களெல்லாம் என்னுடன் நடித்தவர்கள். அதாவது இவர்களுடன் நான் நடித்த படங்கள் எல்லாம் வெளிவந்திருக்கின்றன. இப்போது சிலருடன் கதாநாயகனாக நடித்துக் கொண்டிருக்கிறேன். அவர்களைப் பற்றியும் சொல்லி விடுகிறேன். இவர்களில் முதலில் குறிப்பிடப்பட வேண்டியவர் 'முதலாளி' புகழ் தேவிகா.

வேடிக்கையாகப் பேசுவதில் இவர் வல்லவர். அதுமட்டுமல்ல, ஏதாவது ஒரு விஷயத்தில் இவரிடம் அகப்பட்டுக்கொண்டு விட்டால் ஏன்? எதற்கு? எப்போது? என்று கேள்விகளாகப் போட்டு ஆளை சளைக்க வைத்து விடுவார்.

வாழ்க்கையைப்பற்றி சிறிதும் கவலையில்லாத சிட்டுக் குருவிபோல இருக்கும் இவர், ஆழ்ந்த மனோபாவம் கொண்டவர். சொன்னதைப் புரிந்து கொண்டு எளிதில் செய்யும் வல்லமை மிக்கவர்.

ஒரு கதாநாயகியாக வர என்னென்ன தேவையோ அவ்வளவும் இவரிடம் இருக்கின்றன. எதிர்காலத்தில் இவர் ஒரு புகழ் மிக்க நடிகையாக வருவார் என்று நினைக்கிறேன்.

என்னைத் தமிழ்ப் படவுலகுக்கு அறிமுகப்படுத்திய ஏ. கே. வேலன் அவர்கள் தயாரிக்கும் 'தைப் பிறந்தால் வழி பிறக்கும்'...

'கைதியின் காதலி' என்ற படத்தில் நடிக்கும் விஜயலக்ஷ்மியுடன் நான் ஆர். வி. பிக்சர்ஸ் படத்தில் நடிக்கிறேன்.

'நங்கம் மனசு தங்கம்' படத்தில் விஜயகுமாரியுடனும், எம். ஆர். ஜெ. கம்பெனியார் தயாரிக்கும் படத்தில் தாம்பரம் லலிதாவுடனும் நான் நடித்து வருகிறேன்.

விஜயகுமாரி ஒரு நல்ல நடிகை. யாருடனும் சகஜமாகப் பழகிப் பேசும் தன்மை கொண்டவர்.

தாம்பரம் லலிதா எம். என். ராஜத்தைப் போலவே தமிழை நன்ருகப் பேசுகிருர்; நன்ருக நடிக்கிருர். இவர்களுடன் எல்லாம் நான் பல படங்களில் நடிக்காததால் அதிகம் சொல்ல முடியவில்லை.

ஆனால் தாம்பரம் லலிதாவைப் பற்றி இன்னும் ஒன்று என்னல் சொல்ல முடியும்.

திருவனந்தபுரம் லலிதாவில் ஆரம்பித்த எனது இக்கட்டுரையை தாம்பரத்தில் வந்து முடித்த பெருமை இவருக்கே சேரும் அல்லவா? ★

சேவல் மார்க்கு உயர்தர ஊதுவத்திகள்- வாசனைகள், கஸ்தூரி பத்தி, கதம்ப அத்தர், சுத்த சந்தன முகப்பவுடர், மட்டிப்பால் பத்தி, புனுகு, அரகஜா, வாசனை சந்தனப்பவுடர் ப்ளவர் டஸ்டு பாக்கெட் (அடைப்பெட்டியில் வைக்க).

கூந்தல் செழிக்க

நீலா

"நஞ்சன்கூடு பல்பொடி" பாக்டெரி தயாரிப்பு

பல விருத்திக்கு : ஆல்மன்டைன், ஓஜோலா.

சோல் ஏஜண்டு : யுனைடெட் கன்ஸர்ன்,

56, பந்தர் தெரு, சென்னை-1.

★ ஆளுக்கொரு வீடு ★

படவுலகில் நிறைய அனுபவம் கொண்ட பி.என். பிள்ளையின் சுபாஷ் மூவீஸார் "ஆளுக்கொரு வீடு" என்ற பெயரில் ஒரு தமிழ்ப்படத்தை மின்னல் வேகத்தில் தயாரித்து வருகிறார்கள். கிருஷ்ணன் டைரக்ட் செய்யும் இப்படத்தில் சத்யன், விஜயலக்ஷ்மி, பேபி மாலதி, டி.ஆர். ராமச்சந்திரன், தாம்பரம் லலிதா முதலியோர் நடித்து வருகின்றனர். வாஹினி-விஜயா ஸ்டுடியோவில் வளரும் இதன் சங்கீத டைரக்டர்கள் விசுவநாதனும் ராமமூர்த்தியும். விரைவில் இப்படம் திரைக்கு வந்துவிடும்.

வாழ்க்கையின் அன்றாடச் சம்பவங்களைக் கொண்டு பின்னப்பட்ட ஒரு முற்போக்குச் சித்திரமாக இது அமையும்.





குறைந்த பக்ஷம் இரண்டு வீசை கனமாவது இவர் உடம்பில் ஏறி இருக்கும்! மலர்களும் அணிந்து மகிழ்ச்சியோடிருக்கும் இவள் யார்? ஆர். ஆர். பிக்சர்ஸின் பெயரிடப்படாத படத்தில்

ஒரு கட்டழகியின் கண்களும் உதடுகளும் கையிலுள்ள மலரும் விரிந்திருக்கின்றன என்ருல், அங்கே மன்மதனுக்கு வேலை கிடைத்து விட்டது என்று அர்த்தம்! விநாயகா பிக்சர்ஸாரின்

புதிய வெளியீடுகள்

ராஜசேவை

தயாரிப்பு:	ஸ்வஸ்திஸ்ரீ
டைரக்ஷன்:	கே. காமேஸ்வர ராவ்
நீளம்:	16,257 அடி
வெளியிட்ட தேதி:	2-10-59
வசனம்:	தஞ்சை ராமய்யா தாஸ்
நடிகர்கள்:	என். டி. ராமராவ். நாகய்யா, ரங்கராவ், சௌகார் ஜானகி, கண்ணாம்பா, கிரிஜா.

மக்கட்பேறில்லாத மன்னன் மகிபாலன், தம்பி விக்ரமனின் மகனை வளர்த்து வருகிறான். இந்த உத்தம குமாரனையே இளவரசனாகவும் அரசனாகவும் செய்ய அக்கிரமங்கள் பல செய்கிறான் விக்ரமன். இவனது அடாத செய்கைகளுக்குப் பலியான ஒரு பேதைப் பெண்ணின் தந்தையான மலைவாசி பொம்மண்ணா என்பவன் அரச குடும்பத்தையே வேரறுப்பதாகச் சபதம் செய்கிறான்,

விக்ரமனின் கொடுமைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்த காரணத்தால் சிற்றரசன் விஜயவர்மன் குடும்பத்துடன் பழி வாங்கப்படுகிறான். அவன் மனைவி மக்களைப் பிரிந்து மலைவாசிகளுடன் சுக்கிரதாரா என்ற பெயரில் அலைகிறான். அவன் மகன் விஜயகுமார் வயது வந்த பிறகு வாலிபனாகி வக்கிரதாரா என்ற பெயரில் சுக்கிரதாராவைக் கைதுசெய்யப் புறப்படுகிறான். இதற்கிடையில் விக்ரமனால் கொல்லப்பட இருந்த இளவரசியைக் காப்பாற்றி வளர்த்து வருகிறான் விஜயவர்மன். சந்தர்ப்ப வசத்தால் இளவரசியைக் காட்டில் சந்திக்கிறான் விஜயகுமார். இருவருக்கும் காதல் ஏற்படுகிறது. ஆனாலும் கடமையிலிருந்து தவறாமல் சுக்கிரதாராவைக் கைது செய்து மகிபாலன் முன் நிறுத்துகிறான் விஜயகுமார். அப்போதுதான் அவனுக்குத் தன் பெற்றோர்கள் யாரென்று தெரிகிறது. பிறகு பகிரங்கமாக விக்ரமனை எதிர்த்துக் கொன்று வெற்றி வாகையுடன் இளவரசியின் மணமாலையையும் சூடுகிறான் விஜயகுமார்.

ஏராளமான கதாபாத்திரங்கள் கதையை ஓரளவு குளறுபடி செய்து விட்டாலும் படம் பார்ப்பதில் சலிப்பேற்படாத வகையில் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆடல், பாடல், சண்டை, அழுகை, ஆத்திரம் முதலிய வழக்கமான அந்தனை அம்சங்களும், "புதுமையற்ற கதையின் கருத்தும், கண்ணாம்பாவின் "அத்துபடி" நடிப்பும் இப்படத்தை

முதல் முறை பார்க்கும் போதே இரண்டாம் முறையின் அனுபவத்தைத்தான் ஏற்படுத்துகின்றன.

ஓடிவிளையாடு பாப்பா

தயாரிப்பு: ஜெகந்ஜோதி
டைரக்ஷன்: வி. ஸ்ரீனிவாசன்
நீளம்: 14,517 அடி
வெளியிட்ட தேதி: 2-10-59
கதை, வசனம்: அப்பன்ராஜ்
நடிகர்கள்: எஸ். எஸ். ராஜேந்திரன், சரோஜாதேவி, ஜி. சகுந்தலா, எஸ். வி. சகஸ்ரநாமம்

எழுத்தாள மேதை ராஜாவுக்கு ஏற்ற அருங்குணவதி மனைவி லக்ஷ்மி. அவனது அறிவு சுடர் விடுவதற்கு அவள்தான் தூண்டுகோலாக இருந்தாள். ஆனால் விதி விடுகிறதா? இருவரையும் பிரித்தது. ராஜாவின் வாழ்வில் இருள் கவிந்தது. கற்பனையூற்றும் வற்ற ஆரம்பித்தது.

அப்போது அவன் வாழ்விலே தோன்றினாள் ராதா என்ற புதுமைப் பெண். மீண்டும் மலர ஆரம்பித்தது அவன் உள்ளம். என்னதான் இருந்தாலும் ''இயற்கை மலர்ச்சி'' அதில் இல்லாததால் அவனது எழுதுகோல் பாதைவிட்டு விலகியது.

மக்களின் பாராட்டுதல்களுக்கு மட்டும் குறைவில்லை. பொன்னாடை கூடப் போர்த்தி அவனை வானளாவப் புகழ்ந்தது இவ்வுலகம். அவன் மனம் என்னவோ மகிழவில்லை.

கடைசியில்...விதி, அவனை லக்ஷ்மிக்குக் காட்டிற்று—மாசற்றவளாக! ஆனால் அவளது ஆவி பிரியும்போதுதான் அவள் உத்தமியென்பதை அவன் உணர்ந்தான். ராஜாவும் ராதாவும் புதுவாழ்வைத் துவக்கினர்.

தலைப்புக்கும் படத்துக்கும் சம்பந்தமற்ற இந்தக் கதையை எழுத்தில் படிக்கும்போதுதான் ரஸிக்க முடியுமே தவிர, சினிமாப் படமாகப் பார்க்கும்போது சலிப்புத் தட்டுகிறது. அன்றியும் திடீரென்று விபத்து ஏற்பட்டு, லக்ஷ்மியின்



கால்கள் முறிந்து, அவன் அவனை விட்டுப் பிரிந்து, அதனால் அவன் மனம் சோர்ந்து, கடைசியில ராதாவைப் பார்த்து ஓரளவு மனம் தேறுவது எழுத்தாளனின் உயர்ந்த பண்புக்கு ஒத்துவராத ஒரு கற்பனை. லக்ஷ்மியைக் கடைசிக் கட்டத்தில் அவன் சந்தேகிப்பதைப் போன்ற கொடுமை வேறில்லை.

ராஜேந்திரனின் அமரிக்கையான நடிப்பும், ஜி. சகுந்தலாவின் அடக்கமான நடிப்பும் இப்படத்தின் சிறப்பான அம்சங்கள்.

காவேரியின் கணவன்

தயாரிப்பு: அருணாசலம் ஸ்டுடியோஸ்
டைரக்ஷன், கதை, வசனம்: ஏ. கே. வேலன்
நீளம்: 13,956 அடி
வெளியிட்ட தேதி: 27-9-59
நடிகர்கள்: சௌகார் ஜானகி, சூர்யகலா, முத்துகிருஷ்ணன், பக்கிரிசாமி.

டாக்டர் ஏகாம்பரத்தின் பாலிய வயது மனைவி காவேரி ஏழையென்பதால் மாமியாரால் வீட்டை விட்டுத் துரத்தப்பட்டுக் காவேரி யாற்றில் விழுந்து விடுகிறாள். அவனது இரண்டாம் மனைவி ஒரு குழந்தையை அவனிடம் விட்டு விட்டு இறந்து விடுகிறாள்.

ஆற்றில் விழுந்த காவேரி காலப் போக்கில் டாக்டர் வீட்டிலேயே வேலைக்காரியாக வந்து தனது சக்களத்தி குழந்தைக்குத் தாதியாகிறாள். ஆனால் வெகு சீக்கிரத்தில் அவள் யாரென்பது தெரிந்து விடுகிறது. ஆனாலும் அவள் தன் கணவனை ஏற்றுக் கொள்ள மறுத்து விடுகிறாள். கடைசியில் குழந்தை நோய்வாய்ப்பட்டு. பிரிந்த தம்பதிகளை ஒன்று சேர்க்கிறது.

சின்னஞ் சிறிய இக்கதையைப் புத்தம் புதிய முறையிலே விறுவிறுப்புக் குன்றாமல் படமாக்கி யிருக்கிறார்கள். உணர்ச்சிமயமான கட்டங்கள் கதையின் பிடிப்புக்குக் காரணமாக அமைந்துள்ளன. நல்ல சில பாடல்களும் கதையின் புதுமையும் இப்படத்தின் சிறப்பான அம்சங்கள்.

உலகம் சிரிக்கிறது

ஏழை சங்கர் தன் மாமா மகள் செல்லத்தைக் காதலிக்கிறான். செல்லத்தின் தகப்பனாரோ பணக்காரனான குமாருக்கு அவளை நிச்சயம் செய்கிறார். ஆனால் குதிரைப்பந்தயத்தில் திடீர்க் குபேரனான சங்கர் செல்லத்தை மனைவியாக அடைகிறான்.

தயாரிப்பு: பிரபு பிலிம்ஸ்
டைரக்ஷன்: ஆர். ராமமூர்த்தி
நீளம்: 14,563 அடி
கதை, வசனம்: துறையூர் மூர்த்தி
வெளியிட்ட தேதி: 2-10-59
நடிகர்கள்: எம். ஆர். ராதா, பிரேம் நஸீர், முத்துராமன், வி. கே. ராமசாமி, சௌகார் ஜானகி கே. வி. சாந்தி மீனாக்ஷி.

டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER

இது கண்டு பொறுக்காத குமார் சங்கரைக் குதிரைப் பந்தயப் பித்தனாக்கி அவனைக் குட்டிச்சுவராக்கி விடுகிறான். மாமனாரையும் மானத்தையும் இழந்த சங்கர் தற்கொலைக்கும் துணிந்து கடைசியில் தகுந்த சமயத்தில் காப்பாற்றப்பட்டு உயிர் பிழைக்கிறான்.

குமாரின் காலேஜ் காதலி சுந்தரி அவனால் வஞ்சிக்கப்பட்டும் எப்படியோ ஒரு மனிதரை மணந்து கொண்டு சுகமாக வாழ்கிறாள். இதையும் பொறுக்காத குமார் அந்த மனிதனையும் குதிரைப் பந்தயத்தில் இழந்துவிட்டு, அவன் மனைவியையும் சந்தேகிக்கும்படிச் செய்கிறான். அவனுக்குப் பயித்தியம் பிடிக்கவே, வாழ்விழந்த மீனாட்சி குமார் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ள முயற்சிக்கிறாள்.

ஊருக்கு நல்லது செய்வதில் இன்பம் காணும் நண்பன் ஒருவன் குமாருக்குப் பாடம் கற்பிக்க முயற்சித்து அவனுக்குப் பேராசையை {உண்டாக்கிக் குடிப்பதிலும் மற்ற கெட்ட வழக்கங்களிலும் ஈடுபடுத்தி குமாரை ஓட்டாண்டியாக்குகிறான். அதே சமயம் சுந்தரியும் குமார்மீது திராவக பாட்டிலை வீசி அவன் உடலை வேகச் செய்கிறாள். சாகு முன் புத்தி திருந்துகிறான் குமார். தனது தந்தையிடமிருந்த ஆஸ்தியை சங்கருக்குக் கொடுக்கும்படிச் சொல்லி விட்டு உயிர் விடுகிறான்.

வந்துபோன சம்பவங்களைக் கொண்டு புனையப்பட்ட கதைதான் என்றாலும் கூடுமான வரை விறுவிறுப்பு இருக்கும்படிப் படமாக்கியிருக்கிறார்கள். இளைஞர்களான புது முகங்கள் நிறைய இப்படத்தில் தங்கள் திறமையைக் காட்டியிருக்கின்றனர். எம். ஆர். ராதாவின் பாத்திரம் கதைக்கு ஒட்டாவிட்டாலும் கதையை ஓட்டுவதற்குத் துணை செய்கிறது. உலகத்தில் நடக்கும் சர்வசாதாரண நிகழ்ச்சிகளைக் கொண்ட படம்தான் உலகம் சிரிக்கிறது.

மேகலாவின்
குறவஞ்சி
காட்சிகள்
சிங்கம்
PSR

எண்சாண் உடம்பிற்கு இரு விழிபோல்
எழில்முல்லைத் தோட்டத்திற்கு வேலி போல்
இன்பபுரிப் பேரரசுக்கு எல்லைப்புறம்—
அங்கே சிற்றரசன் சிறுமதியோன் முகாரி
மந்திரியாக வாய்த்தவனே ஒரு மாபாவி.

ஆண்டவன் நமக்கேன் அழகைப் படைத்தான்
என்று பெண்கள் கவலைப்படும் பிரதேசத்தில்
மாண்டவரை நினைத்துப் புலம்பியதோடு மட்டுமல்ல;
பூண்டோடு ஒழிப்பேன் பொல்லாதவரை,யென்று
சிங்கம் இடிமுழக்கம் செய்து!

செங்கோல் பிடித்தவனின் செல்வி
சிங்காரப் பைங்கிளியாம் குமரி!
பொங்கு கடல்போல எழுந்தவனின் பின்னே
மங்காத நிலவாகப் புறப்பட்டாள்
மாநிலம் காப்பதற்கே!



பிஞ்சு மாங்காய் பிளந்ததுபோல்
கண் படைத்த வஞ்சி
பேசுகின்ற சித்திரமாய் புகுந்து விட்டாள்
—நெஞ்சில்!

ஆணவக் குலமாம் மன்னவர் குலமென
அழகி குமரியை விடுத்து—கதிரவன்,
மீனவக் குலத்து மங்கையைத் தொட்டான்.

சாதியெனும் படை கூட்டி
சாத்திரத்தைத் துணைக்கழைத்து
நல்லவரும் கெட்டவரும் இணைந்து நின்று
பொல்லாத் தீர்ப்புதனை வழங்கி விட்டார்
பொதுமக்கள் எரிமலையாகி விட்டார்.

கொடுவிலங்குகளை மாய்க்க வந்த வீரன்
கோலேந்தி நாடாளும் மன்னவனின் போக்கால்
தடுமாறி நின்றிட்ட காட்சி
தணல் வீழ்ந்த புழுவின் நிலையினைக் காட்டும்.
அனல் போலும் சொற்கொட்டிச் சென்றான்
புனல் போக்கும் விழியாளும் நிலைமாறி நின்றாள்.





நடிப்புக்கோர் திலகமெனத் திகழ்கின்ற—செம்மல்
நாடெங்கும் கலைத்திறத்தால் புகழ் மணக்கும்
பூமணக்கும் பொற்பாவையுடனே
பேராற்றல் காட்டுகின்ற பெரு நடிகர் குழுவும்
பாராட்டுப் பெறுகின்ற பான்மையிலே நடித்து...

தமிழ் கொழிக்கும் எழுத்தாலே
தன் மானம் செழிக்கின்ற கருத்தாலே—பட
அமைப்பு முறை—படைப்பு முறை தனிசிறக்க
மேன்மைமிகு மேகலா தருகின்ற
'குறவஞ்சி' குறையில்லா திரை விருந்தாம்! உண்ணவாரீர்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு — குறள்

— வி. கோபாலகிருஷ்ணன் கூறுகி

கடவுள் இருக்கிறார். எப்படியோ எங்கேயோ இருக்கிறார். என் வாழ்வில் நான் கண்ட அனுபவ உண்மை இது. ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் இப்படி கடவுளை அறியும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கவே செய்யும். ஆனால் எல்லோரும் அதைக் குறிப்பாக உணருகிறார்களா என்பதுதான் பிரச்னை. சினிமாவில் சேர்ந்து நடிப்பதை விடப் பட்டம் பெற்றுப் பிறகு படங்களில் நடிக்க வேண்டுமென்ற விருப்பமுள்ளவனாக இருந்தேன் நான். அதற்குக் காரணமாக இருந்தவர் நான் நேரில் கண்ட தெய்வமான டைரக்டர் கே. ராம்னாத் அவர்கள்தான்.

இன்று நினைத்தாலும் உடல் புல்லரிக்கிறது. 'நம்மால் ஆவது எதுவுமில்லை. எல்லாமே அவன் செயல்தான்' என்பதை 'அந்த நாள்' எனக்கு அறிவிக்கத்தான் செய்தது.

நாராயணன் கம்பெனியார் பக்ஷிராவின் 'ஏழை படும் பாடு' படத்தில் நடிப்பதற்காக என்னை அடிக்கடி கோவைக்கு விமானத்தில் அனுப்புவார்கள். நான் அப்போது, சென்னையில் படித்துக் கொண்டிருந்தேன். என் படிப்பு கெடக்கூடாது என்பதற்காக டைரக்டர் கே. ராம்னாத் என் விடுமுறை தினங்களில் எனக்கான படப்பிடிப்பை அமைத்துக் கொண்டார். 1949-ஆண்டில் இது நடந்தது.

நாராயணன் கம்பெனியார் என்னை வழக்கம்போல கோவைக்குக் கிளம்பச் சொன்னார்கள். என்னிடம் ஒரு பெருந்தொகையையும், ஷூட்டிங் செலவுகளுக்காகக் கொடுத்தார்கள். சாதாரணமாகப் படப்பிடிப்பு என்றால் எனக்கு ஒரு உற்சாகமிருக்கும். ஆனால் அன்று ஏனோ எனக்குக் கோவை செல்லவே விருப்பமில்லை. ஆனால் எனக்காக யாவரும் தங்கள் சௌகரியங்களைக் குறைத்துக் கொள்ளும்போது நான் மட்டும் மற்றவர்களின் சௌகரியங்களை அனுசரிக்காமலிருப்பது முறையாகுமா?

ஆகவே விரும்பியோ, விரும்பாமலோ கிளம்பத் தயாராகிவிட்டேன். ஏற்பாடுகளை முடித்துக்கொண்டு விமான நிலையத்திற்குச் சென்றேன். அங்கே வருவோரும் போவோருமாக யாவரும் குதூகலத்துடனிருந்தனர். ஆனால் என்மனம் மட்டும் சோர்வடைந்திருந்தது.

அப்போது எனக்கு ஒரு தந்தி வந்திருப்பதாகச் செய்தி வந்திருந்தது. "இன்று புறப்படாதே. இன்னும் சில தினங்கள் கழித்து எழுதுகிறேன். அப்போது வரவும்" என்று டைரக்டர் ராம்னாத் எனக்குத் தந்தியடித்திருந்தார்.

ஊருக்குப் போகும்போது சாதாரணமாகச் சிறு வயதினருக்குக் குஷியாக இருக்கும். ஆனால் பிரயாணம் தடைப்பட்டதே என்றுதான் நான் மகிழ்ச்சியடைந்தேன். விமானம் புறப்பட்டது; நான் வீடு திரும்பினேன். அந்த மகிழ்ச்சி அதிர்ச்சியாகவும் பெருமகிழ்ச்சியாகவும் அமைந்தது!

அன்று புறப்பட்ட விமானம் விபத்துக்குள்ளாகியது. அதில் பிரயாணம் செய்தவர்களில் ஒருவர்கூடப் பிழைக்கவில்லை...!

தெய்வத்தை நாம் பார்க்கிறோமா, இருப்பதை ஒப்புக்கொள்கிறோமா என்ற பிரச்னை ஒருபுறம் இருக்கட்டும். நமக்கு மீறிய சக்தி ஒன்று நம்மை ஆட்டி வைக்கிறதே, அதற்குத் தலைவணங்கத்தானே வேண்டும்? தெய்வம் மற்றொருவர் மூலமாக நமக்கு உதவி செய்யும் என்பார்கள். எனக்கு கண்கண்ட தெய்வமாக விளங்கியவர் ராம்னாத். அவர் மூலமே கடவுள் என்னைக் காப்பாற்றினார்.

நான் கடமைப்படி கிளம்ப வேண்டியவன்தான். ஆனால் கடைசி நேரத்தில் விமான நிலையத்திற்குச் சென்றபின் எனக்கு ராம்னாத்திடமிருந்து தந்தி வருவானேன்? கடவுளின் கருணையைத் தவிர, இதற்கு வேறு என்ன காரணம் கற்பிக்க முடியும்?

என் நண்பர்களும் உறவினர்களும் இந்தச் செய்தியறிந்து வேதனையும் மகிழ்ச்சியும் அடைந்தார்கள். நான் கடவுளின் கருணையை அனுபவ வாயிலாகக் கண்டேன்.

நான் ரஸித்த காட்சி

ஓடிவிளையாடு பாப்பா

புத்தக வெளியீட்டு நிலையத்தி லிருந்து சோர்ந்துபோய் வீடு திரும்பு கிருன் ராஜா. அவன் மனைவி லக்ஷ்மி தன் கணவன் கவலையோடு வருவது கண்டு அலக்ஷியப்படுத்தாமல் அவன் மனதை மகிழ்விக்கும் வகை யில் வரவேற்று உபசரிக்கிருள். அவனது கடன்காரனிடமிருந்து நோட்டீஸ் வந்திருக்கிறது. அதைப் பற்றியும் கணவனிடம் அவள் கூற வில்லை. அவன் எழுதுவதற்குக் காகி தம் கேட்கிருன். ஆனால் வீட்டில் காகிதமில்லை. இதைக் கூறினல் அவன் கற்பனை சிதறிவிடும். ஆகவே உத்தமியான அவள், சுவற்றிலே தொங்கிக் கொண்டிருக்கும் பாரதி யாரின் படத்தை எடுத்து அதை

"நானிருக்கிறேன். நீ எதற்கும் பயப்படாதே" என்று அவளை அவர் தேற்றுகிருரோ? ஜுபிடர் பிக்சர்ஸ் தயாரித்துவரும் 'அமுதவல்லி'யில் டி. ஆர். மகாலிங்கம், எம். என். ராஜம்.



இனி எங்களைப் பிரிக்க யாராலும் முடியாது! — கலைமகள் பிக்சர்ஸாரின் 'கனவு பலித்ததம்மா' தமிழ்ப் படத்தில் டி. ஆர். மகாலிங்கம், மைனாவதி.

மடித்து அவனிடம் தருகிறாள். இதையறிந்த ராஜா தன் மனைவியின் அரும்பணி கண்டு ஆனந்திக்கிறான். கணவனிடம் மனைவி நடந்து கொள்ள வேண்டிய விதத்தையும் அதனால் இல்லற வாழ்வில் ஏற்படக்கூடிய ஆனந்தத்தையும் விளக்கும் அருமையான காட்சி இது.

பி. வி. புரட்சிதாசன்,
சென்னை.

பாக்ய தேவதை

கிரி லலிதாவை காதலிக்கிறான். ஆனால் அவள் தங்கை சரளாவை மணக்க நேரிடுகிறது. லலிதா மூர்த்தியைத்தான் காதலிக்கிறாள். அவனையே மணக்கவும் செய்கிறாள். அவளை ஒருதலைப் பட்சமாகக் காதலித்த கிரி, மணமான பின்னும் வேறொருவன் மனைவியான அவளை அடைய முயற்சிக்கிறான். நவநாகரீக மங்கையான லலிதா தனக்கு இணங்கி விடுவாள் என்று தப்புக் கணக்குப் போட்டு, அவளைப் பலவந்தமாக அடைய முயற்சிக்கிறான். லலிதா புலியெனச்சீறி அவனை அடித்து விரட்டி விடுகிறாள். நாகரீக மோகம் கொண்டவளானாலும்கூட ஒரு பெண் ஒருவனைத்தான் நேசிப்பாள் என்பதை விளக்கும் ரசமான காட்சி இது.

எம். குமாரசாமி,
மரக்காணம்.

கல்யாண வீடு அமர்க்களப்படுகிறது. மணப்பந்தலில் மாப்பிள்ளை மகிழ்ச்சியோடு அமர்ந்திருக்கிறார். ஆனால் மணப்பெண் ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு வீட்டைவிட்டு வெளியேறி விடுகிறாள். பெண் வெளியேறி விட்டதை இரண்டாவது மகள் மூலம் அறிந்து தாயார் துடிதுடிக்கிறாள். அதே சமயம் அங்குவந்த மணமகனின் தகப்பனார் 'என்ன நடந்தது?' என்று விசாரிக்கிறார்.

தன் மகள் ஓடிவிட்டதைக் கூருமல், 'வேருெருவரை மணக்கப் போகி ருள்' என்கிருள் தாயார். மற்றவர் முன் மகளைத் தாழ்த்தாமல் உயர்த் தியே மிடுக்குடன் பேசுகிருள். புத்திரபாசத்தின் சிறப்பை வெளிப் படுத்தும் காட்சி இது.

வி. கோசன்,
வலம்புரி.

காவேரியின் கணவன்

டாக்டர் வேலைக்காரியின் கணக் கைத் தீர்த்து அனுப்பிவிடுமாறு கூறி விட்டுத் தன் மகனை உள்ளே அழைக் கிருர். ஆனல் அந்தப்பையன் அவ ளிடம் வளர்ந்தவன். வளர்த்த பாசம் காரணமாக 'வா அம்மா!' என்று கூப்பிடுகிருன். வளர்த்த பாசத்தின் பெருமையைச் சித்தரிக் கும் இந்த ரசமான காட்சியை நான் வெகுவாக ரசித்தேன்.

த. சுந்தரவீராசாமி,
தஞ்சாவூர்.

மரகதம்

அனந்தராரிடம் தான் வந்த காரி யம் பற்றிக் கூறிக்கொண்டே வருகி ருன் வரேந்திரன். அவன் தன் மைத்துனன் என்பதை யறிந்து விட்ட அனந்தரர் அவனை எப்படியும் கைகழுவி விடவேண்டும் என்று தீர் மானிக்கிருர். ஆனல் வரேந்திரனே அலமுவை மணப்பதாகக் கூறுகி ருன். அவர் திடுக்கிடுகிருர். அவள் தீண்டத்தகாதவள் என்று கூறுகி ருர். ஆனல் ''மணந்தால் அவளையே மணப்பேன்'' என்று உறுதியாகக் கூறுகிருன் வரேந்திரன். உண்மை யான காதல் அவனுடையது. மன தார நேசிக்கும் ஒருவனுக்கு ஜாதி மதபேதங்கள் எதுவும் கிடையாது என்பதை விளக்கும் அருமையான காட்சி இது.

ஸி. குப்புசாமி,
திருச்செங்கோடு.

''இதோ பார்! நான் அழகாக இல்லையா?'' என்று கேட்கிருரா அவர்?—ஆர்.ஏ. பிக்சர்ஸ் 'பண்ணையார் மகன்' படத்தில் டி. ஆர். மகாலிங்கம், மாலினி.

BREAK SEAL
BI-COLATES
STEARNS
MARTIN & HARRIS (PRIVATE) LIMITED
CALCUTTA, INDIA
பித்தநீர் ஊற்றை
அதிகமாக்குகிறது
லிவருக்கு
ஊக்கமளிக்கிறது
பை-கொலேட்ஸ்*
ஸ்டேர்ண்ஸ்
கல்லீரலின் குறைவு
வழக்கமான மலச்சிக்கல்
பித்தப்பையில் உண்டாகும் கட்டி
இவைகளின் சிகிச்சைக்கு
* REGISTERED USERS OF TRADE MARK AND SOLE AGENTS.
MARTIN & HARRIS (PRIVATE) LTD.
CALCUTTA • BOMBAY • MADRAS • DELHI

பால் வடியும் வதனம் என்பார்களே, அது இதுதானே?—ஆர். ஏ. பிக்சர்ஸ், தயாரிக்கும் "பண்ணையார் மகன்" படத்தில் பாலினி.

தன் காதலி ஒரு ஆடவனுடன் இரவில் ஊருக்கு வெளியே அடிக்கடி சந்தித்துப் பேசி வருகிருள் என்பதைத் தன் சகோதரி மூலமே அறிகிருன் வரேந்திரன். ஆனுலும் கூடக் கவலைப்படுவதற்குப் பதில் அக்காவுக்குத் தைரியம் கூறிவிட்டுக் கிளப்புகிருன். யார் யாரோ என்னென்னமோ கூறியும் கூட அவன் மனதில் துளிக்கூட அலமு பற்றிச் சந்தேகமே ஏற்படவில்லை. ஒரு மனிதனின் வாழ்க்கையையே வீணடிப்பது சந்தேகப்பேய்தான். அதற்கு இடம் கொடாத வரையில் அவன் வாழ்வில் துன்பத்திற்கு இடமும் கிடையாது. அவன் நல்ல உள்ளம் கொண்டவனுக இருந்தால் அவன் வாழ்க்கையில் வெற்றி பெற்றே தீருவான்.

இரா. பத்மினி,
விருதுநகர்.

மரகதம் மாறுவேடத்திலிருந்த வரேந்திரனை தன் தகப்பனுர் என்று நினைத்து, மரகதம் என்பது தானே என்றும் மேலும் பல உண்மைகளையும் கூறி விடுகிருள். வரேந்திரன் விஷயமறிந்து வாய்விட்டுச் சிரிக்கிருன். மரகதம் திடுக்கிடுகிருள். வரேந்திரன் வேஷத்தைக் களைகிருன். மரகதம் தவித்துப் போகிருள். வரேந்திரன் அவளைச் சமாதானப்படுத்திவிட்டு, தான் என்றுமே அவளுக்காகவும் ஜமீனின் நன்மைக்காகவும் பாடுபடத் தயாராக இருப்பதாகவும் அது முடிவதற்காக அவளுடன் ஒத்துழைக்கத் தயார் என்றும் கூறுகிருன். மரகதம் அவனது உள்ளப்பண்பு கண்டு மனமகிழ்ந்து போகிருள், ''உத்தமமான எண்ணமுடையவன் எந்தக் காலத்திலும் காதலியைச் சந்தேகிக்க மாட்டான். நாட்டுக்காக உண்மையாகப் பாடுபடத் தயங்கமாட்டான் என்பதை விளக்கும் அருமையான காட்சி இது.

ஸம்பத்,
சென்னை.

வாழ்க்கை ஒப்பந்தம்

வாழ்க்கை ஒப்பந்தம் செய்து வைத்த பெரியவர், 'காதல் கண்டம் வரும். அதிலிருந்து தப்ப மனேஉறுதி தேவை' என்கிருர். ஆனுல் மணமான கிருஷ்ணன், தன் காரியாலயத்திலிருக்கும் ராதா என்ற பெண்ணிடம் ஆசை வைக்கிருன். அவனது மன உறுதியின்மையைக் கண்டித்து விரட்டுகிருள் ராதா. தவறுணர்ந்த கிருஷ்ணன் வீட்டுக்குப் போகிருன். மனைவி ருக்மணியை தேடுகிருன். அவளைக் காணவில்லை. அவள் எழுதி வைத்து விட்டுச் சென்ற கடிதம் கண்டு மனமுருகிப் போகிருன். கைக்குழந்தை அழுகிறது. அதைச் சமாதானப்படுத்துவதற்குள் போதும் போதும் என்று ஆகிவிடுகிறது. மனே உறுதி தளர்ந்தால் ஆண்களும் பெண்களும் மிகவும் கஷ்டப்பட நேரிடும் என்பதை விளக்கும் ரசமான போதனைக் காட்சி இது. ஆண், பெண்ணுக்கு விடப்படும் எச்சரிக்கையும் கூட.

எம். ஜி. பார்த்தசாரதி,
தாம்பரம்.

விளம்பரம் வாழ்வு தருமா?

..... சந்திரகாந்தா ....

விளம்பரம் வாழ்வு தருமா? நிச்சயமாகத் தரும்; திறமையும் கூட இருந்து விட்டால். நான் என் சிறிய அனுபவத்தில் கண்ட உண்மை இது.

அப்போது நான் என் மூத்த சகோதரி நவனீதத்திடம் முறையாக நடனம் கற்று அவளுடனேயே நடனக் கச்சேரிகளுக்கும் சென்று வந்தேன். என் சகோதரி தண்டாயுதபாணியிடம் சிக்ஷை பெற்றவள். என் மூத்த சகோதரி வத்ஸலாவின் கணவர் எஸ். எஸ். பி. லிங்கம் (அவர் இப்போது அண்ணா பிலிம்ஸ் என்ற கம்பெனியை ஆரம்பித்து "எல்லாம் நன்மைக்கே" என்ற படம் பிடிக்கிறார்) என்னை நல்ல முறையில் விளம்பரம் செய்தார். இதனால் எங்களுக்கு நிறைய கச்சேரிகளுக்கு வாய்ப்பு கிடைத்தது.

திரு. கே. ஆர். ராமசாமியும் லிங்கமும் நண்பர்கள். ராமசாமி 1956-ல் மலாயாவுக்கு நாடகங்கள் நடத்தக் கிளம்பினார். அப்போது எங்களது நடன விளம்பரங்களைப் பார்த்திருந்த ராமசாமி, என்னை தனது கோஷ்டியுடன் அனுப்புமாறு கேட்டார். வீட்டார் விரும்பாத போதிலும் லிங்கம் முன் நின்று அனுப்பி வைத்தார்.

இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. நான் எப்படியும் போகத்தான் வேண்டுமென்று பிடிவாதம் பிடித்ததுதான் அது. என் சகோதரியின் கணவர் லிங்கத்தின் நெருங்கிய நண்பர் கே. ஆர். ராமசாமி என்றேன். அவருக்குப் பெண் குழந்தை கிடையாது. குழந்தையாக இருக்கும்போது என்னைத் தூக்கிக் கொண்டு அவர்

வீட்டுக்குப் போய் விடுவார். ஆகவே, "என் மகளை அனுப்பி வையுங்கள்" என்று அவர் கூறியதும் எனக்கு அவருடன் போக வேண்டுமென்ற ஆவல் அளவிட முடியாததாகி விட்டது. பிறகு மலாயா நாடக மேடையில் அவர் என்னை தன் மகள் என்று அறிமுகம் செய்து வைத்தார். அதே சமயம் அவருக்கு வீட்டில் மகள் பிறந்திருப்பதாகச் செய்தி வந்தது.

முன்பின் நாடக அனுபவமில்லாத நான் அனுபவமிக்க நாடக நடிகர்களுடன் கிளம்பி விட்டேன்.

முதல் நாள் "வேலைக்காரி" நாடகத்தில் வேலைக்காரியாக நடித்தேன். எனக்கு நடிப்பிலும் அனுபவம் கிடையாது. நாடக மேடையும் புதிது. திணறிப் போய்விட்டேன். திரை விலகியது. நான் மேடைக்குச் செல்லாமல் திகைத்து நின்றேன். தாம்பரம் லலிதா தள்ளிவிட்டார். மேடையின் நடுவே நின்றேன்! பிறகு

ஒருவாறு சமாளித்தேன். ஆனால் மலாயா பத்திரிகைகள் என் நடிப்பைப் பெரிதும் பாராட்டி எழுதியிருந்தன. இப்படிக் கிடைத்த விளம்பரம் என்னைப் பிரதம நடிகையாக்கி விட்டது. பிறகு நடைபெற்ற சந்திரமோகன், துளி விஷம், மனோகரா, காதல் ஜோதி, ஜமீன் மாளிகை முதலிய நாடகங்களில் நான் கதா நாயகியாக நடித்தேன்.

மலாயாவில் ஒரு வேடிக்கை நடந்தது! கே. ஆர். ஆர். உட்பட யாவரையும் திணற அடித்து விட்டேன்! அங்கே எங்களுக்கு ஓய்வு கிடையாது. தினசரி இரண்டு நாடகங்கள் நடக்கும். இரண்டும் முடிந்த பின், மறுதினம் நாடகத்துக்கான ஒத்திகை ஆரம்பமாகி விடும். எனக்கு எந்த நாடகமும் புதிதாகையால், ஆரம்ப முதல் படிக்க வேண்டியிருந்தது. அன்று "துளி விஷம்" முதல் நாடகம் முடிந்து இரண்டாவது நாடகம் நடந்து கொண்டிருந்தது. ஓய்வின்மையால் எனக்கு ஒரே சோர்வாக இருந்தது.

குருதேவர், 'மயங்கிக் கிடக்கும் ராஜகுமாரி இறக்கவில்லை' என்று விளக்கம் கூறி, மயக்கம் தெளிவிக்கும் காட்சி ஆரம்பமாகியது. நடந்த நிகழ்ச்சிகளை விவரிக்கும் காட்சியல்லவா? சுமார் பத்து நிமிடங்களுக்குமேல் தேவர் கதை சொல்லிக் கொண்டிருந்தார். நான் அயர்வு மிகுதியால் தூங்கிவிட்டேன். "இவள் சாகவில்லை; மயக்க முற்றிருக்கிறாள். இதோ எழுந்து விடுவாள்" என்று தேவர் சொல்லும்போது யாவரும் ஆச்சரிய மிகுதியால் ஆனந்தக் கண்ணீர் விட வேண்டும். ஆனால் தேவர் வேடமேற்றவர் திடுக்கிட்டார்! வியர்வை வழிய நின்று, செய்வதறியாது தவித்தார். நான் அயர்ந்து தூங்கி விட்டதால், அவர் மயக்கம் தெளிவிப்பது போல் ஜாடை செய்ததும் நான் எழுந்திருக்கவில்லை! ஒரு வழியாக என்னை எழுப்பினார்கள்! எனக்கு ஒரே வெட்கமாகப் போய்விட்டது.

மலாயாவில் சுமார் மூன்றரை மாதம் நாடகங்களில் நடித்தபின் தாயகம் திரும்பினேன். என்னைப்பற்றி அறிந்திருந்த திரு. சகஸ்ர நாமம், அவருடைய நாடகக் கம்பெனியில் நடிக்க ஒப்பந்தம் செய்து கொண்டார். மல்லியம் மங்களம், நாலு வேலி நிலம், பம்பாய் மெயில், பைத்தியக்காரன் முதலிய நாடகங்களில் நடித்தேன்.

விளம்பரம் எனக்கு நாடக வாழ்வு தந்தது. அதே விளம்பரம் நான் படவுலகில் நுழையவும் காரணமாக இருந்தது. திரு. ஏ. பி. நாகராஜன் என்னைப்பற்றி ஏதோ பத்திரிகையில் படித்தார். என் சகோதரியின் கணவர் லிங்கம் நல்லபடி விளம்பரம் செய்தார். அதன் பலன் நான் சினிமா நடிகையாகத் திகழ்கிறேன்.

அன்று ஒருநாள் அதாவது 1957-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ம் தேதி மாலை நான்கு மணி சுமாருக்கு திரு. ஓ. என். கிட்டுவும் லிங்கமும் என் வீட்டுக்கு வந்தார்கள். கிட்டு, வசனம் பேசச் சொல்லிக் கேட்டார். எம்.ஏ.வி.யின் 'சம்பூர்ண ராமாயணம்' படத்தில் திரிசடை வேடத்தில் நடிக்க அன்றிரவே சேலத்திற்குக் கிளம்புமாறு கூறினார். ஸ்டேஷனுக்கு நாங்கள் செல்லும்போது வண்டி போய் விட்டது. லிங்கம் தன் காரில் எங்களை சேலத்தில் கொண்டு போய் விட்டார்.

செட்டிலேதான் என் வசனப் பகுதியைக் கொடுத்தார்கள். நாடக அனுபவம் காரணமாகச் சில நிமிடங்களில் பாடம் பண்ணி விட்டேன். சினிமா நடிகைகளில் எனக்குப் பிடித்தமானவர் பத்மினி. அவர் சோகக் கட்டங்களில் நடிப்பதை நான் பெரிதும் விரும்புவேன். அத்துடன் அவர் அழுதுகொண்டே கோபிக்கும்

இவர்களிடம் நாம், நக்ஷத்திரங்களிடம் எதிர்பார்ப்பதைப் போல், எதுவும் பிரமாதமாக எதிர்பார்க்காமல் சாதாரணமாகச் சென்று படம் பார்க்கிறோம். "அட! பரவாயில்லையே! இவர் நன்றாகச் செய்கிறாரே! இந்தப் பெண்கூட நன்றாகவே நடித்திருக்கே! என்றெல்லாம் பாராட்டுகிறோம்.

சந்திரகாந்தா! யார்? இவர்? ஆமாம், 'சம்பூர்ண ராமாயணம்' படத்தில் திரிசடையாக, 'பெரிய கோவி'லில் சிறு வேடத்தில் தோன்றிய இளம் நடி. மாயமனிதன் கதாநாயகி இவர். கதாநாயகியாக நடிக்க இவர் தகுதியற்றவர் என்று படம் பார்த்த யாரும் குறைகூற வில்லை. கமலா டாக்டரிடம் தன் காதலனுக்குச் சுய உரு வரவேண்டுமென்று கெஞ்சுகிறாள். தன்னிடம் தவறாக நடக்க முயலும் மெய்யப்பனிடம் புலியாகச் சீறுகிறாள். தன் வீட்டிலேயே கண்ணன் கொள்ளை அடித்ததாகக் குற்றம் சாட்டி, வெளியேறுமாறு கூறுகிறாள். சந்திரகாந்தா கதாநாயகியாகத் தோன்றி கனகச்சிதமாக நடித்திருக்கிறார் இந்தக் காட்சிகளிலே.

'நடிக, நடிகையர்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது' என்ற பொய்க் குற்றச்சாட்டுக்கு இடமில்லை என்பதை சந்திரகாந்தாவைப் போல பல இளம் கலைஞர்கள் நிரூபித்திருக்கிறார்கள். படாதிபதிகளுக்கு. இளம் கலைஞர்களைக் கொண்டு படமெடுக்கும் துணிவு இப்போதுதான் வர ஆரம்பித்திருக்கிறது. ஆகவே நாளடைவில் படங்களில் புதுமுகங்கள் புகுத்தப்படுவதை ரசிகர்கள் பார்க்கலாம்.

காட்சியில் நான் என்னை மறந்து விடுவேன். அன்று என் அதிருஷ்டம் முதன் முதலாக எனக்குப் பிடித்த நடிகையுடன் நடித்தேன். என்ன? நடித்தேனா...? பத்மினி நடிக்கச் செய்தார்.

முதன் முதலாக காமிரா முன் நின்றேன். விளக்குகள் பொருத்தப்பட்டன. பாடமான வசனம் நெஞ்சிலேயே நின்று விட்டது. பத்மினி என்னிடம் வந்து அன்புடன் தலையை வருடியபடி தைரியம் கூறினார். "நான் மலையாளப் பொண்ணு. நானே முதல் படத்திலே இவ்வளவு பயப்படலே. நீ தமிழ்ப் பொண்ணு. இப்படி இருக்கலாமா? தைரியமா பேசு" என்றார். என்னை அவர் தேற்றியதில் எனக்கு அலாதி தெம்பு வந்தது.

ராமாயணம் பற்றிய விளம்பரங்களும் செய்திகளும் வந்தன. என்னைப்பற்றி பலர் அறியும் வாய்ப்பு கிடைத்தது. ராஜநர்த்தகி, மாயமனிதன், சுவீகாரம், விஜயபுரி வீரன், புஷ்பா, எல்லாம் நன்மைக்கே, முதன் மந்திரி முதலிய படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறேன்.

'மாயமனிதன்' படத்திற்காகச் செஞ்சிக்குச் சென்றிருந்தோம். அங்கே ஒரு செங்குத்தான பாறையில் வில்லனும் கதாநாயகனும் சண்டை போடும் போது கதாநாயகி தப்பமுயலும் காட்சி படமாக விருந்தது. ஸ்டன்ட் நடிகர்கள் அந்தப் பாறையின்மேல் ஏறுவது இயலாது என்று கூறி விட்டார்கள். அசோகன் பாதி தூரம் ஏறி

விட்டு இறங்கி விட்டார். டைரக்டர் சுந்தரம் என்னைப் பார்த்தார். 'முதல் படம் நமக்கு நல்வாழ்வு தரவேண்டும்' என்ற வெறியிலிருந்த நான் எப்படி அந்தப் பாறைமீது ஏறினேன் என்பது இன்றுகூட எனக்கு விளங்கவில்லை. நான் பாறைமீது ஏறி நின்றதும், மீதி பேர் சிரமப்பட்டு ஏறி விட்டார்கள். கதா நாயகனும் வில்லனும் மேலே யிருந்து சண்டை போட்டுக்கொண்டு உருண்டபடி வந்தார்கள். அவர்கள் என் அருகே வருமுன் நான் இறங்காவிடில் கீழே அதல பாதாளத்தில் விழுந்து விடுவேன். ஆகவே வேகமாக இறங்கினேன். இறங்கப் பயமாயிருந்தது. ஆனு லும் எதையும் வெளிக்காட்டாமல் வேகமாக ஓடி வந்தேன். அப் போது, கதாநாயகன்மேல் வில்லன் வீசி எறிந்த பாட்டில் உடைந்து ஒரே கண்ணுடித்தூள் நிறைந்திருந்தது. அந்தக் கண்ணு டிக் குவியலில் காலை பலமாக ஊன்றிவிட்டேன். காலெல்லாம் ஒரே ரத்தம். அப்படியே உட்கார்ந்து விட்டேன். பிறகு சமாளித்து நடித்தேன். அந்தப் படம் எனக்கு நல்வாழ்வளித்த தல்லவா?

அப்போது நான் எஸ். வி. எஸ். பார்ட்டியிலிருந்தேன். பசு வங்குடியில் மலைச்சுனையருகே நின்றிருந்தோம். கண்ணுடிபோல் நீர் இருந்து முகம் காட்டிக் கொண்டிருந்தது. தேவிகா நீரை அள்ளிப் பருக வேகமாகப் போனுர். கால்வழுக்கி அந்த ஐஸ் நீரில் விழுந்து விட்டார்! கற்பகம் என்ற நடிகை தேவிகாவை தூக்கப் போய் தானும் கால் வழுக்கி விழுந்து விட்டார். நான் இருவரையும் காப் பாற்ற ஓடினேன். நானும் விழுந்தேன். ஆனுல் யாரும் யாரையும் காப்பாற்றும் அளவுக்கு அந்தச் சுனை ஆழமாக இல்லை! முட்டி யளவு நீர்தான் இருந்தது. நாங்கள் மூவரும் விழுந்ததும் சிரிப் பொலி கேட்டது. திரும்பிப் பார்த்தோம். எஸ். வி. சகஸ்ரநாமம், வி. ஆர். ராஜகோபால் இருவரும் நின்று எங்களைக் கேலி செய் தார்கள்.

"பேசும் படம்" பத்திரிகையில் அசோகன், கண்ணன், சந்திர காந்தா, சந்திரா என்று, "மாய மனித"னில் நடித்த எங்கள் நால் வரைப்பற்றி ஒரு குறிப்பு வெளிவந்தது. நான் சிறிதும் எதிர்பாரா மல் எனக்கு ஒரு விளம்பரம் கிடைத்தது. மலாயாவிலிருந்து திரும் பியதும் என்னைப்பற்றி "பேசும் பட"த்தில் ஏதாவது வரவேண்டும் என்று நாங்கள் விரும்பினேும். அது என்ன காரணத்தாலோ நடக்கவில்லை. இப்போது நாங்கள் எதிர்பாராத விதமாக எனக்கு

விளம்பரம் கிடைத்தது.

சீர்காழிக்கு அருகிலுள்ள திருமயிலாடு கிராமத்தில் டி.என். குஞ்சிதபாதம் பிள்ளை- ராமாமிர்தம் அம்மாள் தம்பதிகளின் ஐந்தாவது குழந்தையாக நான் பிறந்தேன். ‘‘பேசும் படம்’’ பத்திரிகை பிறந்த அதே ஆண்டில் நான் பிறந்தேன் என்பதில் எனக்கு எவ்வளவு பெருமை தெரியுமா? வத்சலா என் பெற்றோரின் முதல் குழந்தை. அவள் கணவர்தான் எஸ். எஸ். பி. லிங்கம். அடுத்தவள்தான் நவநீதம். அவளுக்கடுத்து மணி, ஷண்முகம் என்ற இரு சகோதரர்கள். எனக்கடுத்தபடி பாலசுப்ரமணியம், விஜயகுமார் பிறந்தனர்.

எனக்கு அப்போது ஒன்பது வயதிருக்கும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் பொங்கல் திருநாள் பச்சையப்பன் கல்லூரி திடலில் நடைபெற்றது. கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தலைமை தாங்கினார். ‘பராசக்தி’ படத்தில் ‘வாழ்க வாழ்க’ என்ற பாடல் வருகிறதல்லவா? ராகமாலிகையாக அதைப் பாடவேண்டும் என்ற போட்டி நடக்க இருந்தது. நான் கலந்து கொள்ள விரும்பினேன். வீட்டார் கேலி செய்தார்கள். இருந்தாலும் கலந்து கொண்டேன். முப்பது சிறுமிகளும் ஒரு சிறுவனும் கலந்து கொண்டோம். எனக்குத்தான் முதற் பரிசு. கலைவாணர் எனக்கு பரிசளித்து ஆசிகூறினார்.

எனக்குச் சாதாரணமாகக் கொடுமைக்காரியாக நடிப்பது பிடிக்காது. ஆனாலும் நான் எந்தப் பாத்திரத்தையும் ஏற்று நன்றாக நடிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. யாருக்கும் திறமை இருக்கலாம். ஆனால் அதனால் பிரயோஜனமில்லை. பத்திரிகைகள் தகுந்தபடி தரும் விளம்பரம்தான் யாரையும் வாழ்விக்க முடியும்.


நீங்கள்
கஷ்டப்படுகிறீர்களா?
அந்த நோவைத்தரும் இருமலை
நிச்சயமாக சமிப்பிக்க
உபயோகியுங்கள்
டஸ்ஸனல்
கப் சிறப்
TUSSANOL

PSR
மாடர்ன் தியேட்டர்ஸ்
எங்கள் குலதேவி

மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பான ''எங்கள் குலதேவி'' ஒரு மின்னல் தயாரிப்பு அருமையான கதையைக் கொண்ட இப்படத்தை ஏ. சுப்பாராவ் டைரக்ட் செய்கிருர்.

ஓரியண்டல் மூவீஸ்
பொன்னு விளையும் பூமி



சென்னை-600 008.

M211.N43;P
N59.18.3



89695



ஓரியண்டல் மூவீஸாரின் "பொன்னு விளையும் பூமி" தமிழ்ப் படம் முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. தமிழ் நாட்டின் தலை சிறந்த நடிகர்கள் நடித்து வரும் இப்படத்தை ஏ. பீம்சிங் டைரக்ட் செய்கிறார். ஜெமினி கணேசன் - பத்மினி இருவரும் நூதன பாத்திர மேற்று இதில் நடிக்கிறார்கள்.



ஸ்பைடர் பிலிம்ஸ் "குலமகள் ராதை" படத்தில் கலைஞர்கள்

சென்ற மாதத்தில் ஒருநாள்!

கனவுக்காட்சி போலத் தோன்றியது! வானவெளியில் தன் னிஷ்டப்படி சஞ்சரிக்க ஆரம்பித்து விட்டது எனது ஸ்புட்னிக். பூமியின் சுற்றுப்புறம், காற்றின் வெளிப்புறம், ஆகாயம் என்று நாம் கூறும் வெறும் வெளி இத்தனையும் கடந்து சூரியனின் கதிரியக்க வட்டத்திற்குள் சென்று விட்டது பொல்லாத ஸ்புட்னிக்.

எனக்கோ மூச்சுத் திணறிற்று; காற்றில்லாததால். அது மட்டுமா? ரஷ்யாவும் அமெரிக்காவும் போட்டி போட்டுக் கொண்டு மாறி மாறி விட்ட பல கோளங்கள் அந்த அகண்ட வெளியிலே 'விர் விர்' ரென்று தாறுமாறாகச் சுற்றிக்கொண்டிருந்தன. "இவைகளில் ஏதாவதொன்றின் மீது நமது ஸ்புட்னிக் மோதி விட்டால் என்ன செய்வது?" என்று ஒவ்வொரு இமைப்போதும் திகில் பட்டுக் கொண்டிருந்தேன்.

எனது பயம் தெளிவதற்குள் ஏதோ ஒரு பெரிய கோளத்தின் மீது சென்று குத்திட்டு நின்றது ஸ்புட்னிக். மெதுவாக அதனின்றும் இறங்கிச் சுற்று முற்றும் பார்த்தேன். மனித வாடையே வீசவில்லை. எனது தனிமை என்னையே பயமுறுத்தியது. பசி வேறு கண்ணையும் காதையும் பொத்திவிட்டது. "நல்ல ஸ்புட்னிக்கடா இது?" என்று மனதிற்குள்ளேயே திட்டினேன்.

எங்கிருந்தோ இனிமையான பாட்டின் இசை ஒன்று காற்றில்(?) மிதந்து வந்தது.

''என்றும் இல்லாமல்
ஒன்றும் சொல்லாமல்
இன்பம் உண்டாவதேனோ?''

சபாஷ்! இங்கேகூட இந்த வியாதி தானு? பூவுலகத்தில்தான் காதல் என்ருல் இந்த இடத்திலும் அதே தானு? சரி போய்த்தான் பார்ப்போமே!

நடப்பது கொஞ்சம்கூடக் கஷ்டமாக இருக்கவில்லை. என் உடல் கனமாக இல்லாமல் தண்ணீரில் நீந்துவதுபோல இலகுவாக இருந்தது. சந்திரனில்தான் ஆகர்ஷண சக்தி இல்லை என்று சமீபத்தில் சொன்னுர்கள். இது சந்திர மண்டலம்தானே?

''யாரது?'' ஒரு குரல் என்னைத் தடுத்து நிறுத்தியது.

''செவ்வாய் மண்டலத்து இளவரசியார் ஆடிப்பாடிக் கொண்டிருக்கிருர்கள். அங்கே போகாதே!'' என்ற எச்சரிக்கையும் வந்தது!

ஓகோ, இது செவ்வாய் கிரகமா? படுபொல்லாத கிரகமாயிற்றே...!

''போகட்டும், அந்த இளவரசிக்கு எப்போது எப்படிக் காதல் பிறந்தது?''

''காதலுமில்லை, ஊதலுமில்லை. வாணி சொல்லிக் கொடுத்த பாட்டு இது.''

''யார் அந்த வாணி?''

''அவள்தான் பூவுலகத்திலிருந்து கடத்தி வரப்பட்டவள். அவளை ஆசிரியையாகக் கொண்டு எங்கள் இளவரசி ரஜனி ஆடல் பாடல்களைக் கற்று வருகிருர்கள்!''

''அது எப்படியோ போகட்டும்! எனக்குக் கொஞ்சம் காபி கிடைக்குமா உங்கள் உலகத்தில்?''

''எங்கள் உலகமா? இது பூலோகம்தான் ஸார்! சற்று விழித்துப் பாருங்கள்!'' என்ருர் டைரக்டர் காசிலிங்கம்.

''பையன்! காபி கொண்டு வா, சூடாக. இவர் பூலோகத்துக்கு வரட்டும்''.

ஸ்ரீ லக்ஷ்மி பிக்சர்ஸ் ''வடிவுக்கு வளைகாப்பு'' படத்தில் கலைஞர்கள்

காபி சாப்பிட்ட பிறகுதான் எல்லா விஷயமும் புரிந்தது எனக்கு. சரோடி பிரதர்ஸ் தயாரிக்கும் கலையரசியில் இப்படிப்பட்ட செவ்வாய் மண்டலக் காட்சி யொன்று வருகிறது. ரவீந்தர் கதை-வசனம் எழுதியுள்ள இப்படத்தில் வரும் இப்பாடலை அந்தப் பாவி மனுஷன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதியிருக்கிருர். உம், நினைத்தாலே நெஞ்சு பதறுகிறது. சொல் நயமும் பொருள் நயமும் பொதிந்த அற்புதமான பாடல்களை இயற்றும் அந்த இளம் மேதை - கவிஞன் இந்த உலகத்தையோ வாழ்வையோ சதம் என்று நினைக்காத தத்துவஞானி, வேதாந்தி. ஆமாம் அவனைச் சுமக்க கொஞ்சமும் அருகதையற்றது இந்தச் சண்டாள உலகம்!

அந்தப் பாடல் இயற்றிய ஆசிரியரின் நினைவு வந்ததும் பேனு இப்படித் தடுமாறுகிறது...சரிதான்!

கே. வி. மகாதேவன் இப்பாடலுக்கு இசையமைத்தவர். அதற்கேற்றபடி ஆடிய ரஜனி (ராஜஸ்ரீ) யை ஆட்டுவித்தவர் வி. ஜே. சர்மா. கோவை டி. இ. ஞானமூர்த்தி என்பவர் எழுதியது இக்கதை. இதில் பானுமதி வாணியாக நடிக்கிருர். எம். ஜி. ராமச்சந்திரன், எம். என். நம்பியார் முதலியவர்களும் இப்படத்தில் நடித்து வருகிருர்கள். வாஹினி ஸ்டுடியோவில் நான் கண்ட இக்காட்சி அன்று படமாக்கப்பட்டது.

* * *

அது ஒரு படுக்கை அறை. அந்த அறையிலே ஒரு கட்டில். அந்தக் கட்டிலில் ஒரு ஆடவன் - அவன் பெயர் குலசேகர். தலையணையில் கை யூன்றியபடி அமர்ந்திருந்தான். அந்தக் கட்டிலில் ஏராளமான பூச் சரங்கள் தொங்க விடப்பட்டிருந்தன. பட்டாடையுடுத்திக் கன ஜோராக அந்த இளைஞன் காட்சியளித்தான். அந்த அறையைப் பார்வையிடுபவர்கள் யாவருக்கும் அது இளந்தம்பதிகளின் முதலிரவுக்காகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிந்து விடும். அங்கே ஒரு யுவதி - அவன் மனைவி-நுழைந்தாள். கணவன் மனைவியிடையே

சுதர்சனம் பிக்சர்ஸ் ''அவள் யார்'' படத்தில் டி. ஆர். ராமச்சந்திரன்-மாலினி

காணப்படவேண்டிய அன்பும் பரிவும் காதலும் அவர்களிடம் இல்லை. அவள், அவன் மனைவி என்றாலும் அவனிடம் அவள் யந்திர மனைவியாகத்தான் பழகினாள். அவனால் அவளைப் புரிந்து கொள்ள முடியவில்லை. முதலிரவிலேயே அவன் அவளைப் பார்த்து, மணப்பந்தலில் அவள் சோகப் பிம்பமாயிருந்ததற்குக் காரணம் கேட்டான். அவளால் சரியான பதில் சொல்ல முடியவில்லை.

இந்தக் காட்சி சமீபத்தில் ஆர். ஆர். பிக்சர்ஸாரின் பெயரிடப்படாத படத்திற்காகப் படமாக்கப்பட்டது. குலசேகரராக அசோகனும் மனைவியாக சரோஜா தேவியும் நடித்தனர்.

அதே படத்திற்காக மற்றொரு காட்சியும் படமாக்கப்பட்டது. மனைவியிடம் சந்தேகம் கொண்ட குலசேகர் (அசோகன்) குடிப்பழக்கத்தை மேற்கொள்கிறான். அவன் தம்பி குணசேகர் (எஸ். எஸ். ராஜேந்திரன்) குடிபோதையிலிருந்த அண்ணனைத் தேற்றிக் காரணம் கேட்கிறான். கட்டின மனைவி வேறு யாரையோ விரும்புகிறாள் என்கிறான் குலசேகர். அண்ணன் தம்பிக்குள்ளே நடக்கும் சம்பாஷணைதான் அன்று படமாக்கப்பட்டது. காமிரா நிபுணரான வி. என். ரெட்டி டைரக்ட் செய்யும் இப்படம் விஜயா-வாஹினி ஸ்டுடியோவில் வேகமாக வளர்ந்து வருகிறது.

* * *

கட்டிய கணவன் கைவிட்டு விட்டான்; கையில் ஒரு குழந்தையையும் கொடுத்து விட்டு. அந்த அபலையின் கதி என்ன ஆவது? பிறந்த இடத்தில் அடைக்கலம் புகுந்தாள். பாவம்! அந்த ஏழை என்ன செய்வான்? அரும்பாடுபட்டு அவளையும் குழந்தையையும் காப்பாற்றி வந்தான். பேரக் குழந்தையிடம் அவனுக்கு உயிர். ஆனால் அன்று...''அப்பா குழந்தை என்னமோ போலிருக்கிறதே!'' என்று காட்டினாள் மகள்.

தொட்டிலிலிருந்த குழந்தையைத் தொட்டுப் பார்த்தான். அவ்வளவு

''கலையரசி'' படத்தில் புதுமுகம் ராஜஸ்ரீ - செட்டுக்கு வெளியே

அருணு பிலிம்ஸ் ராதாகிருஷ்ணன் தயாரிக்கும் ''சவுக்கடி சந்திரகாந்தா'' செட்டில் கலைஞர்கள்

தான்; அலறிவிட்டான். அடிவயிற்றைப் பொத்துக்கொண்டு வாய் வழி வெளி வந்த அந்த சோகம் ''அம்மா'' என்று எதிரொலித்தபோது என் மனம் வெடித்து விடும்போல இருந்தது. பெற்றவள் கோவென்று கதறினுள். ''அக்கா, அக்கா'' என்று அழுது துடித்தாள் தங்கை.

உள்ளமுருக்கும் இந்த உணர்ச்சிமயமான கட்டம் பாரகன் பிக்சர்ஸாரின் படத்துக்காக விஜயாவில் படமாக்கப்பட்டது. ஜி. ராமகிருஷ்ணன் டைரக்ட் செய்யும் இதில் அன்றைய காட்சியில் ஜமுனு, இ.வி. சரோஜா, முத்தய்யா ஆகியோர் நடித்தனர். ஜமுனுதான் குழந்தையின் தாய். முத்தய்யா ஜமுனுவின் தகப்பனுராகவும், இ.வி. சரோஜா ஜமுனுவின் தங்கையாகவும் நடித்தனர்.

* * *

விரோதிகளிடமிருந்து தப்புவதற்காக மாற்றுடையில் ஒரு டாக்ஸியில் ஏறினுன் கேப்டன் ரஞ்சன். யாரிடமிருந்து தப்பவேண்டுமென்று முயற்சித்தானே அவர்களிடமே அகப்பட்டுக் கொண்டான். ஏனெனில் அந்த வில்லனும் வில்லியும் கூட அவனைப்போலவே மாற்றுடையிலிருந்து ரஞ்சனை மடக்கினர். டாக்ஸி டிரைவராக உருமாறியிருந்தாள் வில்லி. பிறகு கேட்பானேன்?

இந்தக்காட்சி சென்ற மாதம் கோல்டன் ஸ்டுடியோவில் பயனியர் பிலிம்ஸ் 'கேப்டன் ரஞ்சனுக்'காகப் படமாக்கப்பட்டது. ஜோதி என்ற புதுமுகம் இப்படத்தில் பிரதான வில்லியாக நடிக்கிறுர். டி. பி. சுந்தரம் டைரக்ட் செய்யும் படம் இது.

* * *

அதே ஸ்டுடியோவில் டி. ஆர். ராமச்சந்திரனும் மாலினியும் நடிக்கும் ஆடல்பாடல் காட்சியொன்றும் படமாக்கப் பட்டதைப் பார்த்தேன். காதல் ஜோடிகள் காமிக் பாட்டொன்றிற்கு அபிநயம் பிடித்தனர். இக்காட்சியை - இப்படத்தையே நீங்கள் பார்த்துவிடப் போவதால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

ஹிமாலயா புக்கே டால்கம் பவுடர்



நாள் முழுதும் புதுமலர்ச்சி யுடன் விளங்க

- நறுமண-மோங்குவது
- சிக்கனமிகுந்தது
- குடும்பத்தினர் அனைவருக்கும் உகந்தது

லண்டனிலுள்ள இராஸ்மிக் சார்பாக, ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட்டினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

நினைத்தது ஒன்று...

தேவிகா சொன்னது :

'பாஞ்சாலி' படப்பிடிப்பில் கலந்து கொண்டு விட்டு, சேலத்தி லிருந்து சென்னையை நோக்கி காரில் வந்து கொண்டிருந்தேன். கார் வெகு வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

உளுந்தூர்ப்பேட்டைக்கருகில் வண்டி வந்திருக்கும். திடீரென்று காரின் பின் சக்கர இருசு உடைந்து விட்டது!

கார் நடுத்தெருவிலேயே 'திடுதிப்' பென்று உட்கார்ந்து விட்டது!

என்னுடன் வந்த புரொடக்ஷன் மானேஜரும், கார் டிரைவரும் எவ்வளவோ முயற்சி செய்தும் கார் கிளம்ப மறுத்து விட்டது. அங்கிருந்து சென்னைக்கு வர ரயில் வசதியும் அந்நேரத்தில் இல்லை. ஆனால் நாளை மறு நாள் சென்னையில் ஒரு படப்பிடிப்பில் கலந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது.

எனவே புரொடக்ஷன் மானேஜரும், வண்டியின் டிரைவரும் வேறு ஏதேனும் வாகன வசதிகள் கிடைக்கிறதா என்பதை ஆராயக் கிளம்பினார்கள்.

வண்டியில் நானும் எனது தாயாரும் மட்டுமே இருந்தோம். அப்போது இரவு பனிரெண்டு மணி இருக்கும்.

நானும் அம்மாவும் ஏதோ சில நிமிஷங்கள் வரை பேசிக் கொண்டிருந்தோம். எத்தனை நேரம்தான் பேசுவது?

அடுத்து அங்கே மௌனம் குடிபுகுந்தது.

மௌனத்தைத் தொடர்ந்து, எனது சிந்தனையும் சுழல ஆரம்பித்தது. "ஏன்? ஏன்? ஏன்?" என்று அடுக்கடுக்காக என் உள்ளத்தில் ஓராயிரம் கேள்விகள் எழுந்தன.

'நாம் இப்போது ஏன் இந்த இப்படி நிற்க வேண்டும்? ஏன் படவுலகுக்கு வந்தோம்?' என்றெல்லாம் அக்கேள்விகள் என் சிந்தனையை சுற்றிச் சுற்றி வட்டமிட்டன.

என் மனதில் பழைய எண்ணங்களும் நிகழ்ச்சிகளும் அலை மோதின.

படவுலகில் நுழைய வேண்டும் என்று நான் விரும்பினேனா? கிடையாது!

நடிகையாகி விடுவோம் என்று நினைத்தது உண்டா நான்? அதுவும் இல்லை!

நான் சற்றும் விரும்பாத, ஆனால் எதிர் பார்க்காத ஒரு துறைக்கு வந்து விட்டேன். இது எப்படி நடந்தது?



பள்ளியில் படிக்கும்போது நான் நாடகங்களில் கலந்து கொள்ள விரும்புவதுண்டு. ஆனால் என்னை அறியாமலேயே ஒரு கூச்சம் என்னிடம் இருந்து வந்தது. நடிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருக்கும்; ஆனால் அப்போது அதில் முழுமனதுடன் ஈடுபாடு கொண்டவளா நான் என்றால், 'இல்லை' என்றுதான் சொல்வேன்.

பள்ளியில் என் சகமாணவிகளுடனும் நான் அதிகம் பேசிப் பழக மாட்டேன். 'கம்' மென்று ஏதாவது மூலையில் உட்கார்ந்திருப்பேன். என்னுடைய குணத்தைக் கொண்டுதானோ என்னவோ, எனக்கு கதாநாயகன் வேஷத்தைப் பள்ளி நாடகங்களில் கொடுத்து வந்தார்கள்! இதனால் 'ஹீரோ' என்ற செல்லப் பெயரில்தான் என் சகமாணவிகள் என்னை அழைத்து வந்தார்கள்.

சக மாணவிகள் என்னை 'ஹீரோ' என்று அழைத்தாலும், ஒரு மணப் பெண்ணைப் போலவேதான் மேடையில் நடந்து கொள்வேன். அதாவது தலையைக் குனிந்து கொண்டே மேடையில் வசனத்தைப் பேசிவிட்டு, ஓடோடியும் வந்து விடுவேன்!

பள்ளிக்கூடம் அன்று விடுமுறை. நான் குளித்துவிட்டு அப்போதுதான் வந்திருந்தேன். என் வீட்டின் வெளி முற்றத்தில் என் பாட்டியார் யாருடனோ பேசிக்கொண்டிருந்தார்கள். கதவோரத்தில் மேல் துண்டைப் போர்த்தியபடி நான் எட்டிப் பார்த்தேன்!

வந்தவர்கள் பிருதிவி பிலிம்ஸ் என்ற படக் கம்பெனிக்காரர்கள். அவர்களது படத்தில் என்னை நடிக்க வைப்பதற்காக என் பாட்டியின் அனுமதியைப் பெற வந்திருந்தார்கள்.

காலஞ் சென்ற டைரக்டர் ஆர். பிரகாஷ் எனது உறவினர். அவரது தொடர்பினால் என் பாட்டியாருக்கு படவுலகில் உள்ள நண்பர்கள் சிலரைத் தெரியும். என்னை சினிமாவில் சேர்த்து ஒரு பெரிய நடிகையாக்கி விடவேண்டும் என ஓயாது கனவு கண்டு கொண்டிருந்தார் எனது பாட்டியார். ஆனால் எனக்கோ படிப்பில்தான் நாட்டம் சென்றதே தவிர, படத்தில் நடிக்கவே விருப்பம் ஏற்படவில்லை. ஏன், சினிமாக்கூட நான் அடிக்கடி பார்க்க விரும்பவில்லை. ஆனால் வந்திருந்த பிருதிவி பிலிம்ஸார் என்னைவிட விரும்பவில்லை; பாட்டியாருக்கும் அவர்களை நழுவ விட மனம் வரவில்லை.



என்னிடம் எவ்வளவோ சொல்லிச் சமாதானப்படுத்தி என்னை ஒரு வழியாக அந்தப் படத்தில் நடிக்க இணங்க வைத்தார் என் பாட்டியார். அவர் சொன்ன சமாதானங்கள் என்னை 'சரி' என்று சொல்ல வைத்தன.

பிருதிவி பிலிம்சார் என்னை அழைத்துச் சென்று சில படங்களை எடுத்தார்கள். மற்றபடி அவர்கள் மீண்டும் என் வீட்டிற்குத் திரும்பி வரவே இல்லை! என் பாட்டியை நான் செய்த கோட்டாவிற்கு அளவே கிடையாது.

இது நடந்த சில மாதங்கள் கழித்து கோபாலசாமி என்பவர் எங்கள் வீட்டிற்கு வந்தார். அவர் ஒரு நடன டைரக்டர். எங்கள் பாட்டியாருக்கு நன்கு அறிமுகமானவர்.

'புட்டில்லு' என்ற படத்தில் என்னை நடிக்க வைக்க அவர் மூலம் ஏற்பாடாயிற்று. பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டே, 'புட்டில்லு' படத்தில் நான் நடித்தேன். ஆனால் படப்பிடிப்புக்காக நான் விடுமுறை எடுக்க நேர்ந்தபோது, வேறு பொய்க் காரணத்தைக் கூறியே, லீவு எடுப்பேன். என் நெருங்கிய சிநேகிதிகளுக்குக் கூட நான் படத்தில் நடிக்கிறேன் என்ற விஷயத்தை நான் சொல்லவில்லை.

இதற்கெல்லாம் ஒரே காரணம் அவர்கள் என்னைக் கிண்டல் செய்வார்களோ என்ற பயம்தான்.

'புட்டில்லு' படத்தில் நான் நடித்த சேதியைக் கேள்விப்பட்டு 'பக்க இண்டி அம்மாயி' (இப்போது 'அடுத்த வீட்டுப் பெண்' என்ற பெயரில் தயாராகி இருக்கிறது) என்ற படத்தின் தயாரிப்பாளர்கள் என்னை ஒப்பந்தம் செய்ய வீட்டிற்கு வந்தார்கள்.

கல்கத்தாவில் இந்தப் படத்தை எடுப்பதற்காகத் திட்டமிடப்பட்டிருந்தது. உலகத்திலேயே மூன்றுவது பெரிய பட்டிணம் என்று நான் படித்திருந்த கல்கத்தாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை எனக்கு நீண்ட நாட்களாகவே இருந்தது. தவிர, பள்ளிக்கூடமும் அப்போது கோடை விடுமுறைக்காக மூடப்பட்டிருக்கவே, இந்தப் படத்தில் நடிக்கச் சம்மதித்தேன்.

கல்கத்தாவில் நாங்கள் எல்லோரும் - படத்தில் நடித்த நடிகர்கள், கலைஞர்கள் - ஒரு பெரிய வீட்டில் தங்கியிருந்தோம். படத்தின் டைரக்டரான ஸி. புல்லய்யாவின் மனைவியார்



என்னை சொந்த மகளைப் போலவே கவனித்து வந்தார். படப்பிடிப்பு இல்லாத சமயங்களில் கல்கத்தாவை நாங்கள் காரில் ஏறிக்கொண்டு சுற்றிப் பார்ப்போம், இரண்டே மாதங்கள்தான் அங்கு இருப்போம் என்று நினைத்த எங்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டது. எட்டு மாதங்களுக்கு மேல் தங்கும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இதனால் நான் பள்ளிப் படிப்பைத் தொடர முடியாமற் போய்விட்டது.

கல்கத்தாவிலிருந்து நான் திரும்பி வந்ததும் டைரக்டர் பி. புல்லய்யா என்னைத் தன் படத்தில் நடிக்கவைக்க விரும்பினார். ஸ்டில் சத்யம் என்றோ, எப்போதோ எடுத்த எனது படங்களைப் பார்த்து தன் படமான ரேசுக்காவுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டார் அவர்.

அடுத்து நான் பானுமதியின் 'மணமகன் தேவை'யில் நடித்தேன். என் வாழ்நாளில் நான் மறக்க முடியாத படம் அது. சினிமாவையே வெறுத்த நான் என் அபிமான நடிகையாகக் கொண்டிருந்தது பானுமதியைத் தான்? அவரது படத்தில் அவருடன் நடிக்கும்படியான சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்த தென்றால், எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்?

இந்தப்படத்தில நடிக்கும்போது ஒரு சம்பவம் நடைபெற்றது. ஒரு நாள் பிற்பகல் 'மேக்-அப்' கலைஞர் வரவில்லை. பானுமதி வந்தார். காலையில் போட்டிருந்த 'மேக்-அப்'புடனேயே இருந்தேன். "ஏன் 'மேக்-அப்' புதிதாகப் போட்டுக் கொள்ள

"திரை உலக வாழ்க்கையைப் பற்றிப் பலர் பலவிதமாகக் கனவு கண்டு வருகிறார்கள். மாயாலோகமாகவும் சொப்பன உலகமாகவும் அதைப் பலர் கருதுகிறார்கள். ஆனால் திரை உலக வாழ்க்கை ஊஞ்சல் சவாரி போன்றது. ஊஞ்சல் மேலேயும் போகும். கீழேயும் பாய்ந்து வரும். இது போல் நடிகர்களின் புகழும் உயரும்! இறங்கும்"

—தேவிகா.



வில்லை? ''என்று கேட்டார். 'மேக்-அப்' கலைஞர் வராதது பற்றிச் சொன்னேன்.

சாதாரணமாக பானுமதி யாருடனும் நெருங்கிப் பழகமாட்டார். அப்படிப் பட்டவர் எனக்கு 'மேக்-அப்' போட்டு விட்டார். கூடவே ''தன் கையே தனக்கு உதவி. எப்போதும் நாம் பிறரை எதற்கும் நம்பியிருக்கக் கூடாது! எனக்கு நானேதான் மேக்-அப்' செய்து கொள்வேன்!'' என்று சொன்னார். அன்று சொன்ன அவரது மொழிகள் என் உள்ளத்தில் ஆழப் பதிந்தன. இப்போது நானே ஓரளவு மேக்கப் செய்து கொள்கிறேனென்றால், அது பானுமதி கற்றுக் கொடுத்ததுதான்!

'மணமகன் தேவை'யில் நடித்து வரும்போது பானுமதி என்னை மிகவும் அக்கறையுடன் கவனித்து வந்தார்.

எனக்குப் பிடிக்காதப் படத்தொழிலில் என்னை அறியாமல் ஒரு பிடிப்பும் உற்சாகமும் தானாக ஏற்பட ஆரம்பித்தன.

'மணமக'னில் நடித்து வந்தபோதே 'லலிதாங்கி'க்கு ஒப்பந்தமானேன்.

அடுத்து என்னை கதாநாயகியாக்க 'முதலாளி' படம் வந்தது. முதலில் இதில் வில்லியின் பாத்திரத்தில்தான் ஒப்பந்தமானேன்.

கதாநாயகியாக பத்மினி நடிப்பதாக இருந்தது. ஆனால் பத்மினி ரஷ்யா செல்லவே, கதாநாயகியாக என்னையே மாற்றி விட்டனர்.

ஒரு நாள் என் வீட்டிற்கு வந்து, ''இது கதா நாயகியின் பாடம். இதை தவறாமல் பாடம் செய்யுங்கள்!'' என்று எம். ஏ. வி. பிக்சர்ஸ் நிர்வாகி திடுமெனச்சொன்ன போது நான் ஆச்சரியப்பட்டுப் போய்விட்டேன். என் வாழ்நாளில் நான் மறக்க

முடியாத - எனக்கு வாழ்வளித்த-படம் 'முதலாளி.'

இந்தப் படங்களில் நடித்து வரும் போது சேவாஸ் ஸ்டேஜ் நாடக மன்றத்திலிருந்து அவர்களது நாடகத்தில் நடிக்க அழைப்பு வந்தது. சினிமாவை நான் வெறுத்தது ஒரு பங்கு என்றால், நாடகத்தை வெறுத்தது இரண்டு பங்காகும். தவிர, அப்போது சேவாஸ் குழுவில் சிவாஜி கணேசன், எஸ். வி. சுப்பய்யா போன்ற தலை சிறந்த நடிகர்கள் நடித்து வந்தனர்.

நான் எவ்வளவோ மறுத்தும், ஒரே ஒரு நாடகத்தில்மட்டும் நடித்தால் போதும் என்று சொல்லி என்னை வற்புறுத்தவே, 'வானவில்' என்ற நாடகத்தில் நான் முதன் முதலாக நடித்தேன். பத்தே நாட்கள் தான் எனக்கு இதில் ஒத்திகை தரப்பட்டது. ஒத்திகையின் போது சிவாஜி கணேசன் எனக்கு பலவாறு ஊக்கமளித்தார். அதை என்னால் மறக்க முடியாது. தவறு செய்த இடத்தும் அதைப் பொருட்படுத்தாமல்-என்னை ஊக்குவித்தசேவாஸ் ஸ்டேஜ் அதிபர் எஸ். வி. சஹஸ்ர நாமத்தின் உயரிய பண்பையும் மறக்க முடியாது.

சென்னை அண்ணாமலை மன்றத்தில் நடந்த இந்நாடகத்திற்கு வந்த டி. கே. ஷண்முகம் என் நடிப்பைப் பற்றி வெகுவாகப் பாராட்டினார். பயந்து நடுங்கிய எனக்கு அவரது பாராட்டுரைகள் பெருமையைத் தந்தாலும், "இனி நாடகங்களில் நடிக்கக் கூடாது!" என்ற வைராக்கியத்துடனேயேவீட்டுக்குவந்தேன்.

திருநெல்வேலியில் ஒரு நாடகம் இருக்கிறதென்றும், தட்டாமல் இதில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் சேவாஸ் ஸ்டேஜிலிருந்து அழைப்பு வந்தது.

என் மனம் மறுத்தது; மண்டியிட்டு உட்கார்ந்து விட்டது. ஆனாலும் வெற்றி அவர்களுக்கே கிடைத்தது. எனது தோல்வியை ஒப்புக்கொண்டு திருநெல்வேலி நாடகத்தில் போய் நடித்தேன். இது முடிந்து சென்னை திரும்பிய நான், "நாடகத்தின் பக்கமே திரும்பக்கூடாது"

என்ற திடமான கொள்கையை வகுத்துக் கொண்டாலும். அது நாளடைவில் பிசுபிசுத்து விட்டது.

என்னை அறியாமலேயே நாடகத்திலும் எனக்குப் பிடிப்பு ஏற்பட்டு விட்டது.

இப்போது சினிமாவில் நடிப்பதற்கும் நாடகத்தில் நடிப்பதற்கும் எனக்குள்ள விருப்பம்போல் வேறு எதிலும் இல்லை.

ஆரம்பத்தில் நான் நினைத்தது ஒன்று. இப்போது திரையுலகில் பணியாற்றும் நான் பெரிய நடிகையானதும் பள்ளிக் கூடம் கட்டவேண்டும் தருமம் செய்யவேண்டும் என நினைத்துள்ளேன்.

நல்லவை நினைப்பின் நடந்தே தீரும் அல்லவா?

புகைப்படங்கள் :

ஆனந்தன்

பேசும் படம்

போட்டோ ஆல்பம்

ஏவி. எம். ஸ்டுடியோவில்சமீபமாக "களத்தூர் கண்ணம்மா" என்ற படத்திற்குப் பூஜை போடப்பட்டது. இந்தப் படம் இப்போது மிக வேகமாக வளர்ந்து வருகிறது. ஜெமினி கணேசனும் சாவித்திரியும் பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்தை டி. பிரகாஷ் ராவ் டைரக்ட செய்து வருகிறார். அருமையான கதையமைப்பு கொண்ட இப்படத்தை எம். ஆர். எம். புரொடக்ஷன்ஸார் தயாரிக்கிறார்கள்.

"இனிமே இந்த மாதிரி செய்ய மாட்டியே!" என்று குறும்புத்தனம் சொட்ட அவள் காதைத் திருகி விடுகிறாா இவர்? கமால் சகோதரர்களின் "தெய்வப் பிறவி"யில் பத்மினி – சிவாஜி கணேசன்

“அன்பே, ஆரமுதே! உன்னைத் தொடலாமா?” என்பதுபோல் மிருதுவாகத் தொடுகிறார் இவர்! ஜூபிடர் பிக்சர்ஸ் “எல்லாரும் இந்நாட்டு மன்னர்” படத்தில் ஜெமினி கணேசன் - சரோஜாதேவி





கண்ணிரண்டு கண் நோக்கினால் – அதுவும் இப்படி நோக்கினால் இருவர் உள்ளங்களும் ஒன்றிவிட்டன என்று அர்த்தம்! இவர்கள் காதலுக்குத் தடை போட யாராலும் முடியாதல்லவா—

—உமா பிக்சர்ஸார் ஏராளமான பொருட்செலவில் பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகளுடன் தயாரிக்கும் "சித்தூர் ராணி பத்மினி"யில் சிவாஜி கணேசனும் வைஜயந்திமாலாவும்.

பெண்களுக்குத்தான் இந்த வெட்கம் எங்கிருந்து வந்து விடுகிறதோ? இப்போது இங்கே ஒரு நடனம் இருக்கும்! பி. வி. என். புரொடக்ஷன்ஸாரின் "நாகநந்தினி"யில் நம்பியார் - தேவிகா.

"அம்புட்டுக்கிட்டியா! என்னையா ஏமாத்தப் பாக்கறே?" என்கிறார் இவர்! ஏவி. எம். ஸ்டுடியோவில் ஜி. கே. புரொடக்ஷன்ஸார் தயாரித்து வரும் 'சகோதரி" தமிழ்ப் படத்தில் பிரேம் நசீர்-தேவிகா



"இந்த இன்பம் என்றும் நிலைத்திருக்குமென்று நம்பலாமா?" என்று கேட்கிறுரா அந்த ராஜ குமாரர்? - ஜூபிடர் பிக்சர்ஸ் தயாரிக்கும், 'அமுத வல்லி"யில் டி. ஆர். மகாலிங்கம் - என். லலிதா

தபால் பெட்டி

* நிறைவேறுமா ?

இவ்வாண்டில் வெளிவந்துள்ள "வீரபாண்டிய கட்டபொம்மன்," "கல்யாண பரிசு" இரண்டும் மக்கள் கருத்தை வெகுவாகக் கவர்ந்தவையாகும். நாட்டின் சுதந்திர ஆர்வத்தைப்பற்றியும் வீரவரலாற்றையும் கூறியது கட்டபொம்மன். மனித உள்ளங்களின் உணர்ச்சிப் போராட்டத்தைப் பிரதிபலிக்கும் அற்புத படைப்பு 'கல்யாண பரிசு'. நம் இந்தியப் படங்கள் மேல்நாட்டுக்கு அனுப்பப்படும்போது, தமிழ்ப்படங்கள் ஒதுக்கப்படுகின்றன. இனி எத்தனை காலம்தான் இதைப் பொறுக்க முடியும்? இது பற்றித் தென்னிந்தியநடிகர் சங்கம், பிலிம் வர்த்தக சபை ஆகியவை பெரும் முயற்சி எடுத்துக்கொண்டு இவை போன்ற படங்களை மேல் நாடுகளுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யவேண்டும். இதுவே லக்ஷக் கணக்கான தமிழர்களின் ஆவல்.

ந. நாகமாணிக்கம்,
வேட்டைக்காரன் புதூர்.

** அவசியத் தேவை

தென்னாட்டுத் திரையுலகம் பற்றி அயலாருக்கு எடுத்துக் காட்ட ஒரு ஆங்கிலப் பத்திரிகை தேவை என்று பலர் பல முறை கூறியிருக்கிறார்கள்; கூறியும் வருகிறார்கள். இதற்கு இப்போது அவசியத் தேவை ஏற்பட்டிருக்கிறது; அவசரத் தேவையும் கூட. இங்கிருந்து வெளிவரும் ஆங்கில சினிமாப் பத்திரிகையில் கேள்வி பதில் ஆசிரியர் 'போகஸ்' ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், "தென்னிந்திய நடிகர்கள் நடிப்பது எப்படி என்று கற்றுக் கொள்ள வேண்டும்" என்று எழுதியிருக்கிறார். இந்தியப் படங்கள் முன்னேறாததற்குக் காரணம் வங்கத்தில் நல்ல டெக்னீஷியன்கள் பஞ்சமும், பம்பாயில் திறமை மிக்க நடிகர் பஞ்சமும், தென் திசையிலிருந்து வரும் படங்களில் இரண்டுமே

கலைமகள் பிக்சர்ஸார் தயாரிக்கும் "கனவு பலித்ததம்மா" தமிழ்ப் படத்தில் பேபி இந்திரா.

* முதற் பரிசு ரூ. 15. ** இரண்டாம் பரிசு ரூ. 10

பஞ்சமென்றும் குறிப்பிட்டிருக்கிறார். 'நடிகர் திலகம்' கத்திப்பேசுகிறார் என்று குறிப்பிட்டவர், அவரது சாக்ரடீஸ் நடிப்பைக் கண்டுவிட்டு, 'சாக்ரடீஸ் வந்து விட்டார்' என்றும் புகழ்ந்து எழுதியிருக்கிறார். இத்தனைக்கும் அவர் தமிழ்ப்படங்களைப் பார்த்ததே இல்லையாம். இதையெல்லாம் காணும்போது, நம்மிடம் சரியான ஆங்கிலப் பத்திரிகை இல்லாத குறை பெரிதாகத் தெரிகிறது.

என். ஜெயராம்,
கல்கத்தா.

கச்சா பிலிம் பிரச்னை

மக்களுடைய பொழுதுபோக்காக மட்டுமல்லாது, அறிவூட்டும் சாதனமாகவும் விளங்குகிறது சினிமாக் கலை. இதிலிருந்து அரசாங்கத்திற்குப் பெரும் பகுதி வரிப்பணமாகக் கிடைக்கிறது. சமீபகாலமாக கலைஞர்கள், ஏராளமான நல்ல காரியங்களுக்கு நன்கொடையாக அள்ளி அள்ளிக் கொடுத்து அரசாங்கத்துடன் ஒத்துழைக்கின்றனர். ஆகவே சினிமாத் தொழிலுக்கு உதவவேண்டியது சர்க்கார் கடமையாகும். சென்ற ஆண்டு நடிகர் சங்கத் தீர்மானப்படி கச்சா பிலிம் நெருக்கடியைத் தீர்த்து, சினிமாத் துறையில் ஈடுபட்டுள்ள கலைஞர்களுக்கும் ஆதரவு தந்து இத்துறையை வளர்க்க சர்க்கார் ஆவன செய்ய வேண்டும். ''தனியார் துறைக்கு ஆதரவளித்தால்தான் நாட்டின் உற்பத்தியைப் பெருக்க முடியும்'' என்ற கருத்துக்கு ஒப்ப தனியார் முயற்சியில் நடக்கும் திரைப் படத் தொழிலுக்கு ஆதரவு தந்து இன்னல்களைக் களைந்து வளரவிட வேண்டியது சர்க்காரின் கடமையாகும்.

வா. சு. நடராஜன்,
வாங்கல்.

பழிக்காதீர்கள்

கட்டபொம்மன் நூறுவது நாள் விழாவிற்கு சிவாஜி கணேசன் வந்திருந்தார். ''நடிகனைக் கலைக்

''ஏம்மா! நெசம்மா நான் யாருன்னு தெரிஞ்சா நீ இப்படி ஆடுவியா?'' ஜூபிடரின் ''எல்லாரும் இந்நாட்டு மன்னர்'' படத்தில் ஜெமினி கணேசன்

கண்களோடு பாருங்கள். அவனும் ஒரு மனிதன்'' என்று கூறினார். கண்கள் குளமாயின அதைக் கேட்டு. கட்சிக்கண்ணோடு கலைஞனைப் பார்க்கக் கூடாது. தமிழன் வாழ்வதையே பொறுக்காத நாடாக எப்போது மாறியதோ நம் தமிழகம்? கட்டபொம்மன் வரலாறு பலவிதமாகப் பேசப்படுகிறது இப்போது. இதை ஆதாரமாக வைத்துக் கொண்டு சிவாஜி கணேசனைப் பற்றி அபவாதமான செய்திகளை சில பத்திரிகைகள் வெளியிடுகின்றன. ஒரு சிறந்த நடிகரைப் பழித்து அதன் மூலம் வயிறு வளர்ப்பதை விடப் பிச்சை யெடுக்கலாம். இல்லையெனில் பட்டினி கிடந்து இறக்கலாம். சிவாஜி கணேசனைப்போல் ஒப்பற்ற நடிகர் வேறு எந்த நாட்டிலும் இல்லை. அப்படிப்பட்ட ஒருவரை நம் நாடு-முக்கியமாகத் தமிழகம் நடிகராகப் பெற்றது நம் தமிழகம் செய்த பாக்கியம். அப்படிப்பட்ட உயர்வு கொண்ட கலையரசனுக்குத் தாழ்வு உண்டு பண்ண முயற்சிப்பது கலையையே இழிவுபடுத்துவதாகும். கலைக்காக உயிரைக்கூடத் தியாகம் செய்ய காத்திருக்கும் சிவாஜி கணேசனை - கலைச்செல்வத்தைப் பழிக்காதீர்கள். அவரைப் பழித்தால் கலை அன்னை பொறுக்க மாட்டாள்.

பி. சாந்தகுமாரி,
வேலூர்.

''இதோ இங்கே பார்! நீ யாராயிருந்தால் எனக்கென்ன?'' என்று கேட்கிறாளா இவள்? அதே படத்தில் பி. சரோஜாதேவி

''நான் இப்படித் தோன்று
வது சியாமளாவின் ''சிலம்
புக் குகை'' படத்தில்'' என்கி
ருரா இந்த அழகி? அஞ்சலி
தேவி. இப்படம் இனி தொடர்
ந்து வளர ஆரம்பிக்கும்
என்று நம்பலாம்.

அவர் பெரியவர்

சமீபத்தில் வீனஸ் பிக்சர்ஸ் ''கல்யாண பரிசு'' வெள்ளி விழா விஜயா கார்டனில் கொண்டாடப்பட்டது. நாகய்யாவை குணசித்திர நடிகர் என்று ஸ்ரீதர் குறிப்பிட்டார். நாகய்யா பேசுகையில், ''நான் குணசித்திர நடிகன்'' என்று இளைஞர் ஸ்ரீதர் குறிப்பிட்டார். இருக்கலாம். ஆனுல் அது பத்து ஆண்டுகளுக்கு முன்பு. இப்போது உங்கள் முன் ஒரு குணசித்திர நடிகர் இருக்கிருர். அவர் எந்தப் பாத்திரத்திலும் அற்புதமாக நடிக்கும் தகுதி உள்ளவர். அவர்தான் இந்தியாவின் பெருமையை உயர்த்தக்கூடிய ஒப்பற்ற கலைஞர்'' என்று கூறிவிட்டு, ''இதோ இருக்கும் சிவாஜி கணேசனைத்தான் குறிப்பிடுகிறேன்'' என்ருர். சபையிலே கரகோஷம் வானைப் பிளந்தது. நாகய்யா அனுபவமும் வயதும் முதிர்ந்த உயர்ந்த நடிகர். அவர் சிவாஜி கணேசன் தன்னைவிட உயர்ந்தவர் என்று கூறி மேலும் உயர்வு பெற்று விட்டார். அவர் பண்பு பாராட்டத்தக்கது.

சுஜாதா,
சென்னை.

தனிப்பாதை

சிவாஜி கணேசனைப் போல் நடிக்க இன்று பல நடிகர்கள் முயற்சிக்கிருர்கள். அவர்களுடைய இயல்பான திறமை



வாழ்விலே ஏமாற்றம் கண்
டவனுகத் தோன்றும் இவன்
யார்? அமரா புரொடக்
ஷன்ஸ் 'உத்தமி பெற்ற ரத்
தினம்' படத்தில் பாலாஜி.
இந்தப் படம் விரைவில்
திரைக்கு வரவிருக்கிறது.

"இவர் சிரிப்பிலே குளுமை
யைக் காணுமே!" பி. எஸ்.
வி. பிக்சர்ஸ் தயாரித்து
வரும் பிரம்மாண்ட தயாரிப்
பான 'வீரக்கனல்" படத்தில்
தயாரிப்பாளர் வீரப்பா. இப்
படித் தோன்றுகிருர்.



யும் மங்கி விடுகிறது. கணேச
னைப் போல் நடிக்கவும் முடி
வதில்லை. அவருடையது சிம்
மக் குரல் ஒலி! சுந்தமான
உச்சரிப்பு.உணர்ச்சி நிறைந்த
பேச்சு. பேச்சுக் கேற்ற முக
பாவம்; அங்க அசைவுகள்.
இவைதான் அவரைங் குறு
கிய காலத்திலேயே நடிகர்
களுக்குத் திலகமாக்கி வைத்தன.
அதேபோல மற்ற நடிகர்களும்
தங்களுக்கென தனிப்பாணியை
அமைத்துக்கொள்ளவேண்டும். எம்.
ஜி. ஆர். சண்டைக் காட்சிகளிலும்,
ஜெமினி கணேசன் காதல் காட்சி
களிலும் வீரப்பா, நம்பியார், டி.
கே. ஆர்., வில்லன்களாகவும்
வெற்றி பெறவில்லையா? ஆகவே
கலையில் காப்பி யடிப்பதை நிறுத்தி
தனிப்பட முயற்சித்து வெற்றி
பெறுங்கள் என்று கூற
ஆசைப்படுகிறேன்.

எம்.எஸ். வள்ளிமயில்
சுப்பிரமணியம்,
கூனியூர்.

நம் கடமை

சினிமாத் தொழிலில்
இங்குள்ள வசதிக் குறைவு காரண
மாக பாரதம் அகில உலகிலும் முதல்
ஸ்தானம் பெற முடியவில்லை. ஒவ்
வொரு துறையிலும் நமக்கு குறை
வான வசதிகளே உள்ளன. திருமதி
வைஜயந்திமாலாவுடன் அயல்நாடு
களுக்குச் சென்று திரும்பிய ஒப்
பனையாளர் என். பி. சிவராம் எழுதி
யிருக்கும் டைரியை 'பேசும் பட'த்
தில் படித்தேன். மேல்நாட்டு ஒப்

"அவருக்குப் பணி புரியப்
போய் அவரையே காதலிப்
பது நியாயமா?" என்று
யோசிக்கிருளா இவள்?
டி. ஜி. ஆர். பிக்சர்ஸ்
"இவன் அவனேதான்" படத்
தில் இளம் நடி தேவிகா.

பனை முறையை அறியும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்திருப்பதால் நய படங்களில் ஒப்பனைக் கலை வளர இடமேற்பட்டிருக்கிறது. அவரைப் போல் மற்ற ஒப்பனையாளர்களையும் மேல்நாட்டு முறைகளை அறிந்துவர அனுப்பி வைத்தால் தமிழ்ப் படங்களில் ஒப்பனைக்கலை பன்மடங்கு சிறப்புற்று விளங்கும். தயாரிப்பாளர்களும் சர்க்காரும் இதைத் தங்கள் கடமையாகக் கொள்ள வேண்டும். செய்வார்கள் என்று நம்பலாமா?

நாட்டின் பலதுறைகளில் முன்னேற்றம் இருந்து வரும்போது சினிமாக் கலையின் ஜீவநாடியான ஒப்பனைக் கலை மட்டும் முன்னேற்றமடைவதை நிறுத்தி வைப்பானேன்.

வி. எஸ். வாசன்,
திருச்சி.

இந்தப் பார்வை யாரை என்ன செய்யப்போகிறதோ? சங்கு புரொடக்ஷன்ஸார் வேகமாகத் தயாரித்து வரும் புரொடக்ஷன் நெ. 1-ல் ஜி. சகுந்தலா இப்படி நடிக்கிறார்.

ஒரே கல்; இரண்டு மாங்காய்!

ஐந்தாண்டுத் திட்டங்கள் பூர்த்தியடைவதற்காகச் சர்க்கார் பல வழிகளில் பொது மக்களிடமிருந்து நிதி திரட்டுகிறார்கள். சேமிப்பு பத்திரம் முதல் பல வழிகளிலும் மக்கள் தங்களை அறிந்தும் அறியாமலும் சர்க்காருக்கு உதவி வருகிறார்கள். அந்நியச் செலாவணியைக் குறைக்க இறக்குமதிக் கட்டுப்பாடு விதித்து, மட்டரகமாக இருந்தாலும் சுதேசிச் சரக்கை உபயோகித்தாக வேண்டும் என்ற அவசியத்தைச் சர்க்கார் ஏற்படுத்திவிட்டது. பொதுமக்களின் பொழுது போக்குகளில் வானொலிப் பெட்டி முக்கியமானது. திரைப்பட இசைத் தட்டுக்களைக் கேட்பதற்காக விளம்பரத் தலைவலியையும் பொறுத்துக்கொண்டு இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பைக் கேட்கிறார்கள் ரசிகர்கள். அதே காரியத்தை நம் அரசாங்கம் செய்தால் ரசிகர்களது விருப்பமும் நிறைவேறும்; வருமானமும் கிடைக்கும். இதற்கென்று குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி விடவேண்டும். அரசாங்கம் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்குமா?

கே. ரகுபதி,
கும்பகோணம்.

வரவேற்கிறோம்

பிலிம் இறக்குமதிக் கொள்கையில் இந்திய சர்க்கார் கொஞ்சங் கொஞ்சமாக விட்டுக் கொடுத்து வருவதை வரவேற்கிறோம். அறுபது சத விகிதம் இறக்குமதியை இப்போது அறுபத்தாறு சத விகிதமாக அனுமதித்திருப்பதாகச் செய்திகளில் பார்த்தேன். இந்தியாவில் பிலிம் உற்பத்தி செய்யப்படும் வரை கட்டுப்பாடே கூடாது. இங்கே உற்பத்தி செய்ய ஆரம்பித்து விட்டால் பிறகு படிப்படியாக இறக்குமதியைக் கட்டுப்படுத்தி அடியோடு நிறுத்தியும் விடலாம். நாம் எதை இங்கே தயாரிக்க ஆரம்பித்து விட்டாலும் தேசீய சரக்கை வளர்ப்பது கடமை தான். அரசாங்கம் சிந்தித்து ஆவன செய்யும் என்று நம்புகிறேன்.

டி. ஸ்ரீநிவாசன்,
சென்னை.

Agfa

35mm and 16mm

Raw Cinefilm

for all purposes

AGFA PICTURE NEGATIVE FILMS:
PANKINE K and ULTRARAPID

AGFA SOUND RECORDING FILMS:
Tf 4 and Tf 6

AGFA FINEGRAIN RELEASE POSITIVE FILM

AGFA DUPLICATING NEGATIVE FILM
AGFA DUPLICATING POSITIVE FILM

"AGFACOLOR" Negative Type B, 333 & G, 334
"AGFACOLOR" Positive Type 4, 5 and 7 and
various other types of Cinematograph Rawfilm

For particulars please write to:
The Sole Importers & Distributors:

REGE CINEFILMS PRIVATE LTD.
198, Jamshedji Tata Road, Bombay-1

Branches:
31, Chittaranjan Avenue, Calcutta-13
202, Mount Road, Madras-2

வெட்டுங்கள் / வெட்டுங்கள்

வாழ்க்கை ஒப்பந்தம்

கிருஷ்ணனின் சித்தப்பா சாரங்கன் தவருன கடிதத்தைக் கொடுத்து சேதுப்பிள்ளையின் வீட்டுக்கு கிருஷ்ணனை அனுப்புகிருர். அங்கு அவன் தவருக சமையற்காரனுக அமர்த்தப்படுகிருன். அவன் ருக்மணியைக் கண்டு நேசிப்பதாகக் கனவு காண்கிருன். இந்தக் கனவுக் காட்சியில் நாகேஸ்வரராவும் ஜமுனுவும் ஆங்கில உடை யணிந்து ஆபாசமாக நடனமாடுகிருர்கள். கனவில்கூட ஆங்கில மோகமா? இந்தக் காட்சி நம் பண்புக்கு ஒவ்வாதது. ஆகவே வெட்டி விடவேண்டும்.

சி. முத்துக்குமரன்,
தாம்பரம்.

மரகதம்

கற்பகவல்லியின் அன்புடனும் ஆதரவுடனும் வளர்க்கப்படுகிருள் அலமு. மாணிக்கவல்லிக்கு அலமுவைக் கண்டால் பிடிக்கவில்லை. தந்தையின் கடிதத்தை அலமு எரிக்கும்போது அவள் பார்க்கிருள்! இரவில் நகப்பனுரை வழியனுப்புகிருள். அலமு மாணிக்கவல்லி அங்கே இருக்கிருள்! அலமுவின் அறையில் ஆடவன்குரல் கேட்பதை அவள் கவனிக்கிருள், தூங்காமல்! அரண்மனையில் வேலை பார்க்கும் அவள் அர்த்தமின்றி வருவதற்குச் சரியான விளக்கமில்லை. வெட்டிவிட்டு கற்பகவல்லி சந்தேகிப்பதை வேறுவிதமாகக் காட்டியிருக்கலாம். கற்பகவல்லி மாணிக்கவல்லியை, அலமு விஷயமாக உளவு சொல்லும்படிக் கூறுவதாகக் காட்டியிருக்கலாம்.

வி. கோசன்,
வலம்புரி.

மாணிக்கவல்லி விலோசனையிடம் அலமுபற்றி விசாரிக்கும்போது, "இவளுக்கு அப்பா அம்மா இருக்கிருர்களா?" என்கிருள். அதற்கு விலோசனை 'அப்பா அம்மா இல்லாமெ இவங்க எப்படி வர முடியும்?' என்கிருள். இந்த ஆபாச வசனம் வெட்டப்படவேண்டும். எதிலும் நல்லது இருக்க வேண்டும்.

ஏ. கிருஷ்ணமூர்த்தி,
கல்லிடைக்குறிச்சி.

அவள் அழுவதைக்கண்டு அவர் ஏளனமாகச் சிரிப்பதிலிருந்து அவர் கொடுமைக்காரர் என்று தெரிகிறதல்லவா?- சம்பு பிலிம்ஸ் "பாட்டாளியின் வெற்றி" படத்தில் பாலையா, சாவித்திரி.

ஓடி விளையாடு பாப்பா

ஒரு பாலத்திற்கருகில் இருவர் உட்கார்ந்திருக்கிறார்கள். ரஸ்தாவில் போகிறவர்களிடம், ''ஐயா! என்னுடைய அரை பவுன் மோதிரம் விழுந்து விட்டது'' என்று கூறுகிறார் ஒருவர். மோதிரம் விழுந்து விட்டது என்று தேடாமலிருப்பார்களா? ஹாஸ்யம் என்ற பெயரில் அசட்டுத்தனம் இருக்கிறது. இக்காட்சியை வெட்டி விட்டால் சுவாரஸ்யம் கெடாது.

பொதுமக்கள் எதையும் நம்பி விடும் ஏமாளிகள் என்று நினைப்பவர்கள் தங்களையே ஏமாற்றிக்கொள்கிறவர்கள்தான். நல்ல முறையில் மக்களைச் சிரிக்கச் செய்ய முயற்சிப்பதே சிறந்த ஹாஸ்யமாகும். மற்றவை யாருக்கும் உதவாதவை.

கே. ஆர். நடராஜன்,
தேனி.

மரகதம்

தேசிகர் அரச மரத்தடியில் நாகப் பிரதிஷ்டைக்கு அருகில் அமர்ந்து வருகிறார். அப்போது அங்கு வரும் பட்லர், பூட்ஸ் காலைத் தூக்கி நாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள மேடையில் வைக்கிறான். தெய்வ நம்பிக்கை கொண்டவர்களின் இதயத்தை அப்படியே காலால் துவைப்பது போல் இருக்கும் இக்காட்சியை வெட்டி விடலாம்.

பிரேமா,
சென்னை.

காவேரியின் கணவன்

காவேரிக்கு உடல் நிலை சரியில்லை, காய்ச்சலடிக்கிறது என்று சொல்லுகிறான் வேலையாள். டாக்டர் உடனே மருந்துச் சீட்டை எழுதிக்கொடுத்து மருந்து வாங்கிக் கொடுக்கும்படிச் சொல்கிறார். சர்க்கார் அங்கீகாரம் பெற்ற எந்த டாக்டரும் இம்மாதிரி-உடலைப் பரிசோதிக்காமல் - காய்ச்சலுக்கு மருந்து தரமாட்டார்கள். இந்தக் காட்சி மனதிற்கு சமாதானத்தைத் தருவதாக இல்லை.

கருணாகரம்,
காஞ்சீபுரம்.

தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்

பெப்ஸ்
வில்லைகளை
உட்கொண்
டால், உங்கள்
இருமல் உடனேயே அகலும்

பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து. குணமளிக்கு
ஆவி போன்ற அதன் சத்து வேதனையைக் குறை
க்கவும், தொண்டைப் புண், ப்ராங்கைடிஸ், இ
மல் மற்றும் ஜலதோஷத்திற்கும் காரணமா
கிருமிகளைக் கொல்ல உதவியளிப்பதற்கா
வேலையைச் செய்வதை உணருங்கள், உடன
திவாரணமளிக்க்வும், கிருமிகளை அகற்றவு
பெப்ஸ் உதவி புரிகிறது

பிராங்கைடிஸ்,
தொண்டைப்
புண், மண்டை
நீர், அடைப்பு,
ஜலதோஷம் மற்
றும் இருமலுக்கு
உடனேயே நிவா
ரணமளிக்கிறது.

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும
கிடைக்கும.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்

FPY-55-TAM

சோல் ஏஜெண்டுகள்:

தாதா & கோ.,

86, நைனியப்ப நாயக்கன் தெரு.
சென்னை-3

வீணையின் எந்த நரம்பை மீட்டினாலும் மோன வெள்ளத்தில் ஆழ்த்தும் இனிய கானம் பிறக்கும்; ஆனால் ஆறறிவு படைத்த மனிதப் படைப்பின் நரம்புக் கூட்டங்கள் எழுப்பும் உணர்ச்சி அலைகள் அநேகம் அநேகம்- நீல வானிலே வாரி இறைக்கப் பட்ட விண் மீன்கள் போல. சரவணா பிலிம்ஸ் 'பாகப் பிரிவினை' படம் உணர்ச்சிக்கு அடிமையாக்கப்பட்ட நெக்குருக்கும் பாத்திரங்களைக் கொண்ட இனிய படைப்பு. இதில் வரும் கன்னிப் பெண் காதலிக்கிறாள்; கண்ணீர் வடிக்கிறாள்; வேதனைப் படுகிறாள்; விம்முகிறாள்; விசும்புகிறாள்; சிரிக்கிறாள்; சிந்திக்கிறாள், இன்னும் உணர்ச்சியின் வெவ்வேறு பிரதிபிம்பங்களை வடித்துக் காட்டுகிறாள். அவளைக் காதலிப்பவன் கரம் இழந்தவன். ஆனால் கலங்காதவன். இவர்கள் இருவரும் 'பாகப் பிரிவினை'யின் மூலப் படைப்புகள். இவ்விரண்டு பாத்திரங்களையும் பி. சரோஜாதேவி - சிவாஜி கணேசன் இருவரும் இதில் ஏற்று நடிக்கின்றனர். கண்ணியம் அவனது மூச்சு; கடமை அவனது உடன் பிறந்தது; கட்டுப்பாடு அவனோடு ஒன்றிப் போனது. அவனது அன்பு உள்ளத்தை அலங்கரிக்க ஏற்றதொரு பெண் தெய்வமாக அவன்- வாழ்விலே வந்தாள் அவள். சரவணா பிலிம்ஸார் தமிழ் மக்களுக்குத் தரும் தீபாவளிப் பரிசு இது.



கேள்வி-பதில்

எஸ். சகுந்தலா, கடலூர்

நடிகைகளில் அதிகம் படித்தவர் யார்?

பத்மினி. அவர்தான் இது வரை பல்வேறு மொழிகளில் நூற்றுக்கு மேற்பட்ட படங்களில் நடித்து நிறைய வசனங்களைப் படித்திருக்கிறார்.

சீ. அரங்கநாதன், ஆடுதுறை

'மாகதம்' படத்தில் பத்மினி மேலாடையின்றி வருவதாக விளம்பரப் படங்களில் வந்தன. படத்தில் அவ்வாறில்லையே, ஏன்?

நீங்கள் பார்ப்பதற்கு முன்னால் தணிக்கை அதிகாரியின் கத்திரிக்கோல் இவற்றை பார்த்து விட்டது.

சரோஜாதேவியைப்பற்றி சில வரிகள் ?

அப்போதும் இப்போதும் தன் அம்மாவுடன் தான் படப்பிடிப்புக்கு வருகிறார். முன்பெல்லாம் நேரத்தோடு வந்தவர், இப்போது நேரம் கழித்து வருகிறார் 'ஸெட்'டுக்கு.

எஸ். ஏ. நடராஜன், எமரால்ட்

இந்தியாவிலுள்ள சிறந்த பேச்சாளர்கள் நால்வரைக் குறிப்பிட முடியுமா?

அந்தப் பட்டியலில் தமிழ்ப்பட வுலகைச் சேர்ந்த அறிஞர் அண்ணாந் துரையும் ஒருவராக இருப்பார்.

என். குஞ்சிதபாதம், சிதம்பரம்

'மரகத'த்தில் பாலசந்தர் போல் வேடமிட்டு பத்மினியை சிவாஜி ஏமாற்றுகிறாரே, அப்போது பேசுவது சிவாஜியா, பாலசந்தரா?

சிவாஜிதான் குரலை மாற்றிப் பேசியிருக்கிறார்.

பழனி, மதுரை

நயா ஆத்மி, கைதி, கினாரே கினாரே. சர்ஹத் போன்ற படங்களில் பத்மினி நடித்திருக்கிறாரா? இன்னும் எத்தனை ஹிந்திப் படங்களில் நடித்து வருகிறார் அவர்?

நீங்கள் குறிப்பிட்டுள்ள படங்களில் கைதி என்ற படம் தவிர, மற்றதில் ராகினிதான் நடித்திருக்கிறார். பத்மினி தற்சமயம் சிங்கப்பூர் கல்பனா, ஆஷிக், ஜிஸ் தேஷ்மென்

இவர் வாழ்க்கையையே வெறுத்து விட்டவர் போலத் தோன்றக் காரணம்? மாடர்ன் தியேட்டர்ஸ் "எங்கள் குலதேவி"யில் பாலாஜி.

கங்கா பட்டிஹை என்ற நாளு ஹிந்திப் படங்களில் நடித்து வருகிறார்.

டி. வசந்த் ராவ், சேலம்

திலிப்குமார், நடிகர் திலகத்தைச சந்தித்தால்......?

ஜெமினியில் சந்தித்தார். நடிகர் திலகத்தின் நடிப்பைக்கண்டு வியந்து பாராட்டியிருக்கிறார் மனமார.

கலைப்பித்தன், புதுடெல்லி

'நவஜீவனம்' படத்தில் ஸ்ரீராமுடன் கதாநாயகியாக நடித்தவர் வனஜாவா அல்லது வரலக்ஷ்மியா?

இரண்டாவது 'வ'.

மு. சங்கரபாண்டியன், நல்லூர்

எம். ஜி. ஆர். எடுக்க விருக்கும் 'தூங்காதே தம்பி' படக்கதையை எழுதியிருப்பது யார்?

எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் கதை இலாக்காவினர்.

இன்றைய சமூகத் துரோகிகள்?

உழைக்க மறுப்பவர்கள்.

கண்ணப்பன், நந்தவனம்

எம். ஜி. ஆருக்கு ஆங்கிலம் தெரியுமா?

முறைப்படி அந்த மொழியைக் கற்று வரும் எம். ஜி. ஆர். விரைவிலேயே ஆங்கிலத்தில் பேசினாலும் ஆச்சர்யமில்லை.

ஹிந்தி நடிகர் திலீப்குமாருக்கும் சிவாஜிக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

இருவரும் தங்கள் முதல் படத்தில் ஒல்லியாகத்தான் காட்சி தந்தார்கள்.

ஜெமினி வெளியிடப் போகும் ஹிந்திப் படத்திற்கு 'பைகம்' என்று பெயர் தரப்பட்டிருக்கிறது. இப்பெயரில் ஒரு ஹிந்திப் படம் வந்ததாக நினைவிருக்கிறது. நான் நினைப்பது சரியா?

ஆம், 'பைகம்' என்ற பெயரில் சாதனாபோஸ் நடித்த படம் ஒன்று பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு திரையிடப்பட்டிருக்கிறது.

மேல் நாட்டுப் பட ஸ்தாபனங்களைப் போல புதுமுகங்களைத் தேடிப் பிடிக்க நம்மவர்களும் சிலரை நியமித்தால் என்ன?

புதுமுகங்களைக் கண்டுபிடித்ததும் அவரே 'தயாரிப்பில்' இறங்கி விடுவாரோ என்ற பயம்தான்!

பி. எஸ். ராமசாமி, பனங்காட்டூர்

சந்திரபாபுவை எங்கே காணோமே?

'கவலை இல்லாத மனித'னாக மாறி வருகிறார்.

'நாடோடி மன்னன்' வந்த சமயம் சரோஜாதேவியை கொடுந்தமிழ் பேசுகிறவர் என்று சொன்னீர்கள். 'கல்யாணப் பரிசு' பார்த்த பிறகு என்ன சொல்கிறீர்கள்?

முடிவடைவதற்கு முன்னால் அந்தப் படத்தைப் பார்த்தபோதே 'நக்ஷத்திர ஸ்தானத்தை இதன் மூலம் சரோஜாதேவி அடைந்து விடுவார்' என்று எழுதியிருந்தோமே. அதிலேயே அடங்கிவிட வில்லையா இவையெல்லாம்?



பூஜை முடிந்து புஷ்பத்தட்டுடன் இந்தப் புனிதவதி எங்கே கிளம்பி விட்டாள்? இசைமணி பிலிம்ஸ் "கடவுள் எங்கே?" படத்தில் பண்டரிபாய்.

கனக. சுப்பிரமணியம், சென்னை

பாரதிதாசனுக்கு அடுத்தபடியாக பாடல்கள் புனைவதில் சிறந்தவர் பட்டுக்கோட்டை என்று சொல்லியிருக்கிறீர்கள். கண்ணதாசனை ஏன் சொல்லியிருக்கக் கூடாது?

பட்டுக்கோட்டையின் பாடலில் புதுமை மலிந்து வருவதால்.

டி. எஸ். சுகவனம், சேலம்

ஹிந்தி நடிகைகளில் சிலர் விளம்பரப் படங்களில் நடிக்காத போது, நமது நடிகைகள் மட்டும் ஏன் நடிக்கிறார்கள்?

ஹிந்தி நடிகைகள் மட்டும்தான் பெரும்பாலும் விளம்பரப் படங்களில் நடிக்கிறார்கள். அவற்றை நீங்கள் பார்த்ததில்லை என்று நினைக்கிறேன்.

டைரக்டர் சத்யன்போஸ் ஹிந்திப்பட டைரக்டரா? வங்கப்பட டைரக்டரா?

ஹிந்திப் படங்களை டைரக்ட் செய்து வரும் வங்கப்பட டைரக்டர்.

கோ. ப. வேலு, புதுச்சத்திரம்

மரகதத்தில் நீதிபதியாக வருபவர் யார்?

அவர் ஒரு வெள்ளையர். நாயுடுவின் நெருங்கிய நண்பர்.

கிருஷ்ணவேணி, பத்மினி சத்தியமங்கலம்

இப்போது வரும் பெரும்பான்மையான படங்கள் தோல்வி அடையக் காரணம் என்ன?

அடுத்தடுத்து வரும் படங்களுக்கு தியேட்டரைக் காலி செய்து கொடுக்க!

கோ. நாராயணன், சென்னை

'கல்யாணப் பரிசு' என்பதற்குப் பதிலாக, கல்யாண பரிசு என்று 'ப்'பை விட்டுவிட்டு வீனஸ் பிக்சர்ஸார் விளம்பரப்படுத்தியிருக்கிறார்களே, இதைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

வீனஸ் பிக்சர்ஸார் ஜோதிடத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். பெயரில் வரும் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் கொண்டு படத்தின் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பவர்கள். அதனால்தான் 'ப்'பை விட்டுவிட்டார்கள். தமிழ் தெரிந்த டைரக்டர் ஸ்ரீதருக்கு இலக்கணப்படி, இப்படியிருப்பது தவறு என்பது தெரியும்.

ஹிந்திப் படத்தை இழுக்காக தமிழ் நடிகர்கள் பேசுகிறார்களே, அப்படியிருக்க தமிழ்ப்படத் தயாரிப்பாளர்கள் ஏன் ஹிந்தி மெட்டுக்களை காப்பியடிக்கச் சொல்கிறார்கள்?

நம் தயாரிப்பாளர்கள் பரோபகார சிந்தை மிக்கவர்கள். இப்படி ஹிந்தி மெட்டுக்களைக் காப்பியடிக்கச் செய்தால்தானே, வட இந்தியர்களும் நம்மைப் பற்ற இழுக்காகப் பேச சந்தர்ப்பம் கிடைக்கும்!

எம். ஏ. வி. பிக்சர்ஸார் தயாரித்து வரும் 'சிவகாமி' தமிழ்ப் படத்தில் இந்த நடன ஜோடியைப் பார்க்கலாம். இப்படம் விரைவில் திரைக்கு வரும்.

தனபால், திருச்சி

உங்கள் இதழில் வெளிவந்த மரகதம் திரைக்கதை, வசனத்தில் எஸ். பாலசந்தரின் பெயர் அனந்தரர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் படத்தில் அவர் பெயர் மாரமார்த்தாண்டன் என உள்ளது. விளக்குவீர்களா?

மாரமார்த்தாண்டன், கருங்குயிலை விட்டுத் தப்பிச் சென்று இலங்கைக்குக் குடி பெயர்ந்தபோது, பெயரும் அனந்தரர் என மாறிவிட்டதை நீங்கள் கவனிக்கவில்லையா? பாலசந்தர் மாரமார்த்தாண்டனாக உலவியதை விட, அனந்தரராக திரையில் வந்து நடமாடியதுதான் அதிகம்.

மோகனும்பாள், திருச்சி

நானும் எனது தம்பியும் சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், தங்கவேலு, பத்மினி இவர்களை அவர்கள் வீட்டில் போய் சந்தித்து போட்டோ எடுத்துக் கொள்ள விரும்புகிறோம். அவர்கள் சம்மதிப்பார்களா?

முன்கூட்டியே நீங்கள் அவர்களுக்கு கடிதம் எழுதி இதைத் தெரிவித்துச் சென்றால், ஒருக்கால் நடக்கும் என நினைக்கிறேன்.

இரா. ரங்கராஜன், மிஞ்சூர்

பல படங்களில் என். டி. ராமராவுக்கு இரவல் குரல் கொடுத்த கே. வி. ஸ்ரீநிவாசனும் 'கண் திறந்தது' டைரக்டர் கே. வி. ஸ்ரீநிவாசனும் ஒருவரா?

வெவ்வேறு நபர். முன்னவர் வசனத்தைக் கொடுத்தால் வாயசைப்பார். பின்னவர் வெற்றிலைப் பாக்கப் போட்டு வாயசைத்து, வசனமெழுதுபவர்!



''தம்பி! நம்ப குதிரை கிளம்பின அடங்காது தெரியுமா?'' சரவணா பிலிம்ஸின் அற்புத படமான பாகப் பிரிவினை''யில் சிவாஜி கணேசன்.

சல்லமுத்து, கோவை

எம். ஜி. ஆர். நடித்த நாடோடி மன்னனுக்கும், சிவாஜி நடித்த உத்தம புத்திரனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ஒரு 'முகமூடி'தான்!

கலைக்காவலன், மரக்காணம்

கலைஞனின் கண்ணீரை எதற்கு ஒப்பிடலாம்?

திறமைக்கு தராத பரிசாக!

கண்விடும் கண்ணீருக்கும், கடல் நீருக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

முன்னது பொங்கி எழுந்தால் உள்ளத்தில் சூறுவளி; பின்னது பொங்கி எழுந்தால் நிலத்தில் சூறுவளி.

கற்பனை - கனவு - நினைவு மூன்றுக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன?

நடக்காத ஒன்றைப்பற்றி விழித்துக் கொண்டு சிந்திப்பது கற்பனை; இமைகள் மூட உறக்கத்தில் அதைக் காண்பது கனவு; நடந்து விட்டால் அது நினைவு.

ரமணி, சிதம்பரம்

நான் என் அருகில் உள்ள வீட்டார் ஒருவரை நேசிக்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

கிறிஸ்துவின் தத்துவம் இதுதான். அருகிலிருப்பவரை நேசி' என்று தானே அவரும் சொல்லியிருக்கிறார்!

'பேசும் பட'த்தைப் படிக்கக்கூடிய சிறந்த நேரம் எது?

நீங்கள் பள்ளி மாணவராக இருந்தால் விடுமுறை நாட்களில்; மணமானவராக இருந்தால் இரவு நேரங்களில்; காரியாலயத்தில் வேலைப் பார்ப்பவரானால் இடைவேளையில்.

கே. ஏ. ராம்நாத், ஈரோடு

ஒரே சங்கீத டைரக்டரை பல படங்களுக்கு அமர்த்துவதனால் படாதிபதிகள் கண்ட பலன் என்ன?

கேட்ட மெட்டையே கேட்கலாம் திரும்ப.

பி. எஸ். கருப்பய்யா, இலங்கை

'ஜிம்போ' சித்ராவைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

அழகிய தோற்றம் கொண்டவர்; தன் திறமையை இன்னும் பூரணமாகக் காட்டாதவர்.

இலங்கையில் உருவாகும் படங்களைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

நான் ஒரு படத்தையும் பார்த்ததில்லை. எனவே எப்படி அபிப்பிராயம் சொல்வது?

N59.183

எஸ். ஸ்டேன்லி துரைராஜ், சாந்திபுரம்

கல்யாணப் பரிசாக ஏற்றுக் கொண்ட பலராமனின் மகன் பாபுவை, நிஜப் பரிசாக ஏற்பாரா ஜெமினி?

கதையையே தவருகப் புரிந்து கொண்டிருக்கிறீர்களே. கல்யாணப் பரிசாக பாபுவைக் கொடுத்தவர் ஜெமினிதானே?

சிந்தனைச் சிற்பி, கற்பனைக் கலைஞன் இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

முன்னது ஒருவரது பெயரின் முன் ஏற்கனவே பட்டமாக ஒட்டிக் கொண்டு விட்டது. பின்னது 'பட்டமாக'க் காத்திருக்கிறது!

எஸ். தாமஸ், மதுரை

அண்மைக் காட்சிகளில் நடிகைகளை மட்டும் அதிகம் காட்டுவதேன்?

முகப் பருக்களை எண்ணிக் கொள்வதற்காக!

உண்மையான நண்பன் எப்படி இருப்பான்?

'உங்கள் நண்ப'னைப் போல இருப்பார்!

89695

ஸ்ரீ கணேஷ் மூவிடோன் தயாரிக்கும் "வைஜயந்திமாலா"வில் சாந்தி.

கோவிந்தன், சென்னூர்

வருங்கால அங்கமுத்துவாக உடலை வளர்த்து வருகிருரா சாவித்திரி?

பேச்சிலும் கூடவே ஹாஸ்யத்தை வளர்த்து வருகிருர்.

கே. கே. ராஜா, கமுதி

கல்யாணப் பரிசில் வரும் வசந்தியை ஒழுக்கம் உள்ள ஒரு பாரதப் பெண் என்று கூறலாமா?

தேவதாஸ் படத்தில் வரும் பார்வதியை நாம் ஏற்றுக் கொள்ளும் போது வசந்தியை நிச்சயமாக ஏற்றுக் கொள்ளலாம். வசந்தி தான் காதலித்தவனை தன் சகோதரிக்காக தியாகம் செய்வதோடு, தன்னை மனத்தாலும் நினைக்கக்கூடாது என்று தன் மாஜி காதலனுக்கு ஆணையிடுகிருள். தன் காதலனுக்கு தன்னை மனதார மறந்து விடும்படி உபதேசிக்கும் வசந்தி, அவனைப்பற்றி நினைத்திருப்பாள் எதிர்காலத்தில் என்று எண்ணுவது அபத்தம். தவிர, காதலைத் தியாகம் செய்த அவள் வாழ்க்கையில் வெறுத்துப் போய் ரகுவை மணக்கவில்லை. பண்புள்ள பெண்ணுக்கு ஒரு ஆண் தேவை என்பதை உணர்ந்த வசந்தி, தன்னை இறுதியாகச் சந்திக்க வந்த பாஸ்கரை, ரகு கூவி அழைக்க வந்தபோது, வாயடைத்துத் தடுத்து, அவனை வெளியேற்றி தன் இதயத்தின் கதவுகளையும் அடைத்து விட்டதை எடுத்துக் காட்டுகிருள். வசந்தி ஒரு பண்புள்ள பெண் என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் என்ன வேண்டும்?

சரவணவேலு, திருவள்ளூர்

தயாரிப்பாளருக்கு திருப்தி தரு[ம்] வகையில் ஒரு படத்தை எடுப்ப[து] கடினமா? அல்லது ரசிகர்களுக்கு திருப்தி தரும் வகையில் படத்தை உ[ரு]வாக்குவது கடினமா?

இருவரையும் திருப்தி படுத்து[ம்] வகையில் படத்தை எடுப்பதுதான் கடினமானது.

நடிகர்கள் நக்ஷத்திரமாவது எ[ப்] போது?

தயாரிப்பாளர்களின் கார் நடிக[ர்]களின் வீட்டு வாசலுக்கு வரு[ம்] போது.